# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. } விரோதிகிருதுஹு அர்ப்பசிமீ — OCTOBER 1911. { ஸஞ்சிகை 10. No. 10.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... ... | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page ... | 5 0 0 | per month. |
| ½ do ... | 2 8 0 | do |
| ¼ do ... | 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ராஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு .. | 4 0 0 | .. | 6 0 0 |
| தனிப்பிரதி .. | 0 6 0 | .. | 0 8 0 |
| மாதிரி காபி .. | 0 2 0 | .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

# பிழைக்கும் வழி.
# PRACTICAL LIFE.

புஸ்தகம் 3 | Vol. 3. — விரோதிகிருது௵ அர்ப்பசி௴—OCTOBER 1911. — ஸஞ்சிகை 10. | No. 10.


## பொருளடக்கம்.


**பத்திராதிபர் குறிப்புகள்** — பக்கம்

ஒரு மரம் அரக்கும் ஆலை-எள்ளு-கரும்பு—பசுக்களுக்குக் கொழுத்த ஆகாரம்-சாராயம் சேர்த்து போஷிக்கப்பட்ட கோழிகள்-பல்குச்சி நல்லதா—கிட்டின பந்துக்களுக்குள் கல்யாணம்-இந்தியாவில் கம்பெனிகள்—வௌவால்த் தொந்தரவு-மதராஸ்ஸம்ஸ்க்ருதகாலேஜ்-ஸ்நாநம் செய்தல் .. 507-512

**விசேஷ வியாஸங்கள்**

செட்டாய்க் குடித்தனம் செய்தல்
—வி. கே. ராமாநுஜாசாரி .. 513

முகஜாடை.
—பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார் .. 515

கொத்தவரை
—என். வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் 518

மூலாதாரப் படிப்பு
—எஸ். வென்கோபாசாரியார் லெக்சர் 521

கோழி வளர்த்தல்
—ஜோதிமணி .. .. 524

அகல்யாபாய் .. .. 525

**விசேஷத்திரட்டு**

ஸுகாதாரத்தைப்பற்றி வினாவிடைகள் 529

நான் படும்பாடு .. .. 535

**பத்திரிகை ஆராய்ச்சி**

மூங்கிலும் அதன் உபயோகமும் .. 537

எறும்புகள் .. .. .. 538

ஒரு புது தினுசு நெல் .. .. 538

கால்நடை இன்ஷ்யூரென்ஸ் ஸொஸைடிகள் .. .. .. 539

வெள்ளைப்பூ பூக்கும் இலவைமரம் .. 540

அன்னாசிப்பழ முரபா .. .. 540

**சிறுவர் பகுதி** .. .. .. 541–542

**ஸ்திரீகள் பகுதி** .. .. 543–544

**பகுதிக் குறிப்புகள்**

விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—வினோதங்கள் .. 545–554

**மாஸ வர்த்தமானம்** .. .. 555–559

**மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.** .. 560


## CONTENTS.


**Editorial Notes** — PAGE

A SAW MILL-SESAMUM GROUND NUT-SUGAR CANE-CONCENTRATED FEEDINGS STUFFS FOR COWS-WINE FED FOWLS-IS THE TOOTH BRUSH SANITARY-INTERMARRIAGE OF RELATIONS-COMPANIES IN INDIA-THE MADRAS SANSKRIT COLLEGE-THE BAT NUISANCE BATHING ... 507-512

**Special Articles**

LIVING WITHIN MEANS
Rao Bahadur V. K. Ramanuja chariar B. A ... 513

EXPRESSION OF THE EMOTIONS
P. T Srinivasa Aiyangar M. A, F. M U. ... 515

KOTHAVARAI
N. V. Subramania Sastrial ... ... 518

PRIMARY EDUCATION
MR. S. Venkoba Chariar's Lecture ... 521

POULTRY BREEDING
Jotimani ... ... ... ... 524

AHALYA BAI ... ... ... ... 525

**Selections**

A CATECHISM ON SANITATION
C. T. H, Johnson, I. C. S. ... ... 529

THE WOES I SUFFER FROM ... ... ... 535

**Review of the Press**

The Bamboo and its uses ... ... 537

Ants .. ... ... ... ... 538

A new kind of Paddy ... ... ... 538

Cattle Insurance Societies ... ... 539

White Silk Cotton tree ... ... ... 540

Pineapple Jam ... ... ... ... 540

**The Boys' Section** ... ... ... .. 541-542

**The Ladies' Section** ... ... ... ... 543-544

**Departmental Notes**

Agricultural Notes ... ... ... ... 545
Industrial Notes ... ... ... ... 547
Educational Notes ... ... ... ... 548
Scientific Notes ... ... ... ... 549
Medical Notes ... ... ... ... 550
Legal Notes ... ... ... ... 551
Personal Notes ... ... ... ... 552
Fun and Anecdote ... ... ... ... 553
Curiosities ... ... ... ... 554

**News of the Month** ... .. ... ... 555-559

**Madras Market Reports** ... ... ... 560

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்

### A Saw Mill.

ஒரு மரம் அறுக்கும் ஆலை.—மதுரையில் எஸ். ஏ. வெங்கடகிருஷ்ணய்யர் அண்ட் ஸன்ஸ் கம்பெனியார் மதுரைமேலச் சந்தைப் பேட்டையில் அவர்களுடைய மரத்தொட்டியில் ஒரு மரம் அறுக்கும் யந்திரம் ஸ்தாபித்திருக்கிறார்கள். தென் ஜில்லாக்களில் இதுத்தான் முதல் முதல் யந்திரத்தைக்கொண்டு மர வேலை செய்யும் சாலையாகும்.

### Sesamum.

எள்ளு.—சென்னை ராஜதானியிலுள்ள ரயத்வாரிகிராமங்களில் சென்ற ஸெப்டம்பர் மாஸம் முடிய, எள்ளு ஸாகுபடி செய்த நிலங்களின் விஸ்தீர்ணம் 3,04,300, ஏகரா. அதாவது போனவருஷம் அதே மாஸம்வரையில் ஸாகுபடியான நிலங்களில் 100-க்கு 10 பங்கு கம்மி. ரத்யவாரியைத்தவிர, இதர கிராமங்களில் ஸாகுபடிசெய்த நிலங்களின் விஸ்தீரணம் 34,800 ஏகரா. இது போனவருஷத்தை விட 3400 ஏகரா கம்மி. மொத்தத்தில் பயிர் நன்றாக இருக்கிறதாம்.

### Ground nut.

மணிலாக்கொட்டை.—மதராஸ் ராஜதானி ரயத்வாரி கிராமங்களில் போன செப்டம்பர் ஸ்ரீ முடிய, மணிலாக்கொட்டை ஸாகுபடி செய்த நிலங்களின் விஸ்தீரணம் 561,000 ஏகரா. அதாவது போன வருஷத்தை விட இந்தவருஷம் 100க்கு, 8 பங்கு ஜாஸ்தி. ரயத்வாரியில்லாத, இதர கிராமங்களில் ஸாகுபடியான நிலங்களின் விஸ்தீரணம் 10,900 ஏகரா. பயிர் நன்றாயிருக்கிறதாம்.

### Sugar cane.

கரும்பு —சென்னை ராஜதானியிலுள்ள ரயத்வாரி கிராமங்களில் போன செப்டம்பர் ஸ்ரீ முடிய கரும்பு பயிராக்கப்பட்ட நிலங்களின் விஸ்தீரணம் 48,100 ஏகரா. இது போன வருஷத்தை விட 6,600 ஏகரா ஜாஸ்தி. ரயத்வாரியல்லாத மற்ற கிராமங்களில் ஸாகுபடியான நிலங்களின் விஸ்தீரணம் 1700. போன வருஷம் 2500 ஏகரா நிலங்கள் ஸாகுபடியாயின. ஸாகுபடியாயிருக்கும் கரும்பு நன்றாயிருக்கிறதென்று தெரியவருகிறது.

### Concentrated Feeding Stuffs for Cows.

பசுக்களுக்குக் கொழுத்த ஆகாரம்.—பசுக்கள் நன்றாய்க் கறக்க வேண்டுமென்றும் வெண்ணெய் எடுக்கவேண்டுமென்று எண்ணி விவஸாயிகள் பிண்ணாக்கு முதலிய கொழுத்த ஆகாரங்களை மாடுகளுக்குத் தீனியாகவைக்கிறார்கள். ஆனால் தற்காலத்தில் சிலர் இப்படிச் செய்வது பிசகென்றும் பிண்ணாக்கு முதலிய கொழுத்த தீனிபோடுவதால் பாலும் வெண்ணெயும் அதிகமாகக் காணுமானாலும் சும்மாப்போட்டுக்கொண்டே போனால் தக்கபடி பலன் கிடைக்காதென்றும் சொல்லுகிறார்கள். இது விஷயமாய் இங்கிலாந்தில் ஸஸ்ஸெக்ஸ், கென்ட், ஸர்ரே முதலிய ஜில்லாக்களில் செய்து பார்த்த பரீட்சைகளில் பிண்ணாக்கு முதலிய புஷ்டியான தீனியை மிதமிஞ்சிப் போடுவது தக்கபடி லாபம் கொடுக்காதென்று ஏற்படுகிறது.

### Wine fed fowls.

சாராயம் சேர்த்து போஷிக்கப்பட்ட கோழிகள்.—மான்ஷர் ஜூபேர் என்பவர் ப்ரான்ஸ் தேசத்தில் பான்டென்ப்ளு என்னும் ஊரில் விவஸாய காலேஜில் ப்ரொபஸர். இவர் ஒரே ஜாதியான பன்னிரண்டு கோழிகளைப் பொறுக்கி, ஆகிய ஆறு ஜோடிகளில் ஒன்றிற்கு மட்டும் ஸாதாரணமாய்ப் போடும் ஆகாரத்தோடு

சாராயத்தில் நனைத்த ரொட்டித்துண்டைக்கூட சேர்த்துப்போட்டார். இப்படி மழைகாலத்தில் நாலு மாஸத்தில் மட்டும் பல வருஷங்களுக்குச் செய்து பார்த்தார். இப்படி செய்து பார்த்ததில் சாராயம் சேர்ந்த ஒவ்வொரு கோழியும் மற்றவைகளைப் பார்க்கிலும் ஜாஸ்தியாகவே ஸுமார் 20 விதம் முட்டைகளிட்டனவாம். முட்டை வியாபாரத்துக்காக கோழி வளர்ப்பவர்கள் செய்து பார்க்கலாம்.

**Is the Tooth Brush Sanitary?**

பல்குச்சி நல்லதா?—பல் தேய்ப்பதில் நாகரிகமுள்ளவர்கள் குச்சிகளை விசேஷமாய் உபயோகப்படுத்துகிறார்கள். கிராமந்தரங்களில் உள்ளவர்கள் அப்பப்போ ஆலம்விழுதையோ வேப்பம் குச்சியையோ ஒடித்துத் தேய்த்து விட்டு தேய்த்த குச்சியை எறிந்து விடுகிறார்கள். பட்டண வாஸங்களிலுள்ளவர்கள் தந்தம் முதலிய பிடிகளுள்ள குச்சிகளை வாங்கி வைத்துக்கொண்டு பல்களை விளக்கி விட்டு, குச்சியை அலம்பிவைத்து, மறுபடியும் அதையே மறுநாள் உபயோகிக்கிறார்கள். என்ன அலம்பிவைத்தாலும் குச்சியில் பாக்டீரியா அதாவது விஷக்கிருமிகள் ஒட்டிக்கொண்டு வியாதிகளை உண்டாக்குமென்று டாக்டர் கார்மல் ஜோன்ஸ் என்பவர் சொல்லுகிறார். இப்படிச் சொல்வது வாஸ்தவமாயிருக்கலாம். ஆனால் காலையில் எழுந்திருந்ததும் ஒருவன் வாயில் ஸாதாரணமாய் 300 கோடி பாக்டீரியாக்கள் இருக்கின்றனவாம். ஒரு நல்ல பல் குச்சியைப் போட்டு பல்லை விளக்கினால் ஸுமார் 75 கோடி பாக்டீரியாக்கள் ஒழியும். வேறொருதடவை ஒருபல்பொடியையும் பல்குச்சியையும் உபயோகித்து பல் தேய்த்தபோது 12 கோடி பாக்டீரியாக்கள் தான் வாயில்தங்கி இருந்தனவாம். இப்படிக்கு பல்தேய்த்தும் வாயில் ஏராளமான பாக்டீரியாக்கள் இருப்பதால், பல் குச்சியில் ஒட்டிக்கொண்டிருக்கும் பாக்டீரியாக்கள் ஸ்வல்பந்தானென்று சொல்லவேண்டும். தவிர, பல் குச்சிகள் தினம் ஒருதடவை தான் நம்முடைய தேசத்தில் உபயோகப்படுகின்றன. நாள் முழுவதும் அவைகள் காய்ந்து உலர்ந்து போகும். அதனால் அந்தக் குச்சிகளிலுள்ள பாக்டீரியாக்களில் அனேகம் இறந்துபோகும். ஆகவே ஒரே பல்குச்சியை உபயோகித்தால் ஸுகாதாரத்துக்குக்கேடு ஒன்றுமில்லை என்று எண்ணலாம்.

**Intermarriage of Relations.**

கிட்டின பந்துக்களுக்குள் கலியாணம்.—அனேகமாய் எல்லா ஜாதியார்களுக்குள்ளும் கிட்டின பந்துக்கள் ஒருவரோடு ஒருவர் கலியாணம் செய்துகொள்ளக் கூடாதென்று ஆசாரத்தில் அனுஸரித்து வருகிறார்கள். ஆனால் நம்மவர்களுக்குள் அக்காள் பெண்ணை தம்பி கலியாணம் செய்துகொள்வதும் அத்தான் அம்மாஞ்சிகள் அம்மங்காள் அத்தங்காள்களை கலியாணம் செய்துகொள்வதும் வழக்கத்தில் நடந்து வருகின்றன. இப்படிச் செய்துகொள்வது நல்லதா கெட்டதா என்பதை விசாரிப்போம்.

ஒரே வயிற்றில் பிறந்த பெண்களும் பிள்ளைகளும் அல்லது அண்ணன் தம்பி குழந்தைகளும் ஒருவரோடு ஒருவர் கலியாணம் செய்துகொள்ள நாகரிகமுள்ள ஜனங்கள் கட்டோடு ஸம்மதிப்பதில்லை. இதற்கு மனதுதான் முக்கியகாரணம். கிட்டின பந்துக்கள் கலியாணம் செய்துகொண்டால் ஸந்ததி உண்டாவதில்லை என்றும், ஊமை, செவிடு, பைத்தியம் முதலிய குறைகளுள்ள குழந்தைகள் பிறக்குமென்றும் சொல்வதுண்டு. கிட்டின பந்துக்களாய்க் கலியாணம் செய்துகொண்ட 883 தம்பதிகளுக்குப் பிறந்த 4013 குழந்தைகளில் நூற்றுக்கு 61 விதம் ஏதாவது ஒரு குறையுள்ள குழந்தைகளாயிருந்தனவாம். ஆனால்

கலியாணம் செய்துகொள்ள உத்தேசிக்கும் கிட்டின பந்துக்களின் முன்னோர்களுடைய குடும்பத்தில் தலைமுறை தத்வமாய் வரும் ஏதாவது வியாதி, முதலிய குற்றங்கள் இருந்தாலொழிய, அவர்கள் கலியாணம் செய்து கொள்வதில் ஆக்ஷேபணை இல்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். இது விஷயமாய் மோயன் காஸ் என்னும் ஒரு சாஸ்திரி ஒரு ஆராய்ச்சி செய்திருக்கிறார்.

பூச்சிகள் அற்ப வயதுள்ளவைகள். ஆகையால் அவைகளில் ஒரு ஆண்பெண்ணை எடுத்து ஸந்ததி உண்டாக்கி, 75 தலைமுறைகளை உண்டாக்கினார். ஒவ்வொரு தலைமுறையிலும் ஒரே வயிற்றில் பிறந்த ஆணையும் பெண்ணையும் சேர்த்தும் உண்டான ஸந்ததிகளுக்குயாதொரு குறையும் ஏற்படவில்லையாம். ஸந்ததிகள் வலிமையிலாவது ஸந்ததி உண்டாக்கும் திரமையிலாவது, பருமனிலாவது, வயதிலாவது, யாதொரு பேதமு மில்லாமலிருந்தனவாம். மோயன்காஸ் ஆராய்ச்சி செய்ததில் இன்னொன்றும் சொல்லுகிறார். அதாவது, ஒரு தம்பதிக்கு ஆண் பிறப்பதும் பெண் பிறப்பதும் தாயைப் பொறுத்ததென்றார். புருஷன் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும் ஸ்திரீ பெண்ணின் தாய்வர்க்கத்தில் பெண்கள் ஜாஸ்தியானால் பெண்களே ஜாஸ்தி பிறக்குமாம். வேறுசிலர் இன்னொன்றும் சொல்லுகிறார்கள். பெண்களுக்கு போஷாக்கு ஜாஸ்தியானால் பெண் பிறக்கு மென்றும், சாப்பாட்டுக் கில்லாத ஸ்திரீகளுக்குப்பிள்ளை பிறக்குமென்றும் சில ஆராய்ச்சிகளில் ஏற்படுகிறது.

**Companies in India.**

இந்தியாவில் கம்பெனிகள்.—இந்தியன் கம்பெனி ஆக்ட்டு 1882-ம் வருஷத்தில் அமுலுக்கு வந்தது. அதுமுதல் 1909-1910 வருஷம் முடிய 5441 கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. இவைகளில் 3279 கம்பெனிகள் நஷ்டமடைந்தன. இவைகளைப்பற்றிய விவரங்கள் முழுமையும் தெரியவில்லை. ஆனால் அவைகள் இன்னவைகளாக இருந்திருக்க வேண்டுமென்று 1909-1910-ம் வருஷத்தில் நின்று போன கம்பெனிகளின் விவரங்களைக்கொண்டு ஊகித்துக் கொள்ளலாம். இந்த வருஷத்தில் மொத்தத்தில் 148 கம்பெனிகள் நின்றுபோயின. அவைகளில் 58 கம்பெனிகள் லேவாதேவி, இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள். இவைகளில் போட்ட பணம் 15,03,834 ரூபாய். இந்த 148 கம்பெனிகளில் 54 கம்பெனிகள் நம்முடைய ராஜாதானியைச் சேர்ந்தவைகள். அவைகளில் 40 கம்பெனிகள் லேவாதேவிக் கம்பெனிகள். இவைகளில் போட்ட முதல் ரூ.14,73,636. பாக்கி 14 கம்பெனிகள் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள். இவைகளின் முதல் ரூ.16,318. 1909-1910-ம் வருஷத்தில் மூடப்பட்ட கம்பெனிகளில் பாதிக்குமேல் அதாவது 75 கம்பெனிகள் நம்முடைய ராஜாதானியைச்சேர்ந்தவைகள். வங்காளத்துக் கம்பெனிகள் 23, பம்பாய்க் கம்பெனிகள் 21, ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்தவைகள் 14, பஞ்சாபைச் சேர்ந்தவைகள் 10. நின்றுபோன 148 கம்பெனிகளின் மூலதனம் 106,04,088 ரூபாய்.

1882 முதல் 1909-1910-ம் வருஷம் முடிய 3279 கம்பெனிகள் நஷ்டப்பட்டன என்று மேலே சொன்னோம். அவைகளில் 1594 கம்பெனிகள் அடியோடு நின்று போயின. பாக்கி 1685கம்பெனிகள் செத்தும் சாகாதனவாயும் இருக்கின்றன. நின்றுபோன 1594 கம்பெனிகளில், வங்காளத்தைச் சேர்ந்தவைகள் 654, மதராஸைச் சேர்ந்தவைகள் 374, பம்பாயைச் சேர்ந்தவைகள் 381. தடுமாடுகிற 1685 கம்பெனிகளில் 462 வங்காளத்

தைச் சேர்ந்தவைகள், 732 மதராஸைச் சேர்ந்தவைகள், 303 பம்பாயைச் சேர்ந்தவைகள்.

இந்தியாவில் 1909-1910-ம் வருஷத்துக் கடைசியில் வேலை செய்துவந்த கம்பெனிகளில் 544 கம்பெனிகள் பம்பாயைச் சேர்ந்தவைகள். இவைகளில் 155 கம்பெனிகள் பஞ்சாலைகள், 79 பருத்தி ப்ரெஸ்கள். இவ்விரண்டிலும் இட்டிருக்கும் மொத்தப் பணம் ரூ.17,48,019. இதில் பெரும்பாகம் இந்தியர்கள் பணமே. வியாபாரங்களை நிர்வகித்து வருகிறவர்களும் இந்தியர்கள். வங்காளத்தில் 543 கம்பெனிகள் வேலைசெய்து வந்தன. இவைகளில் 120 கம்பெனிகள் டீ ஸம்பந்தமாயும், 115 கம்பெனிகள் நிலக்கரி ஸம்பந்தமாயும், 35 கம்பெனிகள் ஜூட்(சணல்) ஸம்பந்தமாயும் உள்ளவைகள். இவைகளில் வெகுவாய் இந்தியர்கள் ஸம்பந்த மில்லை. சென்னை ராஜதானியில் 1909-1910-ம் வருஷமுடிவில் 481 கம்பெனிகள் வேலைசெய்து வந்தன. அவைகளில் 294 கம்பெனிகள் லேவாதேவி, இன்ஷ்யூரின்ஸ் கம்பெனிகள், 23 பஞ்சாலைகள், 17 பருத்தி ப்ரெஸ்கள். லேவாதேவி கம்பெனிகளில் பணம் போட்டிருப்பவர்களும் அவைகளை நிர்வகித்து வருகிறவர்களும் இந்தியர்கள்தான். ஆனால் மேலே சொல்லியபடி ஒரே வருஷத்தில் 44 கம்பெனிகள் போகுமானல் அவைகளின் நிர்வாகத்தை என்னென்று சொல்வது?

மொத்தத்தில் சென்ற 28 வருஷத்தில் வங்காளத்தில் 1659. கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. அவைகளில் 1116 நின்றுபோயின. பாக்கி இருப்பவைகள், அநேகமாய் எல்லாம் சுதேசிக் கம்பெனிகள். அவைகள் நன்ருயும் நடந்து வருகின்றன. மதராஸில் 1587 கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. அவைகளில் 1106 நின்று போயின. பாக்கி எல்லாம் தடுமாறும் ஸ்வதேசிக் கம்பெனிகள். பம்பாயில் 1228 கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. நின்று போனவைகள் 684. பாக்கி இருக்கிறவைகளில் பாதிக்குக் குறைச்சலில்லாமல் ஸ்வதேசிக் கம்பெனிகள்.


**The Bat Nuisance.**

வௌவால்த் தொந்தரவு.—கோவில்களிலும் பாழடைந்த வீடுகளிலும் பங்களாக்களிலும் வௌவால்கள் அதிகமாய்க்கூடி அவைகளில் வஸிக்கிறவர்களுக்கு ரொம்பத் தொந்தரவுக் கொடுப்பதை எல்லாரும் அறிவார்கள். இந்த வௌவால்களைத்தொலைக்க ஒருவர் ஒரு உபாயம் சொல்லுகிறுர். எந்த அறையில் வௌவால் ஜாஸ்தியாக இருக்கிறதோ அந்த உள்ளின் நாலு பக்கத்திலும் உள்ள எல்லா ஓட்டைகளையும் அடைத்துவிட்டு இரண்டடி சதுரமுள்ள ஒன்றை மட்டும் திறந்து வைக்க வேண்டும். இந்த ஒற்றை ஓட்டையின்வாயில் வௌவால் நுழையக்கூடாமல் நெருக்கிப் பின்னியிருக்கும் ஒரு மீன் பிடிக்கும் வலையைக் கட்டி வௌவால்களை உள்ளேயிருந்துவிறட்ட வேண்டும். அப்பொழுது அந்த வலை போட்டிருக்கும் ஒரே ஓட்டைவழியாய் எல்லா வௌவால்களும் ஓட எத்தனிப்பதால் ஒன்றன்மேல் ஒன்று விழுகிறது. அப்பொழுது அவைகளை சுலபமாய்க் கொன்றுவிடலாம். இதைத்தவிர துபாக்கிபோட்டு சுடுவது, புகைபோடுவது, முள்ளைக்கட்டுவது இவைகளெல்லாம் பிரயோஜனப்படாது. மேற்கண்டபடி ஒருவர் ஒரு பாரெஸ்ட் பங்களாவில் செய்து ஒரு தடவையில் 79 வௌவால்களைக்கொன்று அவைகளை ஒழித்தாராம்.

**The Madras Sanskrit college.**

மதராஸ் ஸம்ஸ்க்ருத காலேஜ்.—ஸமீபத்தில் நம்முடைய ராஜதானி மகாகனம் பொருந்திய கவர்னர் ஸர் ஆர்தர் லாலி அவர்கள் அக்ராஸனு திபதியாயிருந்து இந்த காலேஜில் படித்துத் தேறிய மாணுக்கர்களுக்கு ஸர்டிபிகேட்டு கள் கொடுத்தார். அப்பொழுது இந்த காலேஜ் கமிட்டியின் ப்ரெஸிடெண்டாகிய கனம் பி. ஆர். ஸுந்தரய்யர் அவர்கள் அதன் வரலாற்றை எடுத்துச் சொன்னூர். கல்கத்தா காசி இந்த நகரங்களில் ஸம்ஸ்க்ருத உயர்தரப்படிப்புக்குக்காக கவர்ன்மெண்டா ரால் ஏற்படுத்தப்பட்ட காலேஜுகள் இருக்க மதராஸில் அப்படிப்பட்ட காலேஜ் ஒன்று மில்லே.

மதராஸ் ஸர்வகலாசாலேயில் படிக்கும் மாணுக்கர்களுக்கு ஸம்ஸ்க்ருதத்தில் உபாய ஞானந்தான் தேவை. அவர்கள் ஹிந்துசாஸ்தி ரம் முதலிய உயர்ந்த ஸம்ஸ்க்ருதப் படிப்புக்கு அக்கரைப்படும்படியான தூண்டுகோல் ஒன்றுமில்லே. ஐரோப்பியர்கள் ஹிந்துக்களின் மதங்களும் சாஸ்திரங்களும் மிகவும் சிறந்த வைகள் என்று புகழ்ந்து வரும்பொழுது அவைகளே நிலே நிறுத்தும்படியான ஒரு ஸ்தா பனங்கூட தென்னிந்தியாவில் இல்லாதிருப் பது பெருங்குறையாயிருந்தது. இந்தக் குறையை நிவர்த்திக்க ஸம்ஸ்க்ருத வித்வான்க ளும் இங்கிலீஷ் ஸம்ஸ்க்ருதம் இரண்டும் தெரி ந்த விற்பன்னர்களும் அடங்கிய ஸம்ஸ்க்ருத காலேஜ்ஒன்றைஏற்படுத்துவதுதான்ஸரியென் றெண்ணி கனம் வி. கிருஷ்ணஸாமி அய்யர், ராவ் பகதூர் ஏ. கிருஷ்ண ஸாமி அய்யர், ஏ. எஸ். பாலஸுப்ரமணிய அய்யர் ஆகிய மூன்று பேர்க ளும் மதராஸ் ஸம்ஸ்க்ருத காலேஜ் என்று பெயரிட்டு இந்த காலேஜை 1906-ம் வருஷம் பிப்ரவரி ௴ 1௳ ஏற்படுத்தினூர்கள். பிறகு



வி. கிருஷ்ணஸாமி அய்யர்.

காலஞ்சென்ற முனிவீப் ஸ்வாமிநாத சாஸ் திரியள் சொத்திலிருந்து 19000 ரூபாய் இந்த காலேஜுக்குக் கொடுக்கப்பட்டதால் அதற்கு ஸ்வாமிநாத வேத பாடசாலே என்றும் பெயர் கூட்டி வைக்கப்பட்டது.

இந்த காலேஜில் ஸகல வித ஸம்ஸ்க்ருதப் படிப்புகளும்சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. சாஸ்திரம் காவ்யம் முதலிய விஷயங்களேப் பற்றி மாணுக்கர்கள் வாசித்து வாதிக்கும் பொருட்டு ஒருதார்க்கிக ஸபையும் இருக்கிறது. இதில் பையன்களால் வாசிக்கப்படும் வியா ஸங்கள் ஸம்ஸ்க்ருத பத்திரிகைகளில் ப்ர சுரஞ்செய்யப்படுகின்றன. ஒரு புஸ்தகசாலே யும் இருக்கிறது. இதில் 1200 ஸம்ஸ்க்ருத புஸ்தகங்கள் இருப்பதோடு பல ஸம்ஸ்க்ருத பத்திரிகைகளும் வரவழைக்கப்படுகின்றன. எந்நாளும் எல்லா ஜனங்களும் காலமே 7

மணி முதல் ஸாயந்திரம் 5 மணி வரையில் போய் புஸ்தகசாலையில் படிக்கலாம்.

இந்தக் காலேஜ் சிப்பந்திகள் முதலியவைகளுக்கு வருஷம் 3400 ரூபாயும், பையன்களின் சாப்பாடு முதலியவைகளுக்கு 3000 ரூபாயும், ஆக 6400 ரூ. வருஷம் செலவாகிறது. இந்தக் காலேஜுக்குள்ள மூலதனம் 69,000 ரூபாய். இதில் 45,000 ரூபாய் கனம் வி. கிருஷ்ண ஸாமி அய்யரால் கொடுக்கப்பட்டது. 19,000 ரூபாய் ஸ்வாமிநாத சாஸ்திரியள் சொத்திலிருந்து வந்தது. 5000 ரூபாய் காலஞ்சென்ற வி. ஆர். பட்டாபிராமய்யர் ஞாபக சின்னமாக அவருடைய குமாரர் வி. பி. ராமஸ்வாமி அய்யர் கொடுத்தது. 1907 வருஷம் முதல் கவர்ன்மெண்டார் வருஷம் ஒன்றுக்கு 1000 ரூபாய் கொடுத்து வருகிறார்கள். 1908-ம் வருஷம் முதல் இரண்டு பிள்ளைகளுக்காக மைஸூர் ஏ. அண்ணைய பண்டிதர் வருஷம் ஒன்றுக்கு 200 ரூபாய் கொடுத்து வருகிறார்.

நம்முடைய தேசத்தில் பணத்தை த்ருணமாக எண்ணி தர்மஞ் செய்கிறவர்கள் எத்தனையோ பேர்கள். ஆனால் அவர்கள் செய்யும் தர்மங்களெல்லாம் பரலோகத்தை உத்தேசித்து மோக்ஷஸாதனத்துக்காக செய்யப்படுகின்றன. அதனால், செய்யப்படும் தர்மங்களெல்லாம் கோவில்களில் பூஜைசெய்வதற்கு பெரும்பான்மையாய் உபயோகப்படுகின்றன. இப்பொழுது கொஞ்ச காலமாகத்தான் வித்யாதானமே பெருந்தர்மம் என்று ஜனங்கள் மனதில் தோன்றி வருகிறது.

**Bathing.**

**ஸ்நானம் செய்தல்.**—ஒரு ஊரில் அம்மை, பேதி, முதலிய வியாதிகள் வந்தால் சில கீழ் ஜாதியார் மட்டும் அவைகளுக்கு இரையாகிறார்கள். இதற்கு அவர்களுடைய அசுத்த நடவடிக்கைகளே காரணமென்று எண்ண ஹேதுவாயிருக்கிறது. தினந்தோறும் ஸ்நானம் செய்து துணிகளைத் தோய்த்துக்கட்டிக் கொள்ளுகிறவர்களுக்கு விசேஷமாய் வியாதி வராது. இது வீண் உபதேசமல்லவென்று அமெரிக்காவில் இல்லிநாய் என்னும் ஜில்லாவில் அரோரா என்னும் பட்டணத்தில்செய்த ஒரு விநோத உத்தரவால் ஏற்படுகிறது. அந்தப்பட்டணத்தில் கொஞ்சகாலமாக சாவுகள் ஜாஸ்தியாயும், வியாதிகள் அதிகமாயும் இருந்தனவாம். அங்கே உள்ள ஜனங்களில் பெரும்பான்மையோ கூலிகள். இவர்களுக்குள்ளே தான் வியாதியும் சாவும் ஜாஸ்தியாயிருந்தன. இதற்காக அந்தப்பட்டணத்து சுகாதார உத்யோகஸ்தர்களும் போலீஸாரும் ஒன்று சேர்ந்துகொண்டு ஒரு உத்தரவு போட்டார்கள், அதென்னவென்றால், அந்தப் பட்டணத்திலுள்ள ஒவ்வொரு ஜனமும் வாரத்தில் ஒரு தடவையாவது கட்டாயம் ஸ்நானம் பண்ணித்தீரவேண்டும். அப்படிச் செய்யாதவர்களுக்கு ஜெயில் தண்டனை விதித்து விடுவதாக உத்தரவு செய்தார்கள். ஒவ்வொருவனும் ஸ்நானம் செய்தான் செய்யவில்லை என்பதை போலீஸார் பார்த்து வரவேண்டும். இந்த உத்தரவால் எல்லாரும் தவராமல் ஸ்நானம் செய்துவந்தார்களாம். ஒருவரைக் கூட தண்டிக்க நேரவில்லை. வியாதிகள் குறைந்திருப்பதால் சாவும் குறைந்துபோய் விடும் என்று எண்ண இடமுண்டாகி இருக்கிறதாம். தினந்தோறும் ஸ்நானம் செய்வதின் மகிமையைப் பாருங்கள்.

## LIVING WITHIN MEANS.

BY
RAO BAHADUR V. K. RAMANUJA CHARIAR B. A.

## செட்டாய்க் குடித்தனம் செய்தல்.

கிராமவாஸிகளுக்கு ஸாகுபடிக்காகவும் ஸர்க்கார் கிஸ்தி செலுத்துவதற்காகவும் அடிக்கடி கடன்வாங்குவது அவசியமென்றும், அதற்காக ஐக்கிய நாணயச்சங்கங்கள் ஏற்படுத்த வேண்டியதென்றும், போன ஆகஸ்டு மாஸத்துப் "பிழைக்கும் வழி" யில் எழுதியிருந்தேன். அவர்கள் கடனே வாங்காமல் வரும்படிக்குள்பட்டே செலவு செய்யவேண்டியதென்று தெறிவிக்க இப்பொழுது எழுதுகிறேன்.

2. செட்டாக ஜீவனம் செய்யவேண்டுமென்பதும் கூடியவரையில் ஆபத்துக்காலத்துக்காகப் பணம் சேர்த்துவைக்கவேண்டுமென்பதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அப்படியிருந்தும் சாவு வாழ்வுகளில் தங்களையும் மீறி ஜனங்கள் செலவு செய்வதினால் பெரும்பாலும் கடன்கள் ஏற்படுகின்றன. இந்தச் செலவுகளை எப்படிக் குறைக்கலாம் என்று கவனிக்கவேண்டியது. பெண்பிள்ளைக்கு கல்யாணம் (விவாகம்) செய்கிற விஷயத்தில் இரண்டு விதச் செலவுகள் நேரிடுகின்றன. பெண்ணை வாங்கிக் கொள்பவனுக்குச் செய்யும் சீரினால் ஒருவிதம். கல்யாணத்தை நடப்பிப்பதால் ஒருவிதம். இப்போது நடக்கிறபடி முதலாவது செலவைக் குறைக்க வழியில்லை. எப்பொழுதும் நமக்குத் தேவையான பொருள் கொஞ்சமாயும் அதை விரும்புகிறவர்கள் அதிகமாயும் இருந்தால் அந்தப் பொருளின் விலை அதிகமாகும். நெல் நன்றாய் விளையாமலும் விளைந்ததில் பெரியபாகம் வேறு இடங்களுக்கும் போய்விடுமானால் விலை ஏறுகிறது. விளைவு நன்றாயிருந்து வெளியே போகாமலுமிருந்தால் விலை குறைகிறது. இப்படியே பெண்களின் தகப்பனார்கள் பொருளும் படிப்பும் உள்ள ஆண்பிள்ளைகளைத் தேடினால் அந்த ஆண்பிள்ளைகளின் விலை ஏறுகிறது. அவர்களின் தகப்பனார்கள் எந்தப் பெண்ணுடன் உயர்ந்த தொகைகிடைக்குமோ அந்தப் பெண்ணையே தேடுகிறார்கள். இப்படி நடப்பது ஜனங்களுக்கு ஸ்வபாவமானதால் நாம் ஆச்சரியப்படக் காரணம் ஒன்றுமில்லை. வரன்களின் விலையைக் குறைக்க வேண்டுமானால் இப்பொழுது கிடைக்கும் வரன்களைக் காட்டிலும் அதிக வரன்கள் எப்படிக் கிடைக்குமோ அப்படி நாம் தேடவேண்டும். ப்ராம்மணஜாதியில் ஸ்மார்த்தர்கள், ஸ்ரீவைஷ்ணவர்கள், மாத்வர்கள் என்று மூன்று பெரிய வகுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றிலும் சில்லறை வகுப்புகள் உண்டு. ஸ்மார்த்தர்களில் வடமன், ப்ரகசரணம், அஷ்டஸகஸ்ரம், வாத்திமன் என்கிற பிரிவுகளும், ஸ்ரீவைஷ்ணவர்களில் வடகலை தென்கலை என்கிற பிரிவுகளும் எல்லாரும் அறிந்தவைகள். ஒவ்வொரு சில்லறைவகுப்பும் மருபடியும் வெவ்வேறு கூட்டங்களாகப் பிரிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொரு உள்வகுப்புக்களிலேயே பெண்களைக் கொடுத்து வாங்குவதாயிருந்தால் வான்களின் விலைகுறையக் காரணமில்லை இந்தப் பிரிவுகள் தர்ம சாஸ்திரங்களாலே ஏற்பட்டனவல்ல. ஆகையால் இவைகளை கவனிக்காமல் ஒரே ஜாதிக்குள் பெண்களைக் கொடுத்து வாங்குவது உண்டாகுமேயானால் சீர்களை ஒவ்வொருவனும் தன்னுடைய வரவுக்குள் பட்டுச் செய்யலாம்.

3 கல்யாணத்தில் செலவாகும் இரண்டாவது விதச்செலவையும் குறைக்கலாம் ப்ராம்மணர்களுக்குள்ளே கல்யாணம் செய்யும்

முறையைச் சொல்லும் ஸூத்ரங்களைப் பார்த்தால் அது ஒரேநாளில் முடிவாகிறதாகத் தெரிகிறது. ஸாமவேதம் படிப்பவர்களுக்கு காதிர ஸூத்ரமென்று ஒன்று நடவடிக்கையில் இருக்கிறது. அதில் நாலாவது கண்டத்தில் 11-வது ஸூத்ரத்தின் பொருளை எழுதுகையில் கல்யாணத்தில் ராத்திரிலேகாஹோமத்தைமுடித்து கல்யாணம் செய்து கொண்டவன் கல்யாணப் பெண்ணை ரதத்தில் ஏற்றி அக்கினியை எடுத்துக்கொண்டு தன் வீடுபோய் அவ்விடத்தில் தானும் அந்தப் பெண்ணும் ஒரே படுக்கையில் படுத்து நித்திரை செய்ய வேண்டியதென்று எழுதியிருக்கிறது. மனைவியை ரதத்தில் ஏற்றுவதற்கும், தன் வீட்டுக்குள் நுழைவதற்கும், மனைவியுடன் படிப்பதற்கும் மந்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மந்திரங்களின் பொருளை கவனித்தால் இப்படியே செய்வது உசிதமென்று விளங்குமென்று ஸூத்ர உரை செய்தவர் எழுதியிருக்கிறார். இப்படியே வேறுவேதம் படிக்கிறவர்களுக்கும் இருப்பதாக தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். கல்யாணம் ஒரே நாளில் முடிவதானால் பெண்ணைப் பெற்றவனுக்கு எவ்வளவு ஸௌகர்யம் உண்டாகும்? ஸம்பந்திகளுக்கும் வேண்டியவர்களுக்கும் ஐந்துநாள் விருந்து செய்ய வெண்டியதில்லை. விருந்துச் செலவில் ஐந்துபாகத்தில் நாலுபாகம் மிகுதியாகும். கல்யாண காலத்தில் சாப்பாட்டுவேளை போக பாக்கி காலத்தில் நடக்கும் கச்சேரிகளை நிறுத்திவிடலாம். ஊர்கோலமும் இல்லாமல் போகும் இது எப்படியானாலும் கல்யாணம் நடக்கும்போது செலவாகிற தக்ஷிணையைக் குறைப்பதில் ஒருவித தடையுமில்லை. எந்தச் சடங்கையும் பெரியோர்கள் அநுமதியின் பேரில் செய்ய வேண்டியது வாஸ்தவந்தான் பெரியோர் என்பது வேதம்படித்து அதின் பொருளைத் தெரிந்து அதில் சொன்னபடி நடப்பவர். இவர்களில் நாலுபேர் அநுமதியிருந்தாலும் போதும். அநுமதிபெற அவர்களுக்குக் கொடுப்பதுக்கு அநுக்ஞை என்று பெயர். இதை இப்பொழுது எல்லாருக்கும் கொடுப்பது வழக்கம். அதற்கு பூரிதக்ஷிணையென்றுபெயர். இதை நிறுத்திவிடுவதால் கல்யாணத்துக்கு குறைவு ஒன்றும் கிடையாது. ஒருவித பொது நன்மையும் உண்டாகும். எப்படியெனில்—கல்யாண பூரிதக்ஷிணையையும் சிராத்தத்தில் கிடைப்பதையும் நம்பி ஒவ்வொரு பெரிய ஊரிலும் அனேகர் வேறு தொழிலில்லாமல் இருந்து சில காலங்களில் வருந்துகிறார்கள். பெண்ணின் தகப்பனுக்கு பூரிதக்ஷிணையால் செலவாகிறதேயல்லாமல் அதை வாங்குகிறவர்கள் கஷ்டம் வெடிகிறதில்லை. இது இல்லாவிடில் வேறு தொழில் செய்து அவர்கள் பிழைக்கும்படி நிர்பந்தமுண்டாகும். ப்ராம்மணர்களுக்கு என்ன தொழில்கிடைக்கும் என்றுபலர் கேட்பார்கள். இதைத்தெரிந்தேபராசரர்முதலானபெரியோர்கள் தர்ம சாஸ்திரம் எழுதுகையில் விவஸாயம், வ்யாபாரம், லேவாதேவி செய்தல், இவைகளுக்கு உத்ரவு கொடுத்திருக்கிறார்கள். இவைகளையும் பலர் நடத்துகிறார்கள். சிலர் மட்டும் தொழில் செய்வது வருத்தமாயிருப்பதாலும் தக்ஷிணைவாங்குவது லகுவாயிருப்பதாலும் தொழிலில்லாமல் இருப்பதில் ருசியுள்ளவர்களாயிருக்கிறார்கள். அதற்கு நாம் இடம் கொடுப்பது பொது நன்மைக்கு விரோதம்.

4 ப்ராம்மண ஆண்பிள்ளைகளுக்கு உபநயநஞ்செய்யும் காலத்திலும் அதிகச் செலவு வேண்டியதில்லை. முதல்நாள் பெரியோர்களுக்குவிருந்து செய்து அவர்களின் அநுமதி பெற்று மறுநாள் தகப்பனர் பிள்ளையைக் கூப்

பிட்டு மந்திரத்தை உபதேசம் பண்ணுவதும் அவனுக்கு வேதம் படிக்கும் காலத்தில் விரதம் விதிப்பதுந் தானே உபநயனம். இதற்கு பணச் செலவு எதற்காக? விருந்தும் இரண்டு நாள தானே. பெண்கள பெரிதாகும் காலத்திலும் இப்பொழுது செய்கிற செலவுக்கு கொஞ்சமும் ந்யாயமில்லே. பிறகு அந்தப் பெண்தன் புருஷன் வீட்டுக்குப்போய் அவனுடன் படுக்குங்காலத்திலும், கர்பமுண்டானல் செய்ய வேண்டிய ஸீமந்தகாலத்திலும் வைதிக காரியங்களே செய்ய வேண்டியதே யல்லாமல் ஊர்கூட்டம் கூட்ட வேண்டியதில்லே.

5. சாவுகளிலும் முதல் இரண்டு நாள்களில் செய்யும் சடங்குகள் தவிர இதர சடங்குகள் சிராத்தங்களானவையால் அவைகளில் சாப்பிடுகிறவர்களுக்கு உசிதமான பொருள் கொடுப்பது ஸரியானதுதான். அதில் ஸம்பந்தமில்லாதவர்களுக்கு எதற்காக தக்ஷிணைகொடுப்பது? இதனுல இறந்தவர்களுக்கு த்ருப்தி யென்று எண்ணுவது பிசகு. த்ருப்தியுண்டாவது சிராத்தத்தினுலேதான். பூரிதக்ஷிணையால் உண்டாவதன்று.

6. மேலே சொல்லியவைகளைக் கொண்டு ஏழைகளிடம் இறங்கவேண்டாம் என்று சொன்னதாக எண்ணக் கூடாது. ஏராளமான வரும்படியுள்ளவர்கள் வேண்டியமட்டும் சாவு வாழ்வுகளில் செலவு செய்யலாம். அப்படி வரும்படி யில்லாதவர்கள் டம்பத்தினுல் அவர்களைப்போல செலவு செய்யக் கூடாது என்றும், எந்தவழியாய்ச்செலவைக் குறைக்கலாம் என்றும், தெரிந்து கொள்ளுவதற்காக இது எழுதினது. மிகுந்த வரும்படியுள்ளவர்களும் தக்ஷிணை கொடுப்பதாலும் கேட்டவர்களுக்குச் சோறுபோடுவதாலும் ஏழைத்தனத்தை குறைக்க முடியாது. ஏழைகளின் நிலைமையை விசாரித்து எவ்விதமான உதவிசெய்தால் அவர்கள் தொழில் செய்து பிழைக்கலாமோ அதைச் செய்யவேண்டியது. இது ஒருவராலேயே முடியாது. எல்லாரும் சேர்ந்து செய்யவேண்டிய விஷயம்.

வி. கே. ராமாநுஜாசாரி.

## EXPRESSION OF THE EMOTIONS.

BY
P. T. SRINIVASA AIYANGAR M. A. F. M. U.

## முகஜாடை.

[எழுதியபடி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.]

"சன்னுசியாரே, சன்னுசியாரே, முன்னுலே போற கம்பொஞ்சாதி உம்பொஞ்சாதியா? இரண்டுபேர் முகஜாடை ஒன்ருய் இருக்கு."

இந்த பேச்சை அளவற்ற முட்டாள்தனத்துக்கு உதாரணமாக சொல்லுகிறதுண்டு. ஆனுலும் இது அவ்வளவு அசட்டுத்தனமான வார்த்தை அல்லவென்று இந்த ஆர்ட்டிக்கிலில் காண்பிக்க உத்தேசிக்கிறேன்.

ஜாதி என்னவானுலும் ஒவ்வொரு தேசத்து ஜனங்கள எல்லாருக்கும் வேறே ஒவ்வொரு முகஜாடை இருக்கிறதென்று ஸாதாரணமாய் தெரியும். முகத்தைப்பார்த்தவுடனே, இவன் மலேயாளியென்றும், இவன் தெலுங்கனென்றும், இவன் பங்காளியென்றும் ஸுலபமாய் சொல்லலாம். இது கொஞ்சமட்டும் நடை உடைபாவனைகளாலும், க்ஷவரம் பண்ணிக்கொள்ளும் மாதிரியாலும் தெரியும். ஆனுல் எல்லா ஜாதியாரும் ஒரே நடை உடை பாவனையுடையவர்களும் ஒரே மாதிரி க்ஷவரம் செய்துகொள்ளுகிறவர்களும் இல்லே. இவைகளில் வித்யாஸம் இருந்தாலும், இவன் பலான ப்ரெஸிடென்ஸி, பலான ஜில்லா என்று எளிதில் சொல்லலாம். இதை முகஜாடையை பிடித்துத்தான் கண்டுபிடிக்கிறும். இதுவுமல்லாமல் வெகுகாலம் அதிக ப்ரீதியோடு ஒரே வீட்டில் ஸம்ஸாரம் செய்துவரும் கிழவயது வந்த அகம்படையான் பெண்டாட்டி முகங்களே கவனித்து பார்த்தால் அவர்கள் முகஜாடை வரவர

ஒன்று படுமென்று தெரியவரும். இதற்கெல்லாம் காரணம் என்னவென்று விசாரிப்போம்.

நாம் முழங்கையை மடக்கினால் மேல் கையில் * சதை திரண்டு உருண்டு கட்டியாய் கல்போல் ஆகிறதென்று எல்லாருக்கும் தெரியும். இந்த சதையைச் சுற்றி இருக்கும் 'எபிடர்மிஸ்' என்று இங்கிலீஷில் சொல்லும் தடித்த வெளித்தோலை கத்திரித்துப் பார்த்தால், 'டெர்மிஸ்' என்று இங்கிலீஷில் பேருள்ள சிவந்த உள் தோல் மூடியிருக்கும் இரண்டு தலையுள்ள சதை ஒன்றை பார்க்கலாம். ஆகையால் இதற்கு இருதலைச்சதை என்று பேர் வைப்போம். இதை இங்கிலீஷில் 'பைஸெப்ஸ்' என்று சொல்லுவார்கள்.

இந்த இருதலைச்சதையை தனியே வெட்டி எடுத்து அதின்மேலுள்ள உள்தோலை கத்திரித்தால் அந்த சதை சின்ன கற்றைகளாய்ப் பிரியும். ஒரு சதைக்கற்றையைப் பிரித்தால் அது அநேகம் நார்களாய்ப்பிரியும். இதை சதை-நார் என்று சொல்வோம். உடம்பில் இருக்கும் சதையெல்லாம் இந்த சதை நார்க்கட்டுகளே.

இந்த சதை நாருக்கு ஒரு விசேஷகுணம் உண்டு. சில ஸமயத்தில் நீளும், சில ஸமயத்தில் குறுங்கும். இலெக்ட்ரிஸிடியாவது, சூடாவது பட்டால் உடனே குறுங்கும். கொஞ்சகாலமான பிறகு நீளும். ஒவ்வொரு சிறிய சதை நாரும் சுருங்கினால் அதன் கட்டுகளாலாகிய சதை திரண்டு, உருண்டு, கட்டிப்படும். மேல் கையில் இருக்கும் இருதலைச் சதை குறுங்கும்போது முழங்கை மடங்கும், முழங்கை மடங்குகிறதால் இந்தசதை குறுங்குகிறது, என்று நாம் ஸாதாரணமாய் நினைக்கிறோம். இது பிசகு. முழங்கை மடங்க வேணுமானால், கீழ்க்கையை மேலே ஏதாவது பிடித்து இழுக்கவேண்டும். இந்த லோகத்தில் எந்த வஸ்துவும் தானே மேலுக்கு கிளம்பாது. கல்லை விட்டால் கீழுக்கு போகுமே ஒழிய மேலுக்கு கிளம்பாது. கயிற்றைக்கட்டி இழுத்தால்தான் உயரப்போகும். முழங்கை மடங்கும்போது இருதலை சதை கீழ்க்கையைப்பிடித்து மேலுக்கு இழுக்கிறது. அதனால் தான் கீழ்க்கை மேல் நோக்கி செல்லும். உடம்பில் உள்ள சதைகள் அநேகம் குறுகி இழுப்பதால்தான் நம்மால நிற்க முடிகிறது. ஒரு கூடாரத்தை நிறுத்த எத்தனை திக்குகளில் முளை அடித்து எத்தனை கயிற்றை இறுக்கி இழுத்துக்கட்ட வேண்டியிருக்கிறது? நாம் நிற்கும்போது, அதாவது நாம் உடலை நிறுத்திவைக்க வேணுமானால், கால் முன் பின் பக்கங்களிலும், ஆஸனத்திலும், வயிற்றின்மேலும், முதுகிலும், உள்ள மொத்தம் 16 சதைகள் குறுகி உடம்பிலுள்ள எலும்புகளை நாலு பக்கத்திலும் இழுத்துப் பிடித்துக் கொண்டால்தான் முடியும். நடக்கும்போதும் அநேகசதைகள் சுருங்கவும் நீளவும் வேண்டும். எந்த விதமாய் அசைந்தாலும், விரலை நீட்டினாலும், தலையை ஆட்டினாலும், கண்ணை மூடினாலும், மூச்சு விட்டாலும், எந்தவேலை செய்தாலும், சில சதைகள் சுருங்காமலும், நீளாமலும், முடியாது

இதுவுமல்லாமல், கோபம், பயம், சந்தோஷம் ப்ரீதி, த்வேஷம், முதலியவை நமக்கு உண்டாகும்போது, ஒன்றொன்றுக்கும் தக்க ப்ரகாரம் முகம் மாறும் என்று எல்லாருக்கும் தெரியும். முகத்தின் மேல் சின்ன சதைகள் அநேகம் உண்டு. இவைகளின், குறுகல் நீட்டலால் இந்த மாறுபாடுகள் முகத்தில் உண்டாகும்.

* முழங்கை முதல் தோள்வரைக்கும் உள்ளதை மேல்கை என்றும், முழங்கைக்கு கீழ் உள்ளதை கீழ்க்கை என்றும் வேறு பண்ணி பேர்வைக்கலாம்.

சிவந்தமுகம், வெளுத்தமுகம், மலர்ந்தமுகம், குளிர்ந்தமுகம். கறுத்தமுகம், இவையெல்லாம் மனதில் அந்தக்காலத்தில் உள்ள குணத்தைக்குறிப்பிடும். இந்த முகஜாடைகளை எல்லாம் முகத்தின் சதைகளால் உண்டாகின்றன.

முதலில் சந்தோஷம் வந்தபிறகு முகம்மலர்கிறது என்று நாம் நினைக்கிறோம். துக்கத்துக்குமொழி அழுகை என்று சொல்லுவதுண்டு. இந்தமாதிரியே குணம் முதல், முகஜாடை அப்புறம், குணம் காரணம், முகஜாடைகாரியம், என்று எல்லாரும் நம்புகிறார்கள். இது பிசகு என்று அமெரிக்கன் துரை ஜேம்ஸ் என்பவர் ரூபித்திருக்கிறார். நாம் ஊனமாய் வாசித்துக்கொண்டிருக்கும்போது ஒரு ஸ்நேகிதன் விளையாட்டுக்காக ஒரு குண்டூசியால் காலை குத்துகிறான் என்று வைத்துக்கொள்வோம். நாம் அப்போது திடீரென்று காலை மடக்குகிறோம். ஒருவேளை துள்ளிவிழுந்தாலும் விழுகிறோம். இந்தமாதிரி காலை இழுப்பதும், துள்ளி விழுவதும், யாரோ ஊசியால் குத்துகிறான், காலை இழுக்காதபோனால் காலில் ஓட்டை விழுந்துவிடும், துள்ளி தூர விழாமல் போனால் ஊசி உள்ளே போய்விடும், என்று ஆலோசித்து ஊகித்து செய்யும் காரியங்களா? அல்ல, நம்முடைய யோசனையில்லாமல் காலும் உடம்பும் தாமாக செய்யும் காரியங்களே. உடம்பை காப்பாற்ற செய்யும் காரியங்கள் எல்லாம் தாமாக நடக்கும் காரியங்களே. இல்லாமல் ஒவ்வொரு காரியமும் தீர்க்காலோசனை செய்யவேண்டியிருந்தால் "செட்டியார் சிங்காரிக்கிறதற்குள் பட்டணம் கொள்ளை போய்விடும்" என்கிற மாதிரி ஆகும். நாம் செய்கிறோம் என்று நாம் ப்ரமப்படுகிற முக்காலே மூன்றுவீசம் காரியங்கள் உடம்பு நம்மை கேட்காமல் தானே செய்கிறவையே. பாம்பை கண்டு ஓட்டம் பிடிக்கும்போது ஆலோசனைக்கு இடம் எங்கே? ஒரு குழந்தை சர்க்கரையை கண்ட உடனே தொட்டு வாயில் வைத்துக்கொள்ளும்போது, இது தித்திப்பு, ஸுகம் என்று யோசித்து செய்கிறதா? சர்க்கரையை காணுகிறதும் தொட்டு நாக்கில் தடவுகிறதும் ஒரே நிமிஷத்திலே நடக்கிறதல்லவா? காலில் தேள் கொட்டினபோது காலை உதறுகிறோம். உதறினால் வலி தெரியாது என்று ஆலோசித்தா செய்கிறோம். இதையெல்லாம் பிடித்து யோசித்தால் ஜேம்ஸ்துரைசொல்லுகிறதே ஸரிஎன்று தோன்றுகிறது.

நிற்க, நாம் ஒருகாரியத்தை கொஞ்சகாலம் தவறாமல்செய்தால் அது வழக்கமாகி அந்தக் காரியம் நமக்கு தெரியாமல் அதை நம்முடைய தேகம் தானே செய்யும். பொடி போடுவதை முதலில் நாம் தெரிந்து செய்கிறோம். வழக்கமான பிறகு கைதானே நமக்கு தெரியாமல் டப்பியிலிருந்து எடுத்து போடும். எதுவும் பத்து நாளைக்கு செய்தால் பிறகு நிறுத்தமுடியாத வழக்கமாகும். அப்படியே மலர்ந்த முகத்துடன் எல்லாரையும் பார்க்கிற வழக்கம் செய்தால், பிற்பாடு முகம் எப்போதும் மலர்ந்தே இருக்கும். தினம்தினம் கஸரத் செய்தால் சதையெல்லாம் என்னமாதிரியாய் வளர்ந்து திட்டப்படுகிறதோ, அதே மாதிரி, தினம்தினம் ஒரே மாதிரி எண்ணம் வந்துகொண்டிருந்தால், அதற்கு உதவியாயுள்ள முகஜாடை வழக்கமாய் எப்பவும் முகத்தில் குடிகொள்ளும். இதனால் ஒரே மாதிரி எண்ணங்களும் ஒரே மாதிரி கஷ்டஸுகமும் அனுபவிக்கிற தம்பதிகளுக்கு கொஞ்சகாலத்தில் ஒரே மாதிரி முகஜாடை உண்டாகும்.

பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார்.

## KOTHAVARAI.

BY

N. V. SUBRAMANIA SASTRIAL.

## கொத்தவரை

—— ——

அநேகம் பேர்களுக்கு இருவகைக் கொத்தவரைச் செடிதான் தெரியும். அவைகள் கிளைக் கொத்தவரை, கிளையில்லாக் கொத்தவரை என்று விவகரிக்கப்படும். கிளைக் கொத்தவரைச் செடியில் கிளைகள் நிறைய இருக்கிறதால் நமக்கு நிறையக் காய்கள் கொடுக்குமென்று நினைத்து அதையே சிலர் மிகுதியாய்ப்பயிரிடுகிறார்கள். மணலில் இட்ட நெல் பயிர்போல் அதற்குச் செய்யும் வேலையெல்லாம் வீண்தான். அதனால் உண்டாகும் கஷ்டங்களும் பல இருக்கின்றன. கிளைக் கொத்தவரையானது, முளைத்து கொஞ்ச நாளைக்கெல்லாம் நாலுபக்கங்களிலும் கிளைகளைக்கட்டிக்கொண்டு கிளம்பி, களை கொத்துவதற்குக்கூட இடங்கொடாமல் பரவி வளர்கிறது. ஒரே வேரினால் உட்கொள்ளப்படுகிற ஆகாரமானது தாயாகிய செடிக்கும் கிளைகளுக்கும் போதாமல் செடியும் நன்றாய் வளர்கிறதில்லை, கிளைகளும் புஷ்டியாய் பெருக்கிறதில்லை. செடிகளில் காய்க்கத்தகுந்த கொழுப்பில்லாததால் கிளைக்கொத்தவரை நன்றாய்க் காய்க்கிறதில்லை. நன்றாய்க் காய்க்காவிட்டாலும் அது காய்த்த காய்களைப் பறிப்பதோ மிகவும் கஷ்டம். அந்தக்கஷ்டம் அநுபவித்தவர்களுக்கேதான் தெரியும். இதரர்களறியார்கள். அந்தக்காய்களும் வாளிப்பாய் இருக்கிறதில்லை. பாத்திகளில் செடியின் கிளைகள் கீழாகப்பரவி ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு நல்ல காற்றோட்டம் இல்லாமல் செடிகள் வெளுத்து நோயுண்டு பாதிச்செடிகள் அழுகிப்போகின்றன. அப்படிப்பட்ட கொத்தவரைத் தோட்டங்களில் நாள்முழுவதும் பறித்து மடிகாய் கூட ஆகவில்லையென்று கிருஷிகர்கள் துக்கமடைகிறார்கள். இன்னும், இந்தக் கொத்தவரைப்பயிர் செய்யுமிடத்தில் வேறொன்றும் பயிர்செய்ய முடிவதில்லை. வேறு பயிரிருக்குமிடத்திலும் இதைப் பயிர் செய்ய முடிகிறதில்லை. இவ்விதக்கஷ்டங்கள் இதில் உண்டாகிறபடியால் இதை அவசியம் விலக்கிவிடவேண்டும்.

இனி கொஞ்சம் கிளையில்லாக் கொத்தவரையைப்பற்றி விசாரிப்போம்.

பூமிஸாரம் ஒரே செடியில்செல்லுகிறபடியால் இச்செடிகள் கொழுத்து ஓங்கி வளர்கின்றன. செடியில் காய்கள் ஜாஸ்தியாயுமுண்டாகின்றன. காய்களும் பெருத்து நீண்டிருக்கும், அதைப் பறிப்பதும் வெகு சுலபமாயிருக்கும். இந்தச் செடிகளில் கிளையில்லாததால் காற்று நன்றாய்ப் பிரவேசித்து செடிகளுக்கு வியாதி வருகிறதில்லை. ஆகையால் கிளையில்லாக் கொத்தவரையே சிரேஷ்டமென்று யாவருக்கும் விளங்கக்கூடியது. ஆனாலும் இதிலொரு வித கஷ்டமிருக்கிறது. அதாவது, இது முளைத்தது முதற்கொண்டு காய் மாறுகிறபர்யந்தம், ஆடுமாடுகளுக்கு இரையாகாமல் ஜாக்கிரதையாகக்காப்பாற்றவேண்டும். மாடு தின்றுவிட்டால் மறுபடியும் முளைக்காமல், காற்றினால் முரிக்கப்பட்ட தென்னை பாக்குகளைப் போலும், கன்றுவாயிலகப்பட்ட மூங்கில் முளைபோலும், பூமிஸாரத்தால் கொஞ்சகாலம் பிழைத்திருந்து பிறகு அழுகிப்போகிறது. இதன் நிலைமையை யோசித்தால் மிகவும் பரிதாபம். இன்னுஞ் சிலர் வேலிகட்டாமல் பயிரிட்டு பூவும் பிஞ்சுமாய் இருக்கும்பொழுது மாட்டுக்கு இரையாக்கிவிட்டு பறிகொடுத்தவ

னைப்போல் வாயிலும் வயிற்றிலும் போட்டுக் கொண்டு கதறுகிருர்கள். இதையெல்லாம் பார்க்கிற நமக்கு இதன் கஷ்டம் நன்ருய்த் தெரிகிறது. ஐயோ! அதற்கோ கிளை வெடிக்குந்தன்மையில்லை; பின் என்னசெய்வோம்; இதைப் பிடிங்கிவிட்டு வேறு விதைபோட்டு பயிராக்குவோ மென்ருல் காலமோ அதிகரித்துவிட்டது. அவ்வருஷம் முழுமையுமே அப் பயிர் உபயோகப் படாமல் போகிறது. இப்படிப்பட்ட கஷ்டங்களும் உண்டாகின்றன ஆனுலும் கிளைக் கொத்தவரையைக் காட்டிலும் கிளையில்லாக் கொத்தவரை சிரேஷ்டமென்று உலகமறிந்த விஷயம்.

இப்பொழுது கிருஷிகர்கள் கொத்தவரையை நான்கு விதமாகச் சொல்லுகிருர்கள். கிளைக் கொத்தவரை, கிளையில்லாக் கொத்தவரை, புதர்க் கொத்தவரை, சீப்புக் கொத்தவரை என்று பிரிக்கப் படுகின்றன. அவைகளில் முன் இரண்டு வகையும் மேலே சொன்னவை. புதர்க் கொத்தவரையானது அடியிலேயே நாலு ஐந்து கிளைகள் வெடித்து அதிகமாய் உயராமல் புதர்போல் நின்று, காய்களை நிறையக் கொடுக்கும். அதன்காய்கள் மற்றக் காய்களைவிட கொஞ்சம் குட்டையாயும் பருமனுயுமிருக்கும். அது மற்றவைகளைப் போல் அவ்வளவு மிகுதியாய் இராது. நாலாவதாகிய சீப்புக் கொத்தவரை கிளையில்லாக் கொத்தவரையைப் போலவே இருக்கும். ஆனுலும் ஒவ்வொரு கணுவிலும் விடும் சீப்புகள் மேல் கணுவுக்கு மேலும் போய் வளர்ந்து காய்க்கும். அதன் காய்களும் கொஞ்சம் நீளமாகவே இருக்கும். இந்த நான்கு வகைக்குள் சீப்புக் கொத்தவரையில் குலைகள் ஜாஸ்தியாய் இருக்கிறபடியால் அது தான் சிரேஷ்டம். கிளையில்லாக் கொத்தவரையை இரண்டாவதாகவும், புதர்க் கொத்தவரையை மூன்ருவதாகவும் சொல்லுகிருர்கள். கிளைக்கொத்தவரை ஒருபொழுதும் கூடாதென்று முன்னமே சொல்லிவிட்டோம். மூன்ருவதாகிய புதர்க் கொத்தவரையானது வேறுபயிரோடு கலந்து பயிர் செய்யமுடியாது. அதிக பந்தோபஸ்து இல்லாமலும் ஆடு மாடுகளின் பயமுள்ளதாயுமிருக்கு மிடத்தில் மட்டுமே இதை உபயோகிப்பது நலம். ஒரு வேளை ஆடுமாடுகள் தின்று விட்டாலும் கிளை வெடிக்கும் தன்மையுள்ளதால் மறுபடியும் வளர்ந்துவிடும்.

சீப்புக் கொத்தவரையைப் பயிரிட நல்ல அடைப்புள்ள இடம் வேண்டும். இல்லாவிட்டால் அதின் பிரயோஜனத்தை அடைய முடியாது. சிலர் நல்ல பூமியாய் இருந்தால் நன்ருய்க் காய்க்கும், ஜாதியினுல் என்ன பிரயோஜனமென்று சொல்லுவார்கள். அது மிகவும் தப்பு. நல்ல நிலம் வேண்டுமென்பது உண்மைதான். நல்ல விதை இல்லாததால் கஷ்டப்படுவது சொல்லாமலே எல்லாருக்கும் தெரியும். ஒரே தோட்டத்தில் இருக்கும் தென்னைகளின் சில குலைகுலையாய்க் காய்ப்பதையும் ஒரு குலையில் 25, 30, காய்கள் இருப்பதையும், சிலதென்னைகள் குலைக்கு இரண்டு மூன்று காய்கள் காய்ப்பதையும் பார்க்கிருேமல்லவா.? இவைகளெல்லாம் ஜாதியினுல்த் தான் என்று புத்திமான்களுக்கு நன்கு விளங்கும். ஆகையால் கொத்தவரையில் ஜாதியாகிய சீப்புக் கொத்தவரை தான் உத்தமம்.

இப்பொழுது சிலர் கொத்தவரையை கரணைக் கொல்லையிலும் மஞ்சள்க் கொல்லையிலும் பயிரிடுகிருர்கள். அப்படிச் செய்வதால் உண்டாகும் தீமைகள் பல. காய்கள் பறிக்கும் பொழுதெல்லாம் கீழ்நிலம்நன்ருய் மிதிபட்டு கீழிருக்கும் செடிகள் நன்ருய்க் கிழங்கிடுகிறதில்லை, மிளகாய்க் கொல்லைகளி

லும் சிலர் பயிரிடுகிறார்கள். அப்படிச் செய்வதால் இதன் நிழல் மிளகாய்ச் செடிகளில் தாக்கி மிளகாய் நன்றாய்க் காய்க்கிறதில்லை. இப்பொழுது இதைப் பயிரிட ஒரு நல்ல உபாயம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது, வெண்டை, முள்ளங்கி, மணிலாக் கொட்டை, முதலானவைகள் ஸாகுபடி செய்யுமிடத்தில் ஒவ்வொரு பாத்தியிலும் நான்கு வரப்புகளிலும் பயிர் செய்வதால் கீழுள்ளவைகளுக்குக் கெடுதி இல்லையென்றும் இச்செடிகள் விசாலமாய் இருக்கிறபடியால் நன்றாய் காய்க்கின்றனதென்றும் தெரியவருகிறது. மணிலாக் கொட்டைக்கு நிழல் உதவாதாகையால் பாத்தியின் நடுவிலுங்கூட செடிகளை நடலாமென்று சொல்லுகிறார்கள். புகையிலைத் தோட்டங்களிலும் பாத்தியின் வரப்புகளில் இதை விதைக்கலாமென்று தோன்றுகிறது. கொத்தவரைப் பயிர் செய்யும் வகை அநேகமாய் எல்லாருக்கும் தெரிந்திருக்கும். ஆகையால் அதைப்பற்றி இவ்விடத்தில் விவரிக்க வேண்டியதில்லை. ஆனாலும் அதில் முக்கிமாய் கவனிக்கவேண்டியவைகள் சில உள." கொத்தவரைப் பிஞ்சுகள் ருசியாயிருக்குமாதலால் இவைகளைத் தின்ன பச்சைக் கிளிகள் அதிகமாய்வரும். ஆயினும் அவைகளைப் போக்குவதற்கு ஒரு உபாயமும் பழையோர்களால் அனுஷ்டிக்கப்பட்டதாகத்தெரியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் செய்யவேண்டும். மாந்தோப்பு முதலானவற்றில் கிளிகள் அதிகமாய் இருக்குமாதலால் தோப்புக்குச் சமீபத்தில் இந்தப்பயிரைச் செய்யக் கூடாது.

2. இதன் விதைகளைக் காப்பாற்றுவது ரொம்பவும் கஷ்டம். இதன் விதைகளுக்கு 10 வருஷத்திற்குமுன் முளைக்கும் திறமை எவ்வளவு இருந்ததோ அவ்வளவு இப்பொழுது இல்லையென்று தெரிகிறது. முன் எடுக்கப்பட்ட விதைகள் எடுத்தது முதற்கொண்டு இரண்டு வருஷம் வரையில் உபயோகப் படுத்தப் பட்டனவாகத் தெரியவருகிறது. இப்பொழுதோ அந்த வருஷத்தில் எடுத்தவிதைகள் மறுவருஷம் போடுவதற்குக் கூட உபயோகமில்லை என்று சொல்லி, கோடையில் ஒரு தரம் பயிரிட்டு விதை சம்பாதிக்கிறார்கள். இவ்வளவு கஷ்டத்திற்கு அஜாக்கிரதைதான் காரணமொன்றுந் தெரிகிறது. ஆடி ஆவணி மாஸங்களில் பயிரிட்டு அர்ப்பசி கார்த்திகை மாஸங்களில்விதைகள் எடுக்கப்படுகிறபடியால் மழையில் அடிப்பட்டுவிதைகள் கறுத்துப்போகின்றன. அதுவுமல்லாமல் எடுத்த விதைகளை நன்றாய்க் காயவைக்காமல் சட்டியில் போட்டு வைப்பதால் விதையின் முளைகள் மக்கிப் போய் முளைக்கும் தன்மை போய் விடுகிறது. ஆகையால் இதை நன்றாய்க் காயவைத்துக் காப்பாற்றி வந்தால் கோடையில் செடிவளர்த்து விதை எடுக்க வேண்டியதில்லை. நல்ல விதைக்கு லக்ஷணம் வெளுப்பாயும் நீரோட்டமாயு மிருப்பதுதான். ஒவ்வொரு அமாவாசையிலும் விதைகளை உலர்த்துவது உத்தமமென்று விவஸாயிகள் கூறுகிறார்கள். அப்படிச் செய்தால் விதைகள் பழுது போகா.

3. இப்பயிர் செய்வதற்குத் தகுந்த பூமி செம்மணல், மணல் கலந்த களிமண் பிரதேம், இவைகளே நலமென்றுத் தெரிகிறது. இப்படிச்செய்தால் கிருஷிகர்கள் நல்ல லாபமடைவார்கள் என்று நம்புகிறேன்.

என். வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

## PRIMARY EDUCATION.

### MR. S. VENKOBA CHARIAR'S LECTURE.

### மூலாதாரப் படிப்பு.

சில தினங்களுக்கு முன்பு மதுரையில் நடந்த வித்யா காட்சி சாலை திறந்த நாள் அன்று அந்த ஊர் காலேஜ் ப்ரின்ஸிபாலான எஸ். வெங்கோபா சாரியார், பி. ஏ. எப். எம். யூ. மேற்கண்ட விஷயமாக ஒரு ப்ரஸங்கம் செய்தார். அதன் சுருக்கம் பின்வருமாறு.

அவனவன் தன் தொழிலை ஸரியாக நடத்தும் பொருட்டு அதற்கு வேண்டிய அளவு கல்வி கற்க வேண்டுமென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்படிக் கற்கும் வித்தை அவனவனுடைய ஸ்வபாஷையின் உதவியைக் கொண்டு ஆகவேண்டும். எல்லா ஜனங்களும் இந்தமாதிரி வித்தையை அடையவேண்டியது அவசியம். இப்படிச் செய்வதால் அளவற்ற நன்மையுண்டு. நம்முடைய நாட்டின் ஐசுவரிய விர்த்திக்கோ, ஜனஸமூக நன்மைக்கோ, மதச் சீர்திருத்தத்துக்கோ, அல்லது இன்னும் இவை போன்ற வேறே எந்தவித நன்மைக்கானாலும்ஸரி பொது ஜனங்கள் பெரும்பாலும் மூலாதாரப் படிப்புப் படித்தவர்களாக இருக்க வேண்டும்.

மூலாதாரப்படிப்பு அத்யாவசியம் என்று கவர்ன்மெண்டார் அதைப் பரவச் செய்ய அவர்களால்கூடிய அளவு பிரயாசப்பட்டு வருகிறார்கள். 1904-ம் வருஷத்தில் அவர்கள் படிப்பு விஷயமாய் அவர்களுடைய அபிப்ராயத்தை வெளியிட்டு ஒரு ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். இந்த ப்ரசுரம் மேற்தரப் படிப்புக்கு அனுகூலமாயிராதபோதிலும், மூலாதாரப் படிப்பை யொட்டினவரையில் சிலாக்கியமாகவே இருக்கிறது.



கவர்ன்மெண்டார் புதிய ஏற்பாட்டுக்கிணங்க சில முக்கியமான சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். முதலாவது, துரைத்தனத்து வரும்படியில் முன்னைவிட அதிகமான தொகையை மூலாதாரப்படிப்பின் விருத்திக்காக செலவிட்டு வருகிறார்கள். இந்தத்தொகைப்ரைமெரி பாடசாலைகளின் க்ராண்டுக்காகவும்ப்ரைமெரி உபாத்தியாயர்களின் சம்பளத்துக்காகவும் உபயோகப்படுத்தப்படுகிறது. இரண்டாவது, ஸெகண்டரி பாடசாலைகளுக்கும் ப்ரைமெரி பாடசாலைகளுக்கும் உள்ள வித்யாஸங்களை நன்றாய் விளக்கி ப்ரைமெரிப் பள்ளிக்கூடங்கள் இன்னாருக்கென்றும் ஸெகண்டரிப் பள்ளிக்கூடங்கள் இன்னாருக்கென்றும் கவர்ன்மெண்டார் வரையறுத்திருக்கிறார்கள். கொஞ்சத்துக்குமேல் படிக்க சக்தியற்ற குழந்தைகளுக்குப்ரைமெரிப் பள்ளிக்கூடங்களும், மேலே படிப்பதற்கு சக்தியுள்ளவர்களுக்காக ஸெகண்டரி பாடசாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மூன்றாவது, ப்ரைமெரி பாடசாலைகளுக்குள்ள சட்டதிட்டங்கள் ஸெகண்டரிப் பள்ளிக்கூடங்களுக்கு உள்ளவற்றைக் காட்டிலும் லகுவாயும் அவ்வளவு கடுமையில்லாதவையாயும் இருக்கின்றன. ப்ரைமெரி பாடசாலைகளின் சங்கியையும், அவைகளின் ப்ரயோஜனமும் அதிகப்படுத்தப்பட்டு வருகின்றன. ப்ரைமெரிப்படிப்பை மேல் விசாரணைசெய்து வர தகுந்த சிப்பந்திகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன்பு கையாளப்பட்டுவந்த ரிஸல்ட் க்ராண்டுமுறையை நீக்கி இப்பொழுது ஸாலரி க்ராண்டு முறையை அனுஸரித்து வருகிறார்கள். இதனால் உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கப்படும் ஸம்மானம் முன்போல் பரீக்ஷையில் தேறின பிள்ளைகளின் எண்ணிக்கையை யொட்டியிராமல் இப்பொழுது பாடசாலையிற் படிக்கும் பிள்ளை

களின் தொகை, உபாத்தியாயர்களின் யோக்யதை, கற்றுக்கொடுக்கும் பாடங்கள் ஆகிய இவைகளுக்குத் தக்கபடி கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஏற்பாடு ஏற்கனவே நன்ருய் ஆளப்பட்டுவந்த சில ப்ரைமெரி பாடசாலைகளுக்குக் குறைந்த வரும்படியைத்தந்த போதிலும் மொத்தத்தில் நன்மையைத் தருவதாகவே இருக்கிறது.

மேலே சொன்னவை கவர்ன்மெண்டார் மூலாதாரப் படிப்பில் ஏற்படுத்திய மாறுபாடுகளிற் சிலவாகும். இவைகளைவிட முக்கியமானது ஒன்று உண்டு. அது என்னவென்ருல் இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாடங்களின் ஸ்வபாவமும் அவைகளைக் கற்றுக்கொடுக்கும் வழியும். பழையஏற்பாட்டில் நன்ருய் உபயோகப்படக்கூடிய ஸங்கதிகளிற் பாடம் சொல்லிக்கொடுக்கவில்லை; சொல்லிக்கொடுத்த வழியும் அவ்வளவு சிலாக்கியமானதல்ல. எழுத்துக்கூட்டி வாசித்தல், வாசகமெழுதுதல், கணிதம், பூகோளசாஸ்திரம் ஆகிய இவைகளோடு இன்னும் ஏதாவது ஒரு பாடம் ப்ரைமெரி பாடசாலைகளிற் கற்றுக்கொடுக்கப்பட்டு வந்தது. இவைகளைத்தவிர வெவ்வேறு இடங்களுக்குத் தகுதியான மற்ற விஷயங்களிற் பாடம் சொல்லும் ஸ்வதந்திரம் இப்பள்ளிக்கூடங்களின் மானேஜர்களுக்கு இல்லாமலிருந்தது. சொல்லிக்கொடுத்த பாடங்களில் உள்ள விஷயங்களை பையன் அறிந்துகொண்டிருக்கிருனு, கடினமான பதங்களுக்கு அர்த்தம் அவனுக்குத் தெரிகிறதா, என்றே உபாத்தியாயர்கள் கவனித்துவந்தார்கள். விஷயங்களைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பித்து வந்தார்களே ஒழிய அவைகளின் உள் விசேஷங்கள் ஒன்றையும் எடுத்து விளக்குவதில்லை.

புதிய ஏற்பாட்டின்படி, முதலாவது, புல பாடங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது, உபாத்தியாயர்களும் மானேஜர்களும் தங்களுக்கு இஷ்டமுள்ள பாடங்களை பிள்ளைகளுக்குங் கற்றுக்கொடுத்து வரலாம். மூன்ருவது, பாடங்களெல்லாம் ப்ரயோஜனப்படக்கூடியவைகள். ஆகையால் அந்தந்த இடத்துக்குத் தக்கபடி மானேஜர்கள் பாடங்களைத் தேர்ந்தெடுத்துச் சொல்லிக்கொடுத்துவர இடம் ஏற்பட்டிருக்கிறது. குறித்த் பாடங்களைத்தவிர திட்டமாய்ச் சொல்லக்கூடிய வேறு எந்தப் பாடமாயிருந்தாலும் அதையும் சொல்லிக்கொடுக்கலாம். பையன்கள் கேட்டகேள்விகளுக்குப் பதில்சொல்லுதலும், கடினமான பதங்களுக்கும் வாக்கியங்களுக்கும் அர்த்தந் தெரிந்திருப்பதும் மாத்திரம் போதாது. அவர்கள் புஸ்தகங்களிலிருந்து கற்றுக்கொண்ட விஷயங்களை ஸரியாகவும், சொற்பிழையில்லாமலும் உணர்த்தவல்லவர்களா என்று உபாத்தியாயர் பரீக்ஷித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். வாசக பாடங்களில் உள்ள விஷயங்களுக்கும் மற்ற பாடங்களில் உள்ள விஷயங்களுக்கும் பொருந்திய சம்பந்தத்தை எடுத்துக்காட்டி போதிக்க வேண்டும். இம்மாதிரி செய்தல் பிள்ளைகளுடைய புத்தி கூர்மையை அதிகரிக்கச் செய்து பொட்டை நெட்டுருச் செய்வதைத் தடுத்துவிடுகிறது.

புதிய ஏற்பாட்டில் சித்திரமெழுதல் அதிகமாக அனுஸரிக்கப்பட்டு வருகிறது. இது கைக்கும் கண்களுக்கும் பெருத்த ஒரு அப்யாஸமாகிறது. பூகோள சாஸ்திரம் முன்னேவிட சிலாக்கியமான உபகருவிகளோடு கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. தேச சரித்திரமும் துரைத்தன முறைமையும் கற்றுக் கொடுக்கிருர்கள். கிராமம், அதன் அதிகாரிகளின் அலுவல்கள், தபால், தந்தி இவைகளின் அமைப்பு, உப்பளம், முதலிய இலாகாக்

களின் முறை, இவைகளனைத்தும் பிள்ளைகளுக்கு போதிக்கப்பட்டு வருகின்றன. இயற்கையிற் காணும் பொருள்களின் விசேஷங்களை எடுத்து உபாத்தியாயர் தங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து வருகிறார்கள். பள்ளிக்கூடங்களில் சிறிய தோட்டங்கள் ஏற்படுத்தி அவைகளில் செடி கொடிகள் எவ்விதம் பயிரிடப்பட்டு வருகின்றன என்பது எல்லா மாணாக்கர்களும் நன்றாய்த் தெரிந்துக்கொள்ளும்படி உபாத்தியாயர்கள் தரிசன பூர்வமாகக் கற்பித்து வருகிறார்கள்.

பாடஞ்சொல்லும் விதத்தில் ஏற்படுத்தியிருக்கிற வித்யாஸம் கவனிக்கத் தக்கது. பள்ளிக் கூடத்தின் நான்கெல்லையிற் சொல்லப்படும் விஷயங்களுக்கும், வெளி யுலகத்தில் நடக்கும் பலவித செய்கைகளுக்கும், உள்ள ஸம்பந்தா ஸம்பந்தங்கள், பிள்ளைகளின் மனதில் நன்றாய்ப பதியும்படிக்கும், அவர்கள் அதிக ஊக்கத்தோடு முயற்சி செய்யும் பொருட்டும், விவரமாய் எடுத்துக்காட்டப்படவேண்டும். பள்ளிக்கூடத்திற் கற்றுக் கொடுக்கும் விஷயங்கள் சும்மா "ஏட்டுச் சுரைக்கா" யாகப் பயனில்லாததாகக் காணக் கூடாது

இந்தமாதிரி பல பாடங்கள் கற்றுக்கொடுக்கும்ஸாமர்த்தியம் உபாத்தியாயர்கள் அடையவேண்டுமானால் அவர்கள் எல்லாவற்றையும் படித்தவர்களாகவும் அனுபோகமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். இதை கவர்ன்மெண்டார் நன்குணர்ந்து உபாத்தியாயர்கள் ட்ரெயினிங் ஸ்கூல்களில் ஒருவருஷம் படிப்பது போதாதென்று இரண்டுவருஷங்களாக்கியிருக்கிறார்கள். இவர்களுடையும் பயிற்சியும் புதிய ஏற்பாட்டுக்குத் தக்கப்படி சீர்திருத்தப் பட்டிருக்கிறது. மேலும் ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்போன்ற உத்யோகஸ்தர்களைக் கொண்டு உபாத்தியாயர்களுக்கு அப்போதைக் கப்போது நடத்தப்படும் ப்ரஸங்கங்களினாலும் வித்யா காட்சிச்சாலைகளினாலும் போதித்து வருகிறார்கள்.

கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிற இவ்வித ஸாதனங்களுக்கு உபாத்தியாயர்கள் நன்றியறிதலுள்வர்களாக இருக்கவேண்டும். தங்கள் கடமைகளைக் குறைவற மனப் பூர்த்தியோடு செலுத்தவேண்டும். அரைமனதோடு செய்யும் காரியம் ஒன்றும் பயன்படாது. தங்கள் பிள்ளைகளுடைய நன்மையைக் கருதுவார்களானால் உபாத்தியாயர்கள் முழுமனதோடும் வேலை செய்யவேண்டும். புதிய விஷயங்களை எளிதில் கற்றுக்கொண்டு அவைகளை மாணாக்கர்களுக்கு நன்றாய் விளக்கிக் காட்டும் திறமை அவர்களுக்கு வேண்டும். "ஐந்திற் படியாதது ஐம்பதிற் படியாது" என்பதை நினைந்து பிள்ளைகளின் ஒழுக்க வழக்கங்களை நன்றாய் கவனித்து, தங்கள் ஸொந்த நன்னடத்தையினாலேயும் போதனையினாலேயும் அவர்கள் மனதிற்படும்படி போதிக்கவேண்டும். அவர்கள் ஸுகதுக்கங்களைத் தாங்களும் பாகித்துக்கொள்ளவேண்டும். நிஜம்பேசுதல், பெரியோருக்கு மரியாதைசெய்தல், ஜீவஹிம்ஸை செய்யாதிருத்தல், இவைகளெல்லாம் நன்றாய் அவர்களுக்குப் படிந்திருத்தல் உத்தமம்.

இப்படிக்கெல்லாம் அனுகூலம் செய்தும் இந்தியாவில் மூலாதாரப் படிப்புள்ள ஜனங்களின் தொகை மிகக்குறைந்ததாகவே இருக்கிறது. கவர்ன்மெண்டார் மூலாதாரப் படிப்பைச் சட்டத்தினால் கட்டாயமாக்கினால்தான் ஜனங்கள் எல்லாரும் படிப்பார்கள் என்று கனம் கோக்லே மசோதாக்கொண்டுவந்திருக்கிறார். ஆனால் இதனால் கவர்ன்மெண்டாருக்கு ஏற்படும் செலவுக்கு வேண்டிய ஏராளமான பணமில்லாமைதான் கவர்ன்மெண்டார்இந்தச் சட்டத்தை ஒத்துக்கொள்ள பெரும் தடையா

யிருக்கிறது. தவிர தனிகர்கள் ஸெகன்டரி பாடசாலைகளை ஸ்தாபனம் செய்கிறார்களே தவிர ப்ரைமெரிப் பள்ளிக்கூடங்களை அபிவிருத்தி செய்கிறார்களில்லை. ஆகவே நம்முடைய தேசத்தில் மூலாதாரப் படிப்பு விருத்தியாக வேண்டுமானால் கவர்ன்மெண்டாரும், தனிகர்களும் பணம் செலவழிக்க முன் வரவேண்டியது அவசியம்.

---

## POULTRY BREEDING.

BY

JOTI MANI.

## கோழி வளர்த்தல்.

—:o:—

(1) உலகத்தில் மனிதராய்ப் பிறந்த யாவரும் திரவியம் தேடவேண்டுமென்று ஒரு அவாக் கொள்ளல் வேண்டும். மனிதர்கள் அவரவர்களின் சக்திக் கிசைந்தவாறு வியாபாரஞ் செய்தோ, உத்யோகஞ் செய்தோ, பயிர்த் தொழில் செய்தோ, பணத்தைச் சம்பாதிக்கிறார்கள். பெரிய வியாபாரஞ் செய்து பணஞ் சம்பாதிக்க வேண்டுமென்றால் அதிகத் திரவியத்தை மூலதனமாகப் போடவேண்டும். ஒரு எளியவன் அவ்விதப் பெரிய வியாபாரம் செய்வது இயலாதகாரியம். ஆனால் அவனுக்கும் பணம் சம்பாதிக்க அனேகவழிகளிருக்கின்றன. அவைகளில் கோழி வளர்த்தல் ஒன்று.

(2) இந்த வியாபாரத்திற்கு அதிகத்திரவியம் வேண்டியதில்லை. லாபமோ அதிகம். இதுபற்றியன்றோ, "கோழிப்பணம் குருணிப் பணம்" என்று நம்மில் ஒரு பழமொழி வழங்கிவருகிறது. கொஞ்சத் திரவியத்தைக் கொண்டே அதிகத்திரவியத்தைச் சம்பாதித்தவர்கள் அனேகர் உளர்,

(3) ஒரு ஏழைக் குடியானவன் ஒரு ரூபாயை முதலாக வைத்துக் கொண்டு இந்த வியாபாரத்தைத் தொடங்கி விடலாம். இவன் இந்த ஒரு ரூபாய்க்கு இரண்டு பெட்டைக் கோழிகளும் ஒரு சேவலும் வாங்கலாம். மூன்று மாதத்திற்கு ஒருதடவை ஒவ்வொரு கோழியும் தினம் ஒன்றாக 7 அல்லது 8 முட்டைகளுக்குக் குறையாமலும் 10 அல்லது 12 முட்டைகளுக்கு மேற்போகாமலும் இடும். இப்படியாக ஒரு கோழியானது ஒருவருஷத்திற்குள் ஸராஸரி 40 முட்டைகளிடும். இந்த இரண்டு கோழிகளும் வருஷத்திற்கு 80 முட்டைகள் இடுகின்றன. இவைகளை முட்டையாக விற்றால ஒரு ரூபாய்க்கு விற்கலாம். இப்படி இல்லாவிட்டால் இந்த முட்டைகள் பொரித்துக் குஞ்சுகளை ஆறுமாதகாலம் வளர்த்து விட்டால் குறைந்தது பதினைந்து ரூபாய்க்கு விற்கலாம். இவ்விதமாக இரண்டு வருஷத்திற்குள் ஒரு ஏழைக் குடியானவன் ஒரு ரூபாய் முதலைக்கொண்டு முப்பது ரூபாய அடையலாம். ஒரு குடியானவன் வீட்டில் பத்துக்கோழிகள் இருந்தால் அந்தக்குடும்பம் அதில் வரும் லாபத்தைக் கொண்டே ஸம்ரக்ஷணை செய்துக்கொள்ளக் கூடும். இதைப் போல் இவ்வளவு குறைந்தமுதல் போடக் கூடியதும் இவ்வளவு லாபம் தரக்கூடியதும் வேறொரு வியாபாரம் உளதோ? இல்லையென்றே நிச்சயமாகச் சொல்லலாம். ஆகையால் இந்த வியாபாரத்தை எளியவர்கள் செய்யலாம்.

(4) கோழிகள் ஏழைகளுக்கு ஒருஜீவனோபாயத்தைக் கொடுக்கிறது மல்லாமல் அவர்களுக்கு இன்னும் அனேக விதத்தில் நன்மையைச் செய்கின்றன. முதலாவது, குடியானவர்கள் தங்கள் வீட்டுக் கொல்லைகளில் பயிர் செய்கிற சிறிய காய் கறிச் செடிகளுக்கு நாச

த்தை விளைவிக்கிற சிறிய பூச்சி புழுக்களை இவைகள் கொன்று தின்று விடுகிறபடியால் அக்கொடி செடிகள் ஒரு விதக் கெடுதலுமின்றி வளர்ந்து அவைகளைப் பயிர் செய்தோர்களுக்கு தக்கபலனை அளிக்கின்றன. இரண்டாவது, இக்கோழிகள் வெளியிடும் மலமானது அவர்கள் பயிரிடுகிற செடிகளுக்கு நல்ல எருவாகிறது.

(5) மேலும் மற்றைய வீட்டு ஜெந்துக்களுக்கு ஆகாரந் தேடுவதில் சிரமப் படுவது போல் இக்கோழிகளின் ஆகார விஷயமாக அதிகப்பணச் செலவுமில்லை, சிரமுமில்லை. கோழிகளுக்கு அனேக விதமாய் கெடுதல் உண்டாகின்றன. இவைகளைப் பருந்துகள், காட்டுப் பூனைகள், நரிகள் இவைகளிலிருந்து ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும்.

சகோதரர்களே! நீங்கள் உங்கள் பக்கத்தில் வஸிக்கும் ஏழைக் குடியானவர்கள் இக்கோழி வளர்த்தலை ஒரு தொழிலாகக் கொள்ளுமாறு உபதேசிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். டென்மார்க் தேசத்தார்கள் தங்கள் நாட்டில் உண்டாகிற முட்டைகளை அயல் நாடுகளுக்கனுப்பி எவ்வளவு லாபத்தை அடைகிறார்கள்! நாம் ஏன் அவ்விதம் செய்யக் கூடாது? நம் நாட்டிற்கு வரும் ஐரோப்பியர்களும் நம் தேசத்தில் இருக்கும் சிலவகுப்பினர்களும் முட்டைகளையும் கோழிகளையும் உண்பதினால், ஏழைக் குடியானவர் முட்டைகளையும் கோழிகளையும் அவர்களிடம் விற்று அதனால் வரும் திரவியத்தைக் கொண்டு தங்கள் வாழ்நாளைச் சந்தோஷமாய்க் கழிக்கக் கூடும். இவ்விதமாய் அனேக சிறிய தொழில்கள் இருக்கின்றன. அவைகளை நமது "பிழைக்கும்வழி"யில் ஒவ்வொன்றாய் எழுதி வெளியிடுகிறேன்.

ஜோதிமணி.

## AHALYA BAI.
## அகல்யாபாய்.

பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த ஆமட் நகர் ஜில்லாவில் பதார்த்தி என்னும் ஒரு கிராமம் உண்டு. அந்த கிராமத்தில் சற்றேறக் குறைய 180 வருஷங்களுக்கு முன்னே மஹாராஷ்ட்ர ஜாதியில் பயிர் செய்து ஜீவனம் செய்து கொண்டிருந்த ஆனந்தராவ் ஷந்தி என்று பெயர் பூண்ட ஒருவன் வஸித்து வந்தான். அவனுக்கு வெகுகாலமாக புத்ரஸந்தானமில்லாமல் கடைசியாக ஒரு ஸாதுவின் அனுக்கிரஹத்தால் அருகிலிருந்த கோலாப்பூரில் ஜகதாம்பாள் அம்மனை ஒரு வருஷகாலம் தரிசனம் செய்து வந்ததின்பேரில், அம்பாள் கடாக்ஷத்தால், அவன் மனைவி கர்ப்பவதியாகி, கிரமப்படி ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தைக்கு 'அகல்யாபாய்' என்று நாமகரணம் செய்தார்கள். ஆனந்தராவ் குழந்தைக்கு படிப்பு முதலியவைகளுக்கு மார்க்கமுண்டாக்கி 9 வயதானவுடனே அவளுக்கு விவாஹம்செய்ய எத்தனித்தான். அநேக இடங்களில் அலைந்தும் குழந்தைக்கு ஸரியான புருஷன் அகப்படவில்லை. கடைசியாக தன்னால் முடியாமல்போகவே, ஸ்வாமியிடம் பாரத்தை ஒப்புவித்துவிட்டு வீடுவந்து சேர்ந்தான்.

இவ்விதம் இருந்துகொண்டிருக்கையில் ஒருதடவை, ராகோபாபீஷ்வாவும், மல்ஹார்ராவ் ஹோல்காரும் ஏதோ ஓரிடத்தில் கலகத்தை அடக்கிவிட்டுத் திரும்புகிறவர்களாய் பதார்த்திகிராமத்தில், ஆனந்தராவ் வீட்டுக்கு எதிரிலிருந்த மாருதி (வாயு) ஆலயத்தில் தங்கும்படி நேரிட்டது. தற்செயலாய் மல்ஹார்ராவ் ஹோல்கார் அகலயாபாயைப் பார்த்தார். அவளது பெருந்தன்மையையும், நகையையும், அழகையும் மெச்சினவனாய், அருகிலிருந்த அகல்யாபாயின் பழைய வாத்தியாரிடம் அவளது வரலாற்றை விசாரிக்கவே, அவள் இன்னாளென்று தெரிந்துகொண்டு, தனது புத்ரன் காந்திராவுக்கு அவளைக் கல்யாணம் செய்ய வேண்டுமென்று இச்சைப்பட்டு, ராகோபாபீஷ்வாவிடம் தனது அபிப்பிராயத்தை வெளியிடவே, அவரும் ஸம்மதித்தார். உடனே ஆனந்தராவையும் அழைத்து தனது விருப்

பத்தைத் தெரிவிக்க, அவரும் ஸம்மதித்தார். கூடவே காந்திராவும் வந்திருந்தான்: மல்ஹார் ராவ் ஹோல்காரின் இச்சைபடியே காந்தி ராவுக்கும் அகல்யாபாய்க்கும் விவாஹம் நடந்தது. கொஞ்ச காலத்துக்குப் பிற்பாடு அகல்யாபாய் இண்டூரில் தன் புருஷன்வீடு போய்ச சேர்ந்தாள்.

அகல்யாபாய் தன் புருஷன் வீட்டில் இருந்த விதத்தைப்பற்றி இங்கே கொஞ்சம் எழுதுவது தகுதியாகும். மாமனுரோ வயதானவர், அடிக்கடி தனது சேனுதிபதிகளிடம் கோபித்துக்கொள்வார். அந்த ஸமயங்களிலெல்லாம் அகல்யாபாய் தனது மிருதுவான பேச்சால் அக்கோபத்தை சாந்தப்படுத்துவாள். அவருக்கு வேண்டிய பணிவிடைகளை குறைச்சலின்றி செய்வாள். எப்பொழுதும் மல்ஹார்ராவ் அகல்யாபாயைக்கண்டால் உயிராயிருப்பார். அவளிடத்தில் வெகு ப்ரியம். மாமியார்கௌதமாபாய்அஹங்காரமும்,கர்வமுமுள்ளவள். அடிக்கடி அகல்யாபாயை கோபித்துக்கொண்டாலும் அந்த ஸமயங்களிலெல்லாம் அகல்யாபாய் தணிந்து போவதே வழக்கம். தான் ஒரு பெரிய அதிபதியின் நாட்டுப் பெண் என்று கர்வங்கொண்டு அரண்மனையில் இருக்கும் வேலைக்காரர்களை கடிந்து வேலை ஏவுவதே கிடையாது. ஆகவே அரண்மனையில் இவளைக் கண்டால் எல்லாருக்கும் வெகு ப்ரியம். தான் போஜனம் செய்து ஓழிந்த வேளையில் புராணங்களையும், ராமாயணம், பாரதம் முதலான ஸத்கதைகளையும் பாராயணம் செய்து அவைகளில் சொல்லியிருக்கிற விதிப்ரகாரமே நடப்பாள்.

இப்படிக் காலம் கழித்துகொண்டிருக்கும் பொழுது ஒரு தடவை தேசத்தின் ஒரு மூலையில் ஜாட்ஸ் என்னும் கொடிய ஜாதியார் ஜனங்களுக்கு பொறுக்க முடியாத ஹிம்ஸையைச்செய்துகொண்டிருந்ததால் மல்ஹார்ராவ் காந்திராவைக் கூப்பிட்டு ஜாட்ஸுகளை அடக்கி விட்டு வரும்படியாக உத்தரவிட்டார். அப்படியே காந்திராவ்போய் அவர்களோடு யுத்தம் செய்ததில், கடைசியில் யுத்தத்தில் மடிந்து போய்விட்டான்.

ஸமாசாரம் அகல்யாபாய்க்கும் மல்ஹார்ராவுக்கும் எட்டியது. என்னசெய்வாள் பாவம்! கையில் மாலிராவ் என்று ஒரு பிள்ளையும். மதஸ்யாபாய் என்று ஒருபெண்ணும் இருந்தன. மஹாபதிவிரதையாதலால் தானும் உயிரை விட்டு விடுவதாகத் தீர்மானித்தாள். இதை கேட்டவுடன், ஒருநாளும் கண்ணீர் சொரியாத கண்ணில், தாரை தாரையாக நீர் ததும்பினவராய், மல்ஹார்ராவ் அகல்யாபாய் அருகில்வந்து 'குழந்தாய், காந்திராவோ என்னை பிள்ளையில்லாதவனுக விருத்தியாப்யத்தில் விட்டுவிட்டுப் போய்விட்டான். அவன் போய் விட்டானென்றால் நீ இருக்கிறுய், உன் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாகிலும் உயிர் வைத்திருப்போம் என்று எண்ணினேன். ஆனல் நீயும் உயிரை மாய்த்துக்கொள்வதாகத் தீர்மானித்திருக்கிறபடியால், நானும் உயிரை விட்டுவிடுகிறேன்,'' என்று அழவே, அகல்யாபாய் அவரைப்பார்த்து இரக்கப்பட்டவளாய், தன துக்கத்தை ஒருவிதமாய் அடக்கிக்கொண்டு, மனஸை ஸ்திரப்படுத்திக் கொண்டாள்.

மல்ஹார் ராவ் கிழவரானபடியால் ராஜ்யத்தைப்பற்றி அகல்யாபாயே கவனிக்கும்படி நேர்ந்தது. அவர் அகல்யாபாயை விட்டு விட்டு அடிக்கடி யுத்தங்களுக்குப் போய்விடுவார். அந்தக் காலங்களிலெல்லாம், ராஜ்யத்தின் கணக்கில் ஒன்றும் பிசகில்லாமலும், அதிகப்படி செலவு ஒன்றும் செய்யாமலும், நீதி ஸரிவர செலுத்தினவளாய், அபவாதத்துக்கு இடமில்லாமல் தானே நேரில் எல்லாக் கணக்குகளையும் பரிசோதித்து வருவாள். இந்தவிதமாக ராஜதந்திரங்களைத் தெரிந்துகொண்டாள். இப்படி ஒருதடவை மல்ஹார் ரராவ் வழக்கம்போல் எங்கேயோ போய் யுத்தம் செய்துவிட்டுத் திரும்பி வரும்பொழுது அலம்பூர் என்னும் ஊரில் தேகத்தில் யுத்தம்செய்த சிரமம் ஜாஸ்தியாயிருந்தபடியாலும், வயதாகிவிட்டபடியாலும் இறந்துபோய்விட்டார். அவர் இறந்துபோய் விடவே, ஸரியானவார்ஸான அகல்யாபாயின் புத்ரன் மாலிராவை ஸிம்மாஸனத்தில் வீற்றிஞர்கள். ஆனல அவன் ஸிம்மாஸனமேறின மாதமே இறந்துபோய் விட்டான். ராஜ்யத்தில் வேறு ஒருவரும் ஆளத்திறமை உடையவர்கள் கிடையாது. அகல்யபாய் ஒருத்திதான். பர்த்தாவையும் சாகக்கொடுத்தாள். பிள்ளையையும் சாகக்கொடுத்து விட்

டாள். அவளுடைய துக்கத்துக்கு ஒரு அள வில்லை. தைரியசாலியானதாலும் படித்த வளானதாலும் எல்லாவற்றையும் பொறுத் துக்கொண்டு தானே ராஜ்யத்தை ஆளுவதாக ஒப்புக்கொண்டாள்.

இவள் ஆளத்துவக்கினதில் எல்லாருக்கும் த்ருப்திதான. என்றாலும், மந்திரிகளில் ஒரு வனான கங்காதர் ஜஸ்வண்டுக்கு மனமில்லை. எப்பொழுது ஸிம்மாஸனத்தில ஒருகுழந்தை உட்கார்ந்து, நாம் கார்டியனாயிருந்து நமக்கு வேண்டிய ஐசுவரியத்தைச் சேர்த்துக் கொள ளப்போகிறோம் என்றே துர் எண்ணம் கொண்டிருந்தான். இப்பொழுது அகல்யா பாய் ஆளத்துவக்கிவிட்டபடியால், தன் விருப்பப் படியெல்லாம் அவள் இணங்கமாட் டாளென்று தெரிந்து பின் வருமாறு அவ ளுக்கு ஒரு நிருபம் எழுதினான்.—

"தாங்களோ பெண். பெண் சொல்லுகிற வார்த்தையை ப்ரஜைகள் மதிக்கமாட்டார் கள். தாங்கள் ராஜ்யத்தை ஆளுவதும் கஷ்ட மாயிருக்கும். தங்களுடைய பூஜை முதலிய வற்றிற்கு குந்தகம் ஏற்படும். ஆகையினால் தங்கள் குலத்தில் யாராவது ஒருகுழந்தையை ஸிம்மாஸனத்தில் உட்காரவைத்து, என்னை கார்டியனாக்கைத்தால், ஸரிவரப் பார்த்துவரு வேன். தாங்கள் இதன்படி நடக்க இஷ்டமில் லாவிட்டால் சத்துருக்கள் வந்து தங்கள் ராஜ்யத்தைக் கொள்ளையடித்து விடுவார்கள்."

இதைப் பார்த்தவுடன் அகல்யாபாய் புன் சிரிப்புக் கொண்டவளாய் பதில் எழுதினாள். "நான் ஒரு ராஜாவுக்கு பத்னி, ராஜாவுக்குத் தாயார். அப்படியிருக்க எனக்குமேலே ஒரு ராஜாவை நான் எப்படி வைப்பேன். நான் தான் ஆளுவேன். வேறொருவரும் என் உத் தரவன்னியில் ராஜாவாக முடியாது."

கங்காதர் ஜஸ்வண்டு தன் கார்யம் பலிக்கா ததைநோக்கி பேஷ்வாவுக்கு அவஸரமாய் ஒரு கடிதம் எழுதி, "உடனே ஒருஸைன்யத்தைச் சேர்த்துக் கொண்டுவந்து இந்தூரைத் கைப் பற்றிக்கொள்ளவும். கேவலம் ஒரு ஸ்திரீதான் ஆண்டுக் கொண்டிருக்கிறாள். சிரமமேயிராது" என்று எழிதினான். பேஷ்வாவுக்கு மாமனான ராகோ என்னப்பட்டவன் இந்தக் கார்யத்தை ஸாதிக்கப் புறப்பட்டான். இது விஷயம் அகல்யாபாய்க்கு எட்டவே, உடனே ராகோவு க்கு "உன்தலையில் நீயே கல்லைத்தூக்கிப்போட் டுக்கொள்கிறாய். உன்கெட்ட எண்ணமுள்ள கார்யத்துக்கெல்லாம் அனர்த்தமே விளையும். இந்த ராஜ்யம் என்னுடையதுதான். நான் இருக்கும் வரையில் என்னுடையதாகவே இருக்கும்," என்று ஒருகடிதம் அனுப்பினாள். இதைப்பார்த்ததும் ராகோவானவன் "மல் ஹார் ராவ்பேஷ்வாவுக்குள்ளிருந்தான். அவன் போனவுடன் இவளுக்கு இவ்வளவு கர்வம் வந்திருக்கிறது, இவள் கர்வத்தை அடக்கு கிறேன்" என்று சபதம் கூறினான். நிற்க.

அகல்யாபாயும் யுத்தத்துக்குத் தயாரா னாள். ப்ரதம தளகர்த்தனை துக்காஜியை அழைத்து அவனிடம் யோசனைகேட்க அவ னும் யுத்தமே கொடுப்போம் என்று சொன் னான். உடனே அகல்யாபாய், பான்ஸ்லே, கெய்க்வார், ஸிந்தியா முதலானபேர்களை உதவிபுரியும்படி வேண்டிக் கொண்டாள். அந்தப் பிரகாரமே பான்ஸ்லே தானே நேரில் ஒரு ஸைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு இந் தூர்வந்து சேர்ந்தார். கெய்க்வார் 20,000 குதிரை வீரர்களை யனுப்பினர். ஸிந்தியாவும் ஒருபெரிய ஸைன்யத்தை யனுப்பினர். ராகோவும் வந்து சேர்ந்தான். அகல்யாபாய் தன்னிடம் சரணம் அடைவாள் என்று நினைத் திருந்தான். ஆனால் ஸைன்யத்தைப் பார்த்த வுடன் ஆச்சர்யப் பட்டும், பயப்பட்டும் ஒன் றும் செய்யத் தோன்றாதவனாய் நின்றான். பின்னால் போனால் அவமானம். முன்னால் போனால் தன்உயிர்ச்சேதம். ஆகவே ப்ரமித்த வனாய் பின்வருமாறு ஒருகடிதம் துக்காஜிக்கு எழுதினான்: "மாலிராவ் இறந்து போனான் என்று கேள்விப்பட்டு துக்கம் விசாரிக்க வந்தேனே ஒழிய யுத்தம் செய்யவரவில்லை. அப்படியிருக்க ஊருக்குள் பிரவேசிக்க முடி யாமல் ஸைன்யத்தை முன்னால் நிறுத்தியிருக் கிறீர்களே." உடனே துக்காஜியும் "நீசொல்லு கிறது உண்மையானால கார்யத்தால் ரூபித்துக் காண்பி" என்று பதில் எழுதினான். அப்ப டியே ராகோவும் தன்னுடன் 4, 5 பேரை மட்டும் கூட்டிக்கொண்டுவர துக்காஜி அவனை அழைத்துக் கொண்டு அகல்யாபாயிடம் கொண்டுபோய் விட்டான். ராகோ அகல்யா பாய் பேசுகிற ஸாமார்த்தியத்தையும் ராஜ்ய விவஹாரங்களில் அவளுக்கிருக்கிற புத்தியை

யும்பற்றி ஆச்சர்யப்பட்டு, அவளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு வெட்கினவனுய் ஊர் போய்ச்சேர்ந்தான்.

அகல்யாபாயின் தினஸரி வேலையைப் பற்றிக் கொஞ்சம் கவனிப்போம். தினம் காலை 5 மணிக்கு எழுந்துவிடுவது வழக்கம். உடனே ஸ்நானம்செய்து காலை பூஜை முதலியவைகளை முடித்துக்கொண்டு, பிற்பாடு ராமாயணம் பாரதம் முதலியவைகளைப் பாராயணம் செய்வாள். எல்லாம் முடிந்த பிற்பாடு தன் கையினுலெயே பரிமாறி ப்ராம்மணுளுக்கு அன்னமிட்டு தான் போஜனத்துக்கு உட்காருவாள். அப்புறம் கொஞ்சம் நாழிகை சிரம பரிஹாரம் செய்துகொண்டு தர்பார் ஹாலுக்குப்போய் ஒரு ராஜாசெய்யவேண்டிய வேலையையெல்லாம் செய்வாள். யார்வந்தாலும் பேட்டிகொடுப்பாள். ஸாயங்காலமானவுடன், ஸாயங்கால பூஜையானதும், கொஞ்சம் சிற்றுண்டி செய்து விட்டு வெளியே வரும்பொழுது மந்திரிகள் காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களிடம் பேசவேண்டியதைப் பேசிவிட்டு, பிற்பாடு 11 மணிக்கு நித்ரைக்குப் போவாள். இவள் ஆண்டவரையில் ராஜ்யத்தில் ஒரு கலகமாவது யுத்தமாவது கிடையாது. ஒரு ஸமயம் துக்காஜி ஜெய்பூருக்குஒரு கடன் விஷயமாகப் போகவேண்டியிருந்தது. அவ்விடத்தில் அவனை ஜெய்பூரார் அடித்து விட்டார்கள். உடனே அகல்யாபாய்க்கு பணத்துக்கும் ஸைன்யதுக்கும் எழுதினுன். அப்பொழுது அகல்யாபாய்க்கு வயது 58 இருக்கும். பின் வருமாறு பதில் எழுதினுள். 'உனக்கு வேண்டியபணமும், ஸைன்யமும் அனுப்பியிருக்கிறேன், ஆகையினுல் யுத்தம்செய்து ஜெயிக்க வேண்டும். உன்னுல் முடியாவிட்டால் நான்வந்து யுத்தம் செய்து ஜெயிக்கிறேன்.' பாருங்கள் இவள் மனேதைர்யத்தை, அவ்வளவு வயதாகியும் மனேபலம் போகவில்லை.

மல்ஹார்ராவ் இறந்துபோகும் காலத்தில் கஜானுவில் 16 கோடி ரூபாயிருந்தது. ராஜ்ய வரும்படி செலவுக்குப் போதுமானது என்று கண்டதும், அந்த 16 கோடியையும் ஸ்வாமி கிருஷ்ணபகவான் பேருக்கு எழுதிவைத்துவிட்டாள். இந்த ஸமயம் ராதோவுக்கு தரித்ர திசையாயிருந்த படியால் அகல்யாபாய்க்கு எழுதினுன், உடனே அகல்யாபாய்: "இத்தனை நாள் வரையிலும் தொடாதபணம் ஸ்வாமி பேருக்கு எழுதிவைத்தாய் விட்டது. அதிலிருந்து ஒரு ரூபாய்கூட எடுக்கமுடியாது. ஆனுல் நீ ப்ராமணன், அவ்வளவு அவசியமாயிருந்தால், உனக்கு யாசகம் கொடுக்கிறேன்" என்றுபதில் எழுதினுள். ராதோ இந்தக் கடிதத்தைப்பார்த்ததும் ரொம்பவும் கோபம் கொண்டவனுய் 'நான் யாசகம் வாங்குவதர்கு பிச்சைக்காரனல்ல, எனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ள நானே நேரில் வருகிறேன்" என்று அகல்யாபாய்க்கு எழுதினுன். உடனே அகல்யாபாய் புருஷன் மாதிரி உடுப்பணிந்து தன்னுடன் கூட 500 ஸ்திரீகளையும் அழைத்துக் கொண்டுபோய் யுத்தகளத்தில் நின்றுள். ராதோவந்து பார்த்ததும் 'ஸைன்யம் எங்கே' என்றுகேட்டான். உடனே அகல்யாபாய், 'முன்காலங்களில் நாமெல்லாரும் பீஷ்வாவுக்கு அடிமையாயிருந்தவர்கள் தான். யுத்தத்தில் ஜெயித்து விட்டாயானுல் என்னுடைய ராஜ்யமுழுவதும் உன்னுடையது. இல்லாவிட்டால் ஒருகாசு கூடத்தொடமுடியாது, ஏனென்றுல் தர்மமே எல்லாவற்றிலும் மேலானதனம். அந்த தர்மத்தை நான் காப்பாற்றவேண்டும்,' என்று சொல்லவே, ராதோ வெட்கினவனுய் தான் வந்தவழியே திரும்பிப் போனுன்.

அகல்யாபாயின் ராஜ்ய தந்திரம் ஒருவருக்கும் வராது. அவளுடைய ஸாமர்த்தியம் அபாரம். அவள் ஆண்டகாலத்தில் தேசத்தில் வியாபாரம் பலமாய் நடந்தது. குடியானவர்களெல்லாம் ஒற்று வாழ்ந்தார்கள். திருட்டு, களவு, அதிகமாய்க் கிடையாது. ஒவ்வொரு கேஸையும் தானே விசாரித்துத் தீர்ப்பு, சொல்லுவாள். ஏழைகளை ஆதரிப்பாள். அந்தியகாலத்தில் ஒரு பெரிய துக்கம் அவளுக்கு வந்துசேர்ந்தது. முன்னுலேயே சொன்ன அவள் புத்ரியான மத்ஸ்யாபாயின் பர்த்தா ஜஷ்வந் ராவ் இறந்துபோனதும் மத்ஸயாபாயும் அவனுடன் உடன்கட்டை யேறிவிட்டாள். இது ஒன்றுமாத்திரமே அவளுக்கு அந்திய காலத்தில் துக்கம் உண்டாக ஏற்பட்டது. அகல்யாபாய் தனது 70 வதுவயதில் பரலோகம் சேர்ந்தாள் என்பதாக சரித்ரங்கள் மூலமாய்த் தெரிகிறது. அவளை இப்பொழுதுங்கூட மஹராஷ்ட்ரர் தெய்வமாக ஆராதித்து வருகிருர்கள்.

## SELECTIONS.

## விசேஷத்திரட்டு.

### A CATECHISM ON SANITATION.

BY

C. T. H. JOHNSON I. C. S.

### ஸுகாதாரத்தைப்பற்றி வினாவிடைகள்.

வினா.—வியாதிக்கு முக்கிய காரணமென்ன?

விடை.—வியாதிக்கு முக்கிய காரணம் அழுக்கு.

வினா.—அதெப்படி?

விடை.—எப்படி எனில் வியாதிகள் பெரும்பாலும் அழுக்கைச் சாப்பிடும் மிகச் சிறிய பூச்சிகளால் உண்டாகின்றன.

வினா—பூச்சிகள் என்பவை என்ன?

விடை.—நமது கண்ணுக்குத் தெரியாத அவ்வளவு சிறிதாயிருந்தாலும் தேகத்திற்கு அதிக துன்பத்தைக் கொடுக்கக்கூடிய சிறு பூச்சிகள் என்னலாம்.

வினா.—அவைகள் எப்படித் தீங்கு செய்கின்றன?

விடை.—காலராப் பூச்சிகள் மிக வேகமாய் வயிற்றிலும் குடலிலும் பெருகி வயிற்றெரிச்சலையும் வயிற்று வலியையும் உண்டாக்குகின்றன. விஷஜுர முண்டாக்குகிற பூச்சிகள் ரத்தத்துடன் சேர்ந்து ரத்தத்திலுள்ள சிவப்பு வஸ்துக்களைச் சாப்பிடுவதினால் ரத்தம் விஷ ஸம்பந்தப்பட்டு ஜுரமுண்டாகிறது. மற்றப் பூச்சிகள் வெவ்வேறு விதமாய்த் தீங்குசெய்கின்றன. ஆனால் எல்லாப் பூச்சிகளும் கெடுதலையும் அடிக்கடி மரணத்தையும் உண்டாக்குகின்றன.

வினா.—அப்படியானால் அழுக்கினால் எவ்விதம் வியாதியுண்டாகிறது?

விடை.—எப்படியெனில் இந்தப் பூச்சிகள் அழுக்கில் மறைந்திருந்தே அதைச் சாப்பிட்டு வருகின்றன. நமது வீட்டிலாவது தேகத்திலாவது அழுக்கிருந்தால் அதின் வழியாய் அந்தப் பூச்சிகள் சுலபமாய் நமது தேகத்தினுட்சென்று வியாதியையுண்டாக்குகின்றன.

வினா.—அழுக்கை விலக்கத்தகுந்த வழிகளென்ன?

விடை—நமது உடைகளையும் உடம்பையும் சுத்த ஜலத்தில் அடிக்கடி கழுவவேண்டும்.

வினா.—சுத்தஜலம் அகப்படாவிட்டால், என்ன செய்யவேண்டும்?

விடை.—தண்ணீரைக் கொதிக்கவைத்து பிறகு உபயோகிக்கவேண்டும்.

வினா—தண்ணீரைக் கொதிக்கவைப்பதினால் என்னபயன்?

விடை.—அதைக் கொதிக்கவைப்பதினால் அதிலுள்ள பூச்சிகள் இறந்துபோகின்றன.

வினா.—தண்ணீரை வெதுவெதுப்பாய் மட்டும் சுடவைத்தால் போதுமா?

விடை.—அது கொஞ்சமேனும் பிரயோசனமில்லை. அப்படிச் செய்வதினால் அதிகக் கெடுதியுண்டு.

வினா.—அதெப்படி?

விடை.—அப்படி தண்ணீரை வெதுவெதுப்பாய்ச் சுடவைப்பதினால் அதிலுள்ள பூச்சிகளுக்கு ஸுகமான ஸ்நானத்தைகொடுப்பது போலாகிறது. வெதுவெதுப்பான தண்ணீரில் ஸ்நானம் செய்த ஒருவன் களைப்பு நீங்கிச் சுகம் பெறுவதுபோல் அதிலுள்ள பூச்சிகளும் உற்சாகத்தையடைகின்றன.

வினா.—அப்படியானால் தண்ணீரைக் கொதிக்கவைப்பதினால் என்ன தான் பிரயோஜனம்?

விடை.—கொதிக்கும் தண்ணீரில் முழுகிய மனிதனிறந்து போய் விடுவதுபோலவே அதிலுள்ள பூச்சிகளும் இறக்கின்றன.

வினா—வீட்டிலும் கொல்லையிலுமுள்ள அழுக்கைப் போக்கிவிட முக்கியமான வழி என்ன?

விடை.—அக்கம் பக்கத்தார்களுக்குக் கெடுதலுண்டாக்காமல் எரியக்கூடிய அசுத்தங்களை வீட்டிற்குக் கொஞ்ச தூரத்துக்கப்பால் சுட்டெரித்து விடவேண்டும்.

வினா—எரிக்கக்கூடாத அசுத்தங்களை என்னசெய்யவேண்டும்?

விடை.—வீட்டிற்கப்பால் கொஞ்ச தூரத்திலுள்ள காய்ந்த தரைக்கு அவைகளைக் கொண்டுபோய் ஒரு அடி ஆழம் பள்ளம் தோண்டி அதில் அவைகளைப் புதைத்து மண்ணால் மூடிவிடவேண்டும்.

வினா—இப்படிச்செய்வது காய்ந்த தரைக்குக்கெடுதலை யுண்டுபண்ணாதா?

விடை.—இப்படிச் செய்வதானது பூமிக்கு அதிக மாசூலைக் கொடுக்கும்படியான உரத்தைக் கொடுக்குமேயல்லாமல் கெடுதலை யுண்டுபண்ணாது.

வினா.—அப்படியானால் பூமியும் அதில் விளையும் மாசூலும் அசுத்தமாயிராதா?

விடை.—ஒருபொழுதும் அப்படியிருக்காது. ஆனால் அசுத்தம் பூமியோடு சேர்ந்து அதற்கு வளத்தைக்கொடுத்து அதை நல்ல நிலமாகச்செய்யும்.

வினா.—அது எப்படி அழுக்கு நன்மையைக் கொடுக்கும்?

விடை.—அது எப்படியென்றால் தன் இடம் விட்டு வேறு இடம் மாறிய வஸ்துவுக்குத்தான் அழுக்கு என்றுபெயர் இடம்மாறாமல் தன்னிடத்திலேயே இருந்தால் அது அழுக்கல்ல.

வினா.—தயவுசெய்து அதை விவரிக்க வேண்டும்?

விடை.—நல்லது, ஒரு பையனுடைய நகத்திலாவது தலை மயிரிலாவது மணலிருந்தால் அதை அழுக்கென்கிறோம். ஆனால் அது சுண்ணாம்புச்சாந்துடன் சேர்ந்திருக்கும் பொழுது அம்மணல் நல்ல பிரயோஜனத்தைக் கொடுப்பதால் அப்போது அது அழுக்கல்ல. அதேமாதிரி பசுவின்சாணம் கொல்லையிலாவது ஒரு பையனுடைய துணிகளிலாவதிருந்தால் அது அழுக்கு. ஆனால் வயலிலிருந்தால் அது ரொம்பவும் நல்ல எரு. அப்போது அதை அழுக்கென்று சொல்லக் கூடாது.

## காலரா.

வினா.—காலரா உண்டாவதற்குக் காரணம் என்ன?

விடை.—காலராவானது நாம் சாப்பிடும் ஆகாரம், தண்ணீர் இவைகளுடன் சில பூச்சிகள் நமது வயிற்றுக்குட் போய் அதினால் வயிற்றெரிச்சல், வயிற்றுவலி, மரணம் இவைகளை உண்டாக்குகின்றன.

வினா.—இப்பூச்சிகள் எப்படி வருகின்றன?

விடை.—இப்பூச்சிகள் ஸாதாரணமாய்தண்ணீரிலிருந்து நமக்கு வருகின்றன. முக்கியமாய் ஆற்றில் முதலில் வரும் வெள்ளத்தினாலும் மழையினாலும் வருகின்றன.

வினா.—அதெப்படி?

விடை.—எப்படி யெனில் கோடைகாலத்தில் ஆறுகளின் கரைகளிலும் குளங்களின் கரைகளிலும் எல்லாவிதமான ஆபாஸங்களும் ஜனங்கள் செய்கிறபடியால் மழையும் வெள்ளமும் வரும்போது இவ்வாபாஸங்களை

யெல்லாம் அடித்துக்கொண்டு வருகிறது. இவ்வாபாஸங்களில் காலராப்பூச்சிகள் வஸிக்கின்றன.

வினு.—இந்த காலங்களில் நாம் எப்படி காலராவைத் தடுக்கமுடியும்?

விடை.—நாம் உபயோகப்படுத்தும் தண்ணீரை கொதிக்கவைத்து உபயோகித்தால் தடுக்கலாம். நாம் சாப்பிடும் பாலை நன்ருய்க் காய்ச்சி சாப்பிடுவதினுலும் சமைத்த சாதத்தை மாத்திரம் சாப்பிடுவதினுலும் அதைத் தடுக்கலாம்.

வினு.—இது எதற்காக?

விடை.—ஏனென்ருல் நாம் சாப்பிடும் பாலிலாவது தண்ணீரிலாவது ஆகாரத்திலாவது மேற்சொல்லிய பூச்சிகளிருந்தால் சமைக்கும்போதும் நன்ருய்க் காய்ச்சும்போதும் அவைகள் செத்துப்போய்விடும்.

வினு.—நமது கிராமத்திற்கு காலரா வந்தால் அதைத் தடுக்க என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டும்?

விடை.—வீடுகளையும் கொல்லைகளையும் அதிக சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். எல்லா அசுத்தங்களையும் கொஞ்சதூரத்திற்கப்பால் கொளுத்தியாவது புதைத்தாவது விடவேண்டும். நாம் சாப்பிடும் எல்லா பதார்த்தங்களையும் சமைத்துச் சாப்பிடவேண்டும். எல்லா தண்ணீரையும் கொதிக்கவைத்து உபயோகிக்கவேண்டும். நம்மில் யாருக்காகாவது வயிறிளகினுல் அதை தடுக்க ஏதேனும் மருந்து சாப்பிடலாம்.

வினு.—என்ன மருந்து?

விடை.—ஆஸ்பத்திரி மருந்தையாவது ஸர்க்காரிலிருந்து அனுப்பப்படும் மருந்தையாவது சாப்பிட்டால்தான் மிகவும் நலம்.

வினு.—அந்தமருந்து அகப்படாவிட்டால் என்ன செய்யலாம்?

விடை.—அது அகப்படாத பக்ஷத்தில் ஒருவாய்காடியை மிளகாயைத் தொட்டுக்கொண்டு சாப்பிடுவதினுலேயே தடுக்கலாம். ஆனுல் சிறு குழந்தைகளுக்கும் பலவீனர்களுக்கும் வியாதியஸ்தர்களுக்கும் காடியைக் கொடுக்கக்கூடாது.

வினு.—ஏன் அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது?

விடை.—கொடுத்தால் அவர்களை அது கொன்றுவிடும்.

வினு.—காலரா காலத்தில் வேறேதாவது செய்யவேண்டுமா?

விடை.—செய்யவேண்டும். காலராகாலத்தில் பயமன்னியில் உள்ள தைரியத்தைக்கைவிடாமல் எப்போதும்போல் உற்சாகமாயிருக்கவேண்டும். ஒரு மனிதன் குதூகலத்துடன் வெளியில போய்த்தன் வேலையைப் பார்த்து வருவானுகில், காலரா பூச்சிகள் அவனிடம் அணுகா.

## விஷஜுரம்.

வினு.—விஷஜுரம் எதினுலுண்டாகிறது?

விடை.—கொசுக்கடியினுலே நம்முடைய தேகத்திற்குள் பூச்சிகள் போய் ரத்தத்துடன் சம்பந்தப்பட்டு விஷஜுரத்தை உண்டாக்குகின்றன.

வினு.—அதை எப்படித் தடுக்கக்கூடும்?

விடை.—கொசுக்களையும் அவற்றின் முட்டைகளையும் கொல்லுவதால்.

வினு.—கொசுமுட்டை என்ருல் என்ன?

விடை.—ஒரு கொசு முட்டையிட்டவுடன் அம்முட்டையிலிருந்து புறப்படும் ஜந்து கொசுவாகவே ஜனிக்காது. ஆனுல் ஒரு மயிர்ப் புழுமாதிரியாய் உண்டாகி அது தண்ணீரில் வஸிக்கிறது.

வினு.—அதை எப்படிக் கொல்லமுடியும்?

விடை.—நாம் குடியிருக்கும் வீடுகளின் ஸமீபத்திலிருக்கும் சேறு சகதி முதலிய ஆபாஸமுள்ள குட்டைகளையும் சாக்கடைகளையும் ஒட்டவடிக் கட்டுவதினாலும் நம்முடைய வீடுகளை சுற்றிலும் நன்றாய்க் காய வைத்து சுத்தமாயும் பார்வைக்கு மனோகரமாயும் வைத்துக் கொள்ளுவதினாலும் மேற்சொல்லிய பூச்சிகளைக் கொல்லலாம்.

வினா.—அப்படிச் செய்வதினால் என்ன நன்மையுண்டாகும்?

விடை.—மேற்சொல்லிய கொசுமுட்டைகள் மேற்படி குட்டைகளிலும் சாக்கடைகளிலும் மட்டும் வசிப்பதால் அவைகளை சுத்தமாய் வைத்துக்கொண்டால் ஷை கொசுமுட்டைகள் வசிக்க வேறு அசுத்தமான இடங்களில்லாமல் ஓடிப்போய் விடுகின்றன.

வினா.—விஷஜுரத்திற்கு உயர்ந்த மருந்தென்ன?

விடை.—கொயினாத்தான் உயர்ந்தமருந்து. அது எல்லா தபாலாபீஸ்களிலும் 5 நெல் அளவில் விற்கப்படுகின்றது.

வினா.—அதை எப்படிச் சாப்பிடவேண்டும்?

விடை.—5 நெல்லளவு தண்ணீருடன் சேர்த்து ஜுரம் படிகிறவரையில் ஒவ்வொரு நாளும் சாப்பிடவேண்டும். பையன்களுக்குக் கொஞ்சம் குறைத்துக் கொடுக்கவேண்டும்.

வினா.—கொயினாவின் உபயோகமென்ன?

விடை.—விஷஜுரப் பூச்சி ரத்தத்தில் வஸிக்காதபடி ரத்தத்திற்கு ஒருவித நெடியையுண்டுபண்ணும்.

வயிற்றுநோய், வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு முதலியன.

வினா.—குடல்களிலும் இரைப்பையிலும் நோய்கள் உண்டாகக்காரணமென்ன?

விடை.—தகாத ஆகாரம் உட்கொள்ளுவதினால்.

வினா.—அதற்கு வைத்தியமென்ன?

விடை.—உடம்பு சொஸ்தமாகிற வரையில் கஞ்சி, பால், சமைத்தசாதம் இவைகள் போன்ற ஸாமான்யமான ஆகாரம் சாப்பிடுவதுதான்.

வினா.—கறி, நெய், முதலியன சாப்பிடலாமா?

விடை.—அவைகளை சாப்பிடவே கூடாது. ஏனெனில் அக்காலங்களில் அவைகள் அநேகமாய் விஷத்திற்கு ஸமானமாகும்.

வினா.—அப்படியானால் என்னவியஞ்சனம் சாப்பிடலாம்?

விடை.—தேகம் ஸௌக்கியமாகிறவரையில் உப்பைத்தவிர வேறு ஒருவிதமான வியஞ்சனமும் சாப்பிடவே கூடாது. வெறுஞ்சாதமும் பாலும், கஞ்சியும் மாத்திரம் சாப்பிடவேண்டும்.

வினா.—வியஞ்சனமில்லாமல் சாப்பிடமுடியாமல் போனால் என்ன செய்கிறது?

விடை.—அப்படி சாப்பிட முடிகிறவரையில் பட்டினியாகவிருந்தால் குணத்தைக் கொடுக்கும்.

வினா.—இப்படிப் பட்ட வியாதிகளுக்கு மருந்து வேண்டியதா?

விடை.—ஆகார விஷயமாய் மேற்சொன்ன விதிகளின்படி நடந்தால் ஒருமருந்தும் வேண்டியதில்லை.

வெட்டுகள், காயங்கள், புண்கள்.

வினா.—இவைகளை சொஸ்தம்பண்ணுவதில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயமென்ன?

விடை.—அவைகளைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளுதல்.

வினா.—அது எதற்காக?

விடை.—ஏனென்றால் அவ்விதமான காயங்கள் சுத்தமாய் வைக்கப்பட்டிருந்தால் அதி

சீக்கிரத்தில் தாமாகவே சொஸ்தமாய் விடுகின்றன.

வினா.—ஏன் சில காயங்கள் விருத்தியாய் விடுகின்றன ?

விடை.—அவைகள் சுத்தமாய் வைக்கப்படாமலிருப்பதனால்தான். அப்படியிருப்பதால் திறந்திருக்கிற காயத்தின் வழியாய் பூச்சிகள் தேகத்திற்குள்போய் தொந்திரவை உண்டாக்குகின்றன.

வினா.—வெட்டுக் காயங்களையும் புண்களையும் சொஸ்தம் செய்யும்போது கவனிக்க வேண்டிய விஷயங்களென்ன ?

விடை.—அவைகளை சுத்த ஜலத்தினால் கழுவி சுத்தமான துணிகளால் கட்டவேண்டியது.

வினா.—நாம் சுத்தமான ஜலத்தை அடைவதெப்படி ?

விடை.—தண்ணீரை ஒரு சுத்தமான துணியால் வடிக்கட்டி அதை மறுபடியும் கொதிக்கவைப்பதினால் தான்.

வினா.—வடிக்கட்டுவது மட்டும் போதுமா?

விடை.—போதாது. அதைக்கொதிக்கவைக்கவும் வேண்டும்.

வினா.—ஏன் கொதிக்கவைக்கவேண்டும்?

விடை.—பூச்சிகளைக் கொல்வதற்காக.

வினா.—புண்ணைக்கட்டுவதற்கு துணிகளை நாம் சுத்தம் பண்ணுவதெப்படி ?

விடை.—தண்ணீரில் அவைகளைக் கொதிக்கவைத்து வெயிலில் காய்வதற்காக அவைகளை தொங்கவிடுவதினால்.

வினா.—காய்வதற்காக அவைகளை பூமியின் பேரில் போடக்கூடாதா?

விடை.—போடவேகூடாது.

வினா.—ஏன் ?

விடை.—ஏனென்றால் பூச்சிகள் அநேகம் பூமியிலிருக்கிறபடியால் அவைகள் துணிகளில் ஒட்டிக்கொண்டு அத்துணிகளின் வழியாய்புண்ணில் நுழைந்து தொந்திரவை உண்டாக்குகின்றன.

வினா.—வேறே ஏதாவது அனுகூலம் செய்யும் பரிகாரம் அவசியமா?

விடை.—புண்ணின்பேரில் கட்டப்பட்டிருக்கிற துணிகள் புண்ணுக்கு வறவறப்புக் கொடுக்காமலிருக்கும்படி கொஞ்சம் நல்லெண்ணெயை அப்புண்ணுக்கு போடலாம். ஆனால் அந்த நல்லெண்ணெய் சுத்தமாய் இருக்கவேண்டும்.

வினா.—அந்த நல்லெண்ணெய் சுத்தமாயிருக்கிறதென்று நாம் நிச்சயபடுத்திக்கொள்வதெப்படி ?

விடை.—நாம் ஒருபோதும் அப்படி நிச்சயப்படுத்திக்கொள்ள முடியாது. ஆனால் அந்த எண்ணெயை முதலில் வடிக்கட்டி பிறகு கொதிக்கவைத்து மறுபடியும் ஒரு சீசாவில் குளிர்ச்சியாகும்படி வைத்துவிடுவோமேயானால் அது அநேகமாய் குற்றமற்றதாயிருக்கும்.

வினா.—காயங்களையும் புண்களையும் சொஸ்தம் செய்வதில் முக்கியமான தேவைகளென்ன?

விடை.—சுத்தமான ஜலம், சுத்தமான துணிகள், சுத்தமான எண்ணெய்.

வினா.—வைத்தியனுடைய உபசரணையில் நாம் வைத்தியம் செய்து சொஸ்தம்செய்துகொள்ளக்கூடாதா ?

விடை.—கூடவே கூடாது. ஏனென்றால் நாட்டு வைத்தியர்களால் கொடுத்து கட்டச் சொல்லப்படுகிற பசுவின் சாணம் புற்பூண்டுகள் புகையிலை முதலியவை மிகவும் அபாயகரமானவை. மேலும் சில ஸமயங்களில் மரணத்தையும் உண்டாக்குகின்றன.

தடுத்தல்.

வியாதிகளை சொஸ்தம் பண்ணுவதைவிட அவைகளை வரவொட்டாமல் தடுப்பது நலம்.

வின.—எல்லா வியாதிகளையும் அணுக வொட்டாமல் தடுக்கும்படியான மாற்று மருந்தென்ன?

விடை.—சுத்தமாயிருத்தல்.

வின.—தேகத்தை மாத்திரம் சுத்தமாய் வைத்துக்கொள்வது போதுமா?

விடை.—போதாது. நாமிருக்கும் வீட்டையும் கொல்லையையும் சுற்றுப் பக்கங்களையும் அதேமாதிரி சுத்தமாயிருக்கும்மடியாய் வைத்துக்கொள்வது மிகவும் அவசியம்.

வின.—நாம் குடியிருக்கும் வீடுகளை எப்படி சுத்தமாய் வைத்துக்கொள்ளக் கூடும்?

விடை.—நம் வீடுகளிலுள்ள அசுத்தங்களை மேற்சொல்லியபடி அப்புறப் படுத்திவிட்டு சுவர்களை சுண்ணும்பினல் வருஷந்தோறும் ஒருதடவை வெள்ளையடிப்பதினுல் சுத்தமாய் வைத்துக்கொள்ளக் கூடும். மேலும் சூரிய வெளிச்சமும் காற்றும் வரும்படி வீடுகளை எப்பொழுதும் திறந்து வைக்கவேண்டும்.

வின.—ஏன்?

விடை.—ஏனென்றுல் சுண்ணும்பினுல் வெள்ளையடிப்பதானது பூச்சிகளை அணுக வொட்டாமல் தடுக்க ஒத்தாசை செய்யும். சுத்தமான காற்றும் சூரிய வெளிச்சமும் நம்முடைய வீடுகளையும் கொல்லைகளையும் காய்ந்ததாகவும் அழுக்குகளில்லாமலிருக்கும்படிக்கும் செய்ய ஹேதுவாகின்றன.

வின.—நம்முடைய வீட்டையும் சுற்றுப் பக்கங்களையும் சுத்தமாய் வைத்திருந்தாலும் அதுபோதுமா?

விடை.—போதாது. இவைகளைக் காட்டிலும் முக்கியமான விஷயம் ஒன்றுண்டு.

வின.—அதென்ன?

விடை.—நாம் குடிக்கும் தண்ணீர்.

வின.—ஏன்?

விடை.—அநேகம் வியாதிகள் கெட்ட தண்ணீரால் உண்டாகின்றன.

வின.—அதற்கு நாம் என்ன செய்யக் கூடும்?

விடை.—நாம் குடிக்கிற தண்ணீருக்கு உபயோகப்படுத்துகிற குளமும் கிணறும் சுத்தமாயிருக்கும்படிக்கும், அவைகளைக்குளிக்கும் பொருட்டும் வஸ்திரங்கள் துவைக்கும் பொருட்டும் உபயோகப் படுத்தாமலிருக்கும் படிக்கும், அவைகளுக்கு ஸமீபத்தில் எச்சில் துப்பாதபடிக்கும் வேறு எவ்வித அசுத்தமான காரியங்களைச் செய்யாத படிக்கும் பார்த்துக் கொள்ளக்கூடும்.

வின.—இவ்வளவு போதுமா?

விடை.—நாமே இம்மாதிரியான காரியங்களைச் செய்யாமற்படி அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

வின.—ஆனல் இம்மாதிரி தொந்தரவான முன் ஜாக்கிரதை எடுத்துக் கொள்வதினுல் பிரயோஜனமென்ன?

விடை.—நல்லது. 60, 70 வருஷங்களுக்கு முன், காலரா விஷஜுரம் இவைகள் இப்போது இந்தியாவில் எவ்வளவு ஸகஜமாயிருக்கின்றனவோ இதேமாதிரி இங்கிலாந்திலுமிருந்தன.

வின.—இப்போதும் அதேமாதிரிதானு இருக்கிறது?

விடை.—இல்லை, காலரா விஷஜுரம் இவைகள் இப்போது இங்கிலாந்திலுள்ளவர்களுக்கு அநேகமாய்த் தெரியாது.

வின.—அதற்கென்ன காரணம்?

விடை.—இங்கிலாந்து தேசத்து ஜனங்கள் தங்கள் கிராமங்களை சுத்தமாய் வைத்துக் கொள்ளவும் அவைகளிலுள்ள அசுத்த ஜலங்

களை அப்புறம் வடியவைக்கவும் தாங்கள் குடிக்கிற ஜலத்தை சுத்தம் செய்துகொள்ளவும் இன்னம் இவைகளைப்போன்ற சுகாதாரவிதிகளை அநுசரித்து நடக்கவுந் தெரிந்துக்கொண்டிருக்கிறார்கள்.

வினா.—அதேமாதிரியான முடிவுக்கு வர நாமும் எண்ணலாமா?

விடை.—நிச்சயமாய் எண்ணலாம். ஆனால் அதிக தொந்தரவை எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வினாவிடையைப்பற்றி சும்மா பேசிக்கொண்டிருப்பதாலும் அடுத்தடுத்து சொல்லிக்கொண்டிருப்பதினாலும் மாத்திரம் திருப்தியடையக்கூடாது.

வினா.—ஆனால் நாம் என்ன செய்யவேண்டும்?

விடை.—மேற்சொல்லிய விதிகளை அநுசரிக்கவேண்டும், முக்கியமாய் நம்முடையவீட்டையும் கிராமங்களையும் காய்ந்தனவாயும் சுத்தமாயும் மனோகரமாயும் இருக்கும்படி வைத்துக்கொள்வதோடுகூட நாம் குடிக்கும் தண்ணீரை சுத்தமாய் வைத்துக்கொள்ள அதிக ஜாக்கிரதைவேண்டும்.

வி. டி. எச். ஜான்ஸன்.

## THE WOES I SUFFER FROM.

## நான் படும்பாடு.

பெண்களுக்கு வேறெவ்வித சுதந்தரங்களில்லாதபோதிலும் விவாக காலத்தில் அவர்களின் அபிப்பிராயத்தை அநுசரித்துச் செய்விதென்ற உறுதிப்பாடு மட்டும் இருக்குமேயானால் அது ஒன்றே அவர்களின் கஷ்டங்களை நிவர்த்திக்கப் போதுமானதாகும். இதற்குக்கூட இடங்கொடாத சாஸ்திரங்கள் ஏதேனும் உண்டாயின் அவைகளைச் சுட்டெரித்துப் போடுதல் மிக்க நலம். தன் நிலைமையையும் தான் இனி பிரவேசிக்கப் போகின்ற இல்வாழ்க்கையின் பொறுப்பையும், காதற் சிறப்பையும், கணவர் அன்பைக் கவரும் உபாயங்களையும், நன்கறிந்து கொள்ளத்தக்க பருவமே கல்யாண அபிப்பிராயம் கொடுப்பதற்கு ஏற்றபிராயமாகும். அதுவரையிலும் அவர்களை விவாக நிர்ப்பந்தத்திற்கு உட்படுத்தாது இருப்பார்களேயானால் அதனிலும் உதார குணமான மகோபாகச் செய்கை வேறொன்றிருக்கப் போகிறதில்லை. ஆனால் அந்த பாக்கியம் மாதர்களுக்கு எப்போது சித்திக்கப் போகின்றதோ ஈசனே அறிவார். இறக்க இருப்பவர்களின் மனது களிக்கவும், அர்த்தாபேக்ஷையை யுத்தேசித்தும், பெற்றோர்களின் மனோதிருப்தியைக் கருதியும், நல்லஸம்பந்தம் தவறிப்போகிறதே யென்றும், வழக்கமென்ற பைசாசத்துக்கு அஞ்சியும் நடக்கும் விவாகங்கள் எத்தனையோ? எந்தக்காலத்தில் இந்நாட்டுப்பெண்களைப் பிடித்த பீடை விலகுமோ? எப்போது பால்ய விதவைகளின் துக்கத்திற்குப்பரிகாரம் ஏற்படப்போகின்றதோ அறியேன்.

இதை எழுதிக்கொண்டு வருகிற நான் எனது பத்தாவது பிராயத்தில் தனவானான ஒரு மிராசுதாரருக்கு மூன்றாவது தாரமாக அவருடைய அறுபதாவது வயதில் வாழ்க்கைப்பட்டேன். இந்த அநியாயமும் நம் நாட்டிலே நடக்கிறதல்லவா? இது பணப்பேய் செய்யும் கூத்தல்லவா? காதல் நயத்தைப் பற்றி மோகனாங்கி முதலிய கதைகளில் எத்தனையோ அழகாகச் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. இதுபொய்யோ மெய்யோ, என்னைப் போன்றவர்கள் எப்படி யறியக்கூடும்? 60 வயது பையனுக்கும் 10 வயது கிழவிக்கும் என்ன காதற் பொருத்தம் உண்டாகப்போகின்றது. மாதர்களின் யௌவனம் என்னப்பட்ட புஷ்பத்திற்கு புருஷ ஸல்லாபமாகிய வாசனை ஏற்படாவிட்டால் யாது பயனுடைத்து? மனைவி மரித்த மறுக்ஷணமே மறுமணத்திற்கு மார்க்கம் யோசிப்பதேன்? இறந்துவிட்ட காதலியின் பிரிவாற்றாமைத்துயரை புதுமணக் களிப்பின் உதவியால் மறக்கக் கருதியன்றோ? புருஷர்களினும் அதிக மெல்லிய மனது படைத்த மாதர்களிடத்தில்மட்டும் ஏன் இந்தக்கருணை யில்லாமற்போயிற்று? ஆடவர்க்குள்ள உணர்ச்சி மாதர்களுக்கு இல்லையென்ற எண்ணமா? அப்போதே வேண்டாமென்றேனே! அகதி சொல் அம்பலம் ஏறுமா? என்பிதா பிடிவாத புத்தி

மேலிட்டு இந்தப் படுகுழியில் தள்ளினர். எனக்காகப் பெற்றுக்கொண்ட தொகையைக் கொண்டு மாடிவீடுகட்டிக்கொண்டு வைபோக வாழ்வில் இருக்கிறார். என்னைப் பெற்றமாதா மஞ்சள் குங்குமம் அணிந்துகொண்டு நிற்கிறாள். நானே வேறுசேலையுடுத்து வேஷமாறி மூலைவீட்டில் உட்காரலானேன். இனி எனக்கு யார் இருக்கிறார்கள்? எவருக்காக நான் ஜீவிக்கவேண்டும்? நான் படித்த படிப்பென்ன? எண்ணிய சிந்தனைகளென்ன? என்னவோ என் தலையெழுத்து இப்படியாயிற்று? ஒரு பெண்ணுக்கு மணமகன் தேடப்புகும்போது அவனுக்கு சொத்துண்டா, நிலமுண்டா, படிப்புண்டா, என்பதைக் கவனிக்கிறார்களே தவிர அந்தரங்கத்தில் அவன் என்ன நோய் பிடித்தவனே, குடியனே, வெறியனே, வேசிக்கள்வனே இதை யார் கேட்கிறார்கள? அதை விசாரிக்கிறதேயில்லை.

என்னை மாலையிட்டவர் ஒரு பெரிய குடிகாரப் பிரபு. ஏற்கனவே மிராசுதாரர் என்றும் தெரிவித்திருக்கிறேன். ஆகவே குடிக்கென்ன குறைவா? குடியினல் குடி முழுகியே போயிற்று. போனதுபோக மிகுதியையேனும் கிரமப்படுத்த முயன்றேன். என் நாதர் அறிந்துகொள்ளும்படியாகப் படுக்கையறைக்கு எதிரில் பின்வருகிறபடி எழுதிவைத்தேன்.

"ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்கு துக்கம்? யாருக்கு சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்கு காரணமில்லாத காயங்கள்? யாருக்கு ரத்தங் கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கிற இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும் கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே. மதுபானம் இரத்த வருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய் தோன்றும்போது நீர் அதை பாராதீர். அது மெதுவாய் இறங்கும்; முடிவிலே அது பாம்பைப் போலக்கடிக்கும், விரியனைப் போலத்தீண்டும்"

இதை எனது வீட்டுக்காரர் கவனமாய்ப் படித்தார். அதைப்படித்துவிட்டு ஒரு புட்டி பிராந்தி அதற்குப் பரிகாரமாகச் சாப்பிட்டார். என்னையும் சாப்பிடச்சொல்லி வற்புறுத்தினர். பிறகு நடுநிசியில் விழித்துக்கொண்டு அலறினர். சாப்பிடுவதற்காக மறுப்புட்டியை எடுக்கப் போனதாகவும் அதிலிருந்து ஒரு ஸர்ப்பம் தலைநீட்டினதாகவும், சாராயம் முழுதும் ஸர்ப்பமாக மாறிவிட்டதாகவும், அது தன்னைக்கடிக்க வகை பார்ப்பதாகவும் உளறினர். நான் சுவற்றில் எழுதியிருந்ததைப் படித்த நினைவே கவனமாக வந்ததென்று சமாதானப்படுத்த முயன்றேன். கூடவில்லை. மேலும் அதிகமாகக் குடித்திருந்தாராகையால் அது விஷமித்து அவரை இந்த உலகத்திலிருந்தும் பிரித்துவிட்டது. நான் கைம்பெண்ணனேன். என்கணவன் இறந்து மூன்று வருடமாகிறது. சென்ற வருடத்திற்றான் ருதுவானேன். இந்த பாழுங்கதி எனக்கு வந்திராவிட்டால் எனது சாந்தி முகூர்த்தம் எத்தனை வைபமாக நடந்தேறியிருக்கும். நானும் மற்றப் பெண்களைப்போலக் களிப்புடன் சுகித்திருக்கக்கூடுமே! பாழும் பணத்தாசையாலல்லவா என் பிதா என்னை இந்தப் படுகுழியில் தள்ளினர். ருதுமதியாவதற்குமுன் மாங்கல்யமிழந்த பெண்கள் மறு விவாகம் செய்துகொள்ளலாமென்று "பிரஜாநுகூலன்" போன்ற பத்திரிகைகள் முறையிடுகின்றன. அவர்களின் முறையீடு நமது மூடப்புரோகிதர்களின் செவிக்கு ஏறப்போகின்றதா? நமது ஸமூகத்தவரேனும் கவனிக்கப்போகின்றனரா? சென்னை சுதேசமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீ ஜி- சுப்பிரமண்ய ஐயர் தமது பெண்ணுக்கு இரண்டாவது விவாகம் நடத்திப் பட்டபாடு உலகமறியுமே. அவரையொத்த தைரியசாலிகள் நம் நாட்டில் யார் இருக்கிறார்கள்? வடநாட்டுக்கு வீரேசலிங்கம் பந்துலு இருக்கிறார். தென்னாட்டுக்குத்தான் எவரையும் காணேம். இனி என்காலம் எவ்வாறுகழியுமோ எனக்கே தெரியவில்லை. இனி எனக்குப் பிள்ளையா, குட்டியா, குமாரனா, மருமகளா, பேரனா, என்னவோ என் கதி இப்படியாச்சுது. பாட்டி என்றுவது, அம்மா என்றுவது, மாமி என்றுவது, அடி என்றுவது யாரழைக்கப்போகிறார்கள்? பாழாய்ப்போன இந்தப்பக்கத்திலே நாங்கள் பெண்களாகப் பிறந்து படும் துயரம் பகவானே உன்னையன்றி வேறு யாரறிவார்? ஜெகதீசா! அநாதரட்சகா! நீ எங்கிருக்கின்றாயோ? என்று எங்கள் துயரம் விடியுமோ.

பிரஜாநுகூலன்.

## REVIEW OF THE PRESS.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### THE BAMBOO AND ITS USES.

### மூங்கிலும் அதன் உபயோகமும்.

நமது நாட்டில் மூங்கில் அனேகமாய் எல்லோருங் காணும் பதார்த்தமாதலால், அதன் மகிமைகளை நாம் கவனிப்பதில்லை என்றும், மூங்கில் கிரமப்படி உபயோகப் படுவதைப் பார்க்கவேண்டுபவர் சீனா, ஜப்பான் முதலிய நம்முடைய "அண்டை" நாடுகளுக்கு போய்ப் பார்த்து வரவேண்டுமென்றும் வித்யாவிஹாரிணிப் பத்திராதிபர் அவருடைய புரட்டாசி மாஸத்து ஸஞ்சிகையில் எழுதுகிறார். அப்படிப் பார்த்து வந்த மேனாட்டவர் ஒருவர் தெரிவிப்பதாவது சீனருக்கும், ஜப்பானியருக்கும் மூங்கில் இவ்வளவுதான் உபயோகப் படக்கூடிய வஸ்துவென்று நிதானிக்க முடியாது. தினசரி அவர்களுக்கு ஆகவேண்டிய சகல காரியங்களிலும் அது உபயோகப்படுகிறது. ஜம்பமாயிருக்க வேண்டினாலும், சொகுசாயிருக்கவேண்டினாலும், மூங்கில்தான் அவர்களுக்கு முக்கிய சாதனம். அவர்களுடைய வீடுகளென்னும் கூடுகளுக்குச் சுவர் முதலிய அங்கங்களுக்கும், கூரைக்கும் மூலாதாரமானது மூங்கிலாம். வெய்யில், காற்று முதலியவற்றை மறைக்கவேண்டுமாகில், மூங்கில் தட்டிதான் சாதனம். ஜன்னல்களுக்கு மறைக்கத் துணிவேண்டுமாகில், மூங்கில் காகிதம்தான் உதவவேண்டும். கட்டில், மேஜை, நாற்காலி, 'கோரிக்காலி' முதலிய வீட்டுத் தட்டுமுட்டுகள் அனேகமாய் எல்லாம் மூங்கிலாலாகவேண்டும். மூங்கில் சருகுகள், இழைப்புப்பொடி முதலியவற்றை அவர்கள் மெத்தை, தலையணை முதலியவற்றிற்கு உபயோகிக்கிறார்கள். சில்லரை வியாபாரிகளுக்குப் படி முதலிய அளவைகளாகவும் தச்சருக்கு, மட்டக்கோல்களாகவும், கிருஷிகருக்கு நீரிறைக்கும் சக்கரமாகவும், நீர் பாயும் குழாய்களாகவும், பக்ஷிகளுக்கு கூண்டுகளாகவும், பலவகைப் பாத்திரங்களாகவும், புஷ்பச் செண்டுகளுக்கு 'தானிகளாகவும்,' சமையல் வீட்டில் பதார்த்தங்களுக்குப் பெட்டிகளாகவும், மூங்கிலே உபயோகப்பட்டு வருகிறது. வஞ்சிக்காரனுக்குப் படகும் மூங்கில்தான். அதைத் தள்ளும் கோலும் மூங்கில்தான். அவனுக்கு உடையும் மூங்கில். படகை ஓட்டுவதற்குதவும் பாயும் மூங்கில், அந்தப்பாயை இறக்கி கட்டும் குறுக்குச் சட்டமும் மூங்கில்தான். சீனப் பிரபுக்கள் ஜம்பமாகச் சவாரி போகும் பல்லக்குகள் மூங்கில் சேர்த்துண்டானவை. மணப்பெண் விவாக மஹோற்சவத்தில் ஊர்கோலம் போவதும் அதே பல்லக்குதான். 'கடைசி ஊர்கோலமும்' அந்தப் பல்லக்கில்தான் போவது. தண்டனை யடைந்தவர் கொலையாளிகள் கையில் அகப்பட்டு அவர்களால் இம்சை யடைவதும் மூங்கில் சாதனங்களைக் கொண்டுதான். சொகுசுக்கார ஆண், பெண் இருதிறத்தாரும் வீசிக்கொள்ளும் அழகிய விசிறிகளும் மூங்கில் விசிறிகள் தாம். வீரர்களுடைய ஈட்டி மூங்கில், தூணீரம் மூங்கில், அம்புகளும் மூங்கில். எழுதுபவருக்குப் பேனா, படிக்கும் மாணாக்கருக்குப் புஸ்தகம், சித்திர மெழுதுபவருக்கு 'புருசு,' அச்சித்திரங்களுக்கு 'முதனால்' வாத்தியங்களுக்கு ஒலிக்கருவி, ஊதுகுழல் முதலிய சகலமும் மூங்கிலைக்கொண்டே ஆகவேண்டும். பாய்கள், கூடைகள் முதலிய பின்னல் வேலைகளும் பல தினுசுகளாகப் பார்ப்பவர் பிரமிக்கச் செய்வதும் மூங்கிலைக்கொண்டேதான். வீட்டுச் சாமான்கள் சிற்பத் தொழில்கள், வஸ்திராதிகள், ஆயுதங்கள், அன்னம், ஔஷதம் முதலிய எல்லாம் மூங்கில் ஒன்றே சீனர்களுக்குப் பிரசாதிக்குமானால், என்னதான் அதலிருந்து கிடைக்கக்கூடாதது?

## ANTS.
## எறும்புகள்.

ஸெப்டம்பர் மாஸத்துப் 'பெண்கல்வியில்' எஸ். சின்னம்மாள் சில இயற்கை அற்புதங்களைப்பற்றி எழுதுகையில் எரும்புகளைப் பற்றிப் பின் வருமாறு எழுதுகிறுர்.

எறும்புகளின் அறிவு, செய்கை, வழக்கம்-- இவைகளைப்பற்றிக் கவனித்து வந்தவர் பலர். எறும்பு வர்க்கத்தில் ஆயிரத்திலதிகம் பிரிவுகளிருப்பதாகச் சொல்லுகிறுர்கள்.

இவற்றுள் ஒரு வகுப்பு 'படை' எறும்புகள் என்று சொல்லப்படும். இவை அமேரிக்காவில் சில இடங்களில் காணப்படுகின்றன. இவற்றை யடுத்துச் செல்வதரிதாம். தம் கூட்டத்தார் எங்காவது சென்று ஆகாரங்களைக் கொண்டுவரும் காலத்தில் அவைகள் பக்கமாக இப்படை எறும்புகள் பட்டாளத்து சிப்பாய்கள்போல கூட வருமாம். வேலை செய்யும் எறும்புகளும், தேனீக்களைப்போல தங்கள் இராணி நேரே எப்பொழுதும் தங்கள் பின்பாகத்தைக் காண்பிக்காமல் தலைப் பாகத்தையே காண்பித்து நடமாடும் வழக்கமுடையனவாம். இராணி எறும்பு இறந்து போனல் மற்ற எறும்புகளெல்லாம் அதன் பக்கத்தில் துக்கம் கொண்டாடுவது போல் சூழ்ந்துகொள்ளும்.

ஒரு கூட்டத்திலுள்ள எறும்புகள் ஒன்றிற்கொன்று இனம் நன்ருகத் தெரிந்துகொள்ளும். அவைகளை இரண்டாகப் பிரித்து ஒன்றிரண்டு வருஷம் வைத்திருந்து, பின் ஒரு வகுப்பிலுள்ள ஒரு எறும்பை மற்ருெரு வகுப்பில் எடுத்துவிட்டால் அவை ஒன்றிற்கொன்று தெரிந்து கொண்டு சேர்ந்துக்கொள்ளும். ஒரு கூட்டத்திலுள்ள எறும்புகள் மற்ருெரு கூட்டத்திலுள்ள எரும்புகளை கிட்ட வரவொட்டா.

## A NEW KIND OF PADDY.
## ஒரு புது தினுசு நெல்.

அழிந்துபோகாத ஒரு நெல்தினுஸைப் பற்றி அக்டோபர் மாசத்துக் கிருஷிகனில் ஒரு சிறு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

"தற்காலத்தில் நெல்லை ஒருதரம் விதைத்தாலோ அல்லது நாட்டிலோ அது அதிலிருந்து மாசூல் கொடுத்த பின் அழிந்து போகிறது. பயிர் அறுத்த பின் அதிலிருந்து மறுதாள் உண்டாகி அதுவும் சில சமயங்களில் அதி சொற்பமாய் பலன் தருவதுமுண்டு. இப்போதோ ஆப்பிரிக்கா தேசத்தில் ஸெனிகல் என்று சொல்லுமிடத்தில் ஒரு தினுசு நெல் கண்டு பிடித்திருப்பதாகவும், அதை அறுத்த பின்னுங்கூட அதன்வேரில் ஒரு கிழங்கு போலொத்த வேர் இருப்பதாகவும், அது சாகாமல் பூமியிலேயே இருந்து அப்பால் மறுபடி தண்ணீர் அல்லது மழையின் உதவியால் ஈரம் கண்ட மாத்திரத்தில் திரும்பவும் துளிர்த்துக் கிளைத்து மறுபடி பயிராவதாகவும், களை மாத்திரமில்லாமலிருந்தால் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டும் எருப் போட்டுக் கொண்டும் வந்தால் மறுபடி வேறுவிதை விதைக்காமலே சரியான பலன் கொடுப்பதாகவும், கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த விதையை ஸெனிகல் தேசத்திலிருந்து ஜெர்மனியர் கொண்டுபோய் அனேக பரிட்சைகள் செய்து வருவதாயும் தெரிகிறது. இப்பரிட்சைகளில் இது ஸரியானபடி வருவதாய் கண்டு பிடித்து விட்டால் இத்தினுசு மிக ஸிலாக்கியகரமாயிருக்குமென்று எண்ணவேண்டியதாயிருக்கிறது. ஏனென்ருல் வருஷா வருஷம் விதை செலவில்லாமலே பயிர் அறுக்க முடியும்."

## CATTLE INSURANCE SOCIETIES.

## கால்நடை இன்ஷ்யூரேன்ஸ் ஸொஸைடிகள்.

தொழில் ஊக்கத்தில் இங்கிலாந்து உள்பட மற்ற ஐரோப்பிய நாடுகளைப் பார்க்கிலும் முற்பட்டு நிற்பது ஜெர்மனி தேசமே. கால்நடைகளுக்கு நோய்நொடி வராமல் காத்து அவைகள் இறந்து விட்டால் அவற்றின் விலையைக் கொடுத்துச் சொந்தக்காரர்களுக்கு ஈடு செய்யும் நோக்கங்கொண்டனவாய் பரஸ்பர ஸகாய சங்கங்கள் பல பதினெட்டாவது நூற்றாண்டு முதல் ஜெர்மனியில் நடைபெற்று வருகின்றன. 1909-ம் வருஷத்தில் இம்மாதிரி சங்கங்கள் 28 இருந்தன. இவற்றில் இன்ஷியூரான கால் நடைகளின் விலை சுமார் அறுபது கோடி மார்க்ஸ். ஒரு மார்க் முக்கால் ரூபாய் எனப்படுகிறது. இவை ஜெர்மனியில் கால்நடைகளை இன்ஷியூர் செய்வதோடு லக்ஸம்பர்க், நார்வே, ஸ்வீடன், ஸவிட்ஸர்லாந்து, பெல்ஜியம், டென்மார்க்கு, ஆஸ்டிரியா போன்ற அயல் தேசங்களிலும் வியாபித்து அங்குள்ள கால்நடைகளை இன்ஷியூர் செய்கின்றன. இவ்வாறு 1909-ம் வருஷத்தில் இன்ஷியூர் செய்யப்பட்ட அயல்நாட்டுக் கால்நடைகளின் விலை சுமார் 33லக்ஷம் மார்க் என்று தெரிகிறது. இந்தப் பெரிய சங்கங்களன்றித் தனி மனிதர்களாக முன்னின்று இன்ஷியூரென்ஸ் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்துகிறவர்களுமுண்டு. 1909-ம் வருஷத்தில் இவ்விதம் ஏழுபேர் இன்ஷ்யூரென்ஸ் நடத்தினார்களென்றும், இவர்களிடம் இன்ஷ்யூர் ஆன கால்நடைகளின் விலை $11\frac{3}{4}$ கோடி மார்க் என்றும் தெரிகிறது. இந்த இரண்டுவித இன்ஷ்யூரென்ஸுகளிலும் சேர்த்து $1\frac{1}{4}$ கோடி மார்க் ப்ரிமியம் 1909-ல் கொடுக்கப்பட்டது. கால் நடைகளின் நோயின் பொருட்டும் சாவின் பொருட்டுமாகக் கொடுக்கப்பட்ட மொத்த நஷ்ட ஈட்டுத் தொகை $1\frac{1}{4}$ கோடி மார்க்குக்கு அதிகப்பட்டது. பரஸ்பரஸகாய சங்கங்களாக வேலை செய்வதில் ஒருவர்க்கொருவர் மோசம் செய்யக்கூடாமையாவதோடு, பொதுவாக எல்லோருக்கும் கால்நடைகளைப் பராமரிப்பதில் கவலை அதிகப்படுகிறது. சொந்தக்காரன் அஜாக்கிரதையினாலும் கொடுமையினாலும் இறக்கும் கால்நடைகளின் பொருட்டு நஷ்ட ஈடு கொடுப்பதில்லையென்றும், வெகு அவஸரமாயிருந்தாலொழிய சங்கத்தின் அனுமதியின்றிக் கால்நடைகளை உணவின் பொருட்டுக் கொல்லக்கூடாதென்றும், கால்நடைகளுக்கு நோய் நேர்ந்தவுடன் வெடிரினரி மிருகவைத்ய ஸர்ஜனையழைத்துச் சிகிச்சை செய்யவேண்டுமென்றும், தொற்று வியாதிகள் ஊரில் உலவும்போது அவை பரவாமல் வேண்டிய பிரயாசைப்பட்டு முன் எச்சரிக்கை யேற்பாடும் செய்யவேண்டுமென்றும், இன்ஷ்யூரன்ஸ் ஒப்பந்தத்தில் திட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இச்சங்கங்களின் ஊக்கத்தால் உழவோனின் செல்வமாகிய கால்நடைகள் காப்பாற்றப்பட்டு ஜெர்மனி தேசத்தின் பொருளாதார நிலை மிக உயர்ந்திருக்கிறதென்று சொல்லப்படுகிறது. இம்மாதிரி சங்கங்கள் இந்தியாவில் ஸ்தாபிக்கக் கூடுமா என்று யோசிக்க வேண்டும். இந்தியாவில் முக்கால் பங்கு ஜனங்களுக்குமேல் விவஸாயிகளானபடியால், இவ்வித சங்கங்கள் ஸ்தாபிக்கப் படுமானால் நிரம்பவும் சுகிர்த முண்டாகுமென்று எண்ணலாம்.—சுதேசமித்திரனில் ஒரு நிருபர்.

## WHITE SILK COTTON TREE.
## வெள்ளைப்பூ பூக்கும் இலவைமரம்.

இதைப்பற்றி ஐப்பசி மாஸத்துக்கிருஷிகனில் ஒரு வியாசம் காணப்படுகிறது.

"ஒரு பெரிய செடியிலிருந்து வருஷத்திற்குச் சுமார் 1000-முதல் 1500-காய்கள் அகப்படும். இது ஸாதாரணமாய் ஜனவரி பிப்ரவரி மாதத்தில் வெயில் காலம் ஆரம்பிக்கும்போது இலைகள் கொட்டி புஷ்பித்து அப்பால் மறுபடியும் இலைதளிர் உண்டாகி அநேகமாய் மே, மாதத்துக்குள் காய்த்துப் பழுக்கும். சில இடங்களில் மே மாதத்தில் பூத்து அக்டோபர் மாதத்தில் காய்த்துப் பழுக்கும் வழக்கமுண்டு. அவ்வவ்விடங்களின் சீதோஷ்ணபேதங்களையும், மழைப்பதம் முதலானவைகளையும் பொறுத்திருக்கும். காய்கள் முற்றி பழுப்புவர்ணமாகும்போது அவைகளை நீண்ட துறடுகள் கொண்டு பரித்துச் சேர்க்கவேண்டும். இல்லாவிட்டால் காய்கள் வெயிலில் வெடித்துப் பஞ்சு காற்றில் பறந்துபோகும். பறித்த காய்களை வெயிலில் காயவைத்து அவை சரியானபடி பழுத்து வெடிக்கும்வரை உலர்த்த வேண்டும். ஒரு மரத்திலிருந்து கிடைக்கும் பஞ்சு 2 முதல் 3 இராத்தல் நிறையுள்ளதாயிருக்கும். இந்த இடைகொட்டை போக்கிய பஞ்சின் இடை. இது தற்காலம் இராத்தல் ஒன்றுக்கு 7 முதல் 9 பென்ஸ் அதாவது 7 முதல் 9 அணு வரை விற்கிறது. ஒரு ஏக்கரில் 18 அடி ஒன்றுக்கு ஒருமரம் வைத்தால் சுமார் 144 மரங்கள் வைக்கலாம். இதிலிருந்து வருஷத்திற்குக் கிடைக்கும் பஞ்சின் விலை சுமார் 77 ரூபாய் பெறும். அனேகமாய் யாதொரு செலவில்லாமல் சாதாரண நிலங்களில் ஏக்ரா ஒன்றுக்கு ரூபாய் 70 கிடைப்பது நல்ல லாபமல்லவா. இதை வாசிக்கும் கிருஷிகர் ஷ மரத்தைக் காலி நிலங்களில் வைத்துப் பயிர் செய்து லாபம் அடைவார்களென்று நம்புகிறோம்."

## PINEAPPLE JAM.
## அன்னாசிப்பழ முரபா.

இதைப்பற்றி ரங்கூனில் ப்ரசுரமாகும் "சுதேச பரிபாலினி" என்னும் தின ஸரிப்பத்திரிகையில் ஒரு வியாஸம் காணப்படுகிறது. பர்மாவில் அன்னாசிப்பழம் ஏராளமாய் விளைகின்றது. பழக்காலத்தில் இந்தப்பழம் பர்மா தேசத்தில் வீதிக்கு வீதி அதிக நயமாய் விற்கப்பட்டு வருகிறது. மொத்தத்தில் வாங்கினால் ஒருடஜன் பழம் 2 அல்லது 3 அணுவுக்குக் கிடைக்கும். இந்தப்பழம் ஐரோப்பாவில் எந்த தேசத்திலாவது விளைந்தால் இதோடு சர்க்கரையைச் சேர்த்து இங்கிலீஷில் ஜாம் என்று சொல்லும் ஒரு வித பழக்கூட்டைச் செய்து ஏராளமாகப் பணத்தைச் சம்பாதிப்பார்கள். வெள்ளைக்காரர்கள் ருசி இல்லாத பழங்களையுங்கூட சர்க்கரையைப் போட்டுப் புட்டிகளில் அடைத்து உலகமெங்கும் அனுப்பி நல்ல லாபம் சம்பாதித்து வருகிறார்கள். உதாரணமாக, கூஸ் பெரி, ஸ்ட்ரா பெரி, முதலிய உபயோகமற்ற பழங்களையும் பொன்னாக்குகிறார்கள். அன்னாசிச் சர்க்கரைக் கூட்டை அதிக சுலபமாகச் செய்யலாம். இதற்கு வேண்டியதெல்லாம் தகரத்தால் டப்பிகள் செய்வதற்கு வேண்டிய யந்திரம் ஒன்றுதான். இதற்குப் பணச்செலவு அதிகமில்லை. சில பர்மா கனவான்கள் இந்தச் சர்க்கரைக் கூட்டைச் செய்வதற்கு வேண்டிய முயற்சி செய்து வருகிறார்களாம். சிலவர்த்தகர்கள் அன்னாசிப்பழச் சர்க்கரைக் கூட்டு அடைத்த ஒரு ஸாதாரண டப்பிக்கு ஒரு அணுவுக்கு மேல் செலவாகாதென்றும், அதை அந்நிய தேசங்களில் நாலு முதல் ஆறு அணுவுக்குச் சுலபமாய் விற்கலாமென்றும் கணக்கெடுத்துச் சொல்லுகிறார்கள். இதைப்பற்றி விவரமாகத் தெரிய விரும்புகிறவர்கள் ரங்கூனில் சுதேச பரிபாலினி பத்திராதிபருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

## BOYS' SECTION.
## சிறுவர் பகுதி.

---

HINTS FOR READING.

**புஸ்தகங்கள் வாசிக்கும்போது கவனிக்கவேண்டிய விதிகள்.**—அமெரிக்காவிலுள்ள நியூயார்க்குப் பள்ளிக்கூடங்களிற் பின்வரும் விதிகள் அச்சிட்டு ஒட்டப்பட்டிருக்கின்றன.

"மங்கலான வெளிச்சத்தில் எப்போதும் படிக்காதே. படிக்கும்போதெல்லாம் தலையை நிமிர்த்துக்கொண்டு படி (குனிந்து படியாதே.)

உனக்கு உன் கண்கள் எல்லாப்புஸ்தகங்களைக் காட்டிலும் மேலானவைகள். நீ படிக்கும் புஸ்தகத்தை உன் முகத்திலிருந்து பதினன்கங்குல தூரத்திற்பிடித்துக்கொண்டு படி. வெளிச்சம் உனக்குப்பின் பக்கத்திலிருந்து புஸ்தகத்தில் விழும்படியாக இருந்து படி.

உனது பாதுகாப்பும் நீ மேலான நிலைமைக்கு வருவதும் உன்கண்ணைச் சார்ந்திருக்கின்றன; ஆகையால் நீ அவைகளைப் பேணவேண்டும். நீ வாசிக்கும்போது இடையிடையே உன் முகத்தைச் சிறிது நேரம் புஸ்தகத்திலிருந்து திருப்பி இளைப்பாறச் செய். வெயில் நேராகப் புஸ்தகத்தில் விழும்படியாக வைத்து ஒருபொழுதும் வாசிக்காதே.

ராத்திரிப் படுக்கப் போகையிலும், விடியற்காலத்திலும் கால்களை ஜலத்தினுற்கழுவி நல்ல தெளிவான வெளிச்சத்திலே படி. படிக்கும்போது வெளிச்சத்தை யெதிர் நோக்கிக்கொண்டு படிக்காதே."

GOOD ADVICE.

**ஹிதோபதேசம்.**—1. மனிதன் அனுஸரிக்கவேண்டிய விஷயங்களில் மெய்யொன்றே முக்கியமும் முதன்மையுமானது.

2. எப்போதும் மெய் முன்வந்து நிற்கும் பொய் புறங்காட்டியோடும்.

3. மெய்யுடையோனே மதிப்புடையோனவான்.

4. மேன்மையான விஷயங்களுக் கெல்லாம் மேன்மையானது மெய்யே. அதை வெறுத்தவன் வீணனுவான்.

5. உண்மை விசுவாசி யுலகப்பிரவித்தன்.

6. உலக நன்மைகளுக்குதகுந்த வித்து உண்மையே.

7. உன் நாவினுனிபை உண்மையின் அஸ்திவாரமாக்கு.

8. உன் மனச்சாட்சிக் கொருபோதும் பொய்யனுகாதே.

9. மெய்யை நாட்டினுல் மெய்யனுகுவாய்.

10 பிசகைத்தள்ளிப் பிசாசை வெற்றிகொள்.

11. இருளானது நட்சத்திரங்களைக் காண்பிப்பதுபோல வியசனமானது உண்மையைக்காண்பிக்கும்.

12. வார்த்தையையும் செய்கையையும் மாறுபடக் காட்டாதே.

13. உண்மைப் பிரகாசம் உன் மனதிற் தரித்தால் உன்னத மகிழ்ச்சி உனக்கே சுதந்தரம்.

14. மெய்யைக்கண்டால் முன்னேக்கிநட, பொய்யைக்கண்டால் பின்வாங்கி நில்.

15. உண்மையை யொத்த உறுதியான நேசர் உலகத்திலெங்கு மொருவருமில்லை.

MONKEYS.

**குரங்குகள்.**—வானரங்களுக்குள் அனேகமாயெல்லா ஜாதிக்கும் கைவிரல்கள் ஐந்துண்டு. அவ் விரல்களை முஷ்டியாக்கத் திறமையுமுண்டு. அவற்றுள்ளும் முதற் பதவிபெறும் 'கிஷ்கிந்தை மகா ஜனங்கள்' நம்மைப் போலவே நின்று நடந்து போகுபவை. புத்தி வைபவமோ சொல்லவேண்டியதில்லை! இவற்றை யெல்லாம் பார்க்குமிடத்து, வானர வர்க்கம் மனித வர்க்கத்திற்கு அடுத்தபடி யென்று சொல்வதற்குப் பலத்த நியாயங்களேற்படுகின்றன.

இப்படி யிருப்பது வாஸ்தவமென்றாலும், வானரங்களுக்குள்ளும் தாரதம்மியம் பல வகைப்பட்டுக் காணுகின்றன. வானர வகைகளில் தென்னிந்தியாவில் இரண்டு உட்பிரிவு மட்டுமே காணுவன. மற்றைய பிரிவுகளெல்லாம் தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா சமுத்திரத் தீவுகள் இவற்றில் செழித்திருப்பவை.

இவற்றுள் முதற்பதவி பெற்றிருப்பவைகளுக்கு வாலில்லை. மந்திகளென்று பெயர். மந்திகள்

நான்கு வகைப்படும். 'காட்டு மனிதன்' என்று பொருள் கொள்ளும் 'ஊராங்கௌடாங்' என்பது பர்மியப்பிராந்தியத்திலும், 'கொரில்லா' 'சிம்பன்ஸீ', 'கிப்பன்' என்பவை இதர தேசங்களிலும் பார்க்கக் கூடியவை. தென்னிந்தியாவில் இவையொன்றும் யதேச்சையாய்த் திரியக் காணுவதில்லை. கண் காக்ஷிக்காக ஆங்காங்கு கூடுகளில் வைத்திருப்பவைகளை நீக்கினால், இப்பிரதேசத்தில் இவைகள் இல்லவேயில்லை யென்னலாம். ஆதலால் மேற்கூறியபடி இரண்டு சில்லரை வர்க்கம் தான் நமது பிராந்தியத்தில் உலாவுவன. அவற்றுள் ஒன்றிற்குக் கன்னப் பிரதேசத்தில் ஒரு பையுண்டு. அதில் தனக்கு வேண்டிய ஆகாரத்தைச் சேர்த்து வைத்துக்கொள்ளும். இந்த வர்க்கத்திற்கு விசேஷமான சிறப்புப் பெயரொன்றுமில்லை. மற்றைய வர்க்கத்திற்கு 'ஹனுமான் வம்சம்' என்று பெயர். அதற்குக் கன்னப்பையில்லை. அதுதான் சாதாரணமாக நம்மவர் எங்கும் காணுவது.—வித்யாவிஹாரினி.

THE HORSE'S BLIND.

**குதிரையின் கண்பட்டை.**—குதிரையின் கண்களின் இருபக்கங்களிலும் சாதாரணமாய்க் கண்மூடி போடுகிறார்களல்லவா. ஏன்? குதிரைக்குத் தலையின் இருபக்கங்களிலும் கண்கள் பெரியவையாய் அமைந்திருக்கின்றன. மேலும் குதிரையோ மிகவும் பயந்த சுவாபமுள்ளது. இதை வண்டியில் பூட்டி ஸவாரி செய்யும்போது வண்டியின் சத்தத்தையும் பாதையிலுள்ள மரங்களையும் மனிதர்களையும் பார்த்துப் புலியோ சிங்கமோ என்று எண்ணி அதிகமாகப் பயந்து மருண்டுவிடும் என்று கண்களின் இருபக்கங்களிலும் கண்மூடிபோட்டு மறைத்திருக்கிறது. இப்படி மறைத்திருப்பதினால் அதற்கு எதிர்ப்பார்வையேயொழியப் பக்கப் பார்வை இல்லை.

இது இப்படியிருந்தும், சிலர் இதைக் கவனிக்காமல் குதிரைகளைக் கண்மூடி யில்லாமலே சவாரி செய்கிறதையும் காண்கிறோம். ஏறு குதிரைகளுக்கும் போர்ச்சேவகரின் குதிரைகளுக்கும் கண்மூடி போடுகிறதில்லை.

BURIED JARS.

**புதைந்து கிடக்கும் ஜாடிகள்.**—சீர்காழிக்கருகில் பூமியின் கீழ் பெருஞ்சாடிகள் புதைந்து கிடந்ததாகவும் அந்த ஜாடிகள் ஒருஆள் இருக்கும் படியான அகலம் நீளம் உள்ளனவாயிருந்ததாகவும் அவைகளில் பூர்வம் வயதான கிழவன் கிழவிகள் உயிருடன் புதைக்கப்பட்டார்களெனத் தாம் கேள்விப்பட்டதாகவும், ஸமீபத்தில் "மெயில்" பத்திரிகையில் ஒரு நிருபர் எழுதுகிறார். அம்மாதிரி ஜாடிகள் அவர் பல விடங்களில் பார்த்ததாகவும் தாம் கேள்விப்பட்டது உண்மையானால் தெரிந்தவர்கள் சொல்லவேண்டுமென்றும் எழுத, நேற்று "மெயில்" பத்திரிகையில் ஒருவர் பதில் எழுதுகிறார். தாம் 30 வருஷத்துக்கு முன்னால் மதுரைக் காலேஜில் வாசித்துக்கொண்டிருந்தபோது இம்மாதிரி ஜாடிகள் பல விடங்களில் புதைந்து கிடந்ததைப் பார்த்ததாகவும், அவைகளில் கொத்துமல்லி விதையளவு பொன்மணிகளும் மண்விளக்கும், நெல்லுமியும் கண்டதாகவும், சொல்லுகிறார். தமக்குச் சரித்திரம் சொல்லி வைக்கும் போதகரை அதைப்பற்றிக் கேட்டபோது பூர்வம் கிழத்தன மடைந்தவர்களை அவர்கள் வேண்டுகோளின் பேரில் உயிருடன் ஜாடியில் வைத்துப் புதைப்பது வழக்கமென்றும், அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்களும் ஒரு மண் விளக்கும் சிலநாளைக்கு ஆகாரங்களும் சேர்த்துப் புதைக்கப் படுவார்களென்றும், பதில் சொன்னாராம். இந்த ஜாடிகளில் எலும்புகள் இல்லாதது ஆச்சரியமல்ல; ஏனெனில் 50 வருஷத்துக்குள்ளாக இந்த எலும்புகள் மண்ணாகி விடுகின்றன. உயிருடன் புதைப்பதல்லாமல் செத்த பிணங்களையும் இப்படிப் புதைத்திருக்கலாம். பழையகாலத்தில் சாவதானம் குறைவாயிருந்தபடியால் ஜனங்கள் தங்கள் தானியங்களையும் விலைபெற்ற பொருள்களையும் இப்படிப் புதைத்திருக்கலாம்.

இம்மாதிரி இந்த நிருபர் எழுதுவதில் இவர் எழுதுவது முழுதும் கதையோ உண்மையோவென்று சந்தேகம் உண்டாகிறது. கிழவன் கிழவிகளை திராவிட ஜாதியார் மதிப்பது உண்மையானால், அவர்களை உயிருடன் புதைப்பதுதானா லக்ஷணம்? மேலும், அக்காலத்தில் செத்தவர்களைப் புதைப்பது வழக்கமோ அல்லது எரிப்பது வழக்கமாயிருந்ததோ தெரியவில்லை? இந்த நிருபர் எழுதும் மூன்று சமாதானங்களில் அக்காலத்தில் சாவதானக் குறைவினால் ஜனங்கள் தங்கள் பொருள்களை புதைத்து வைத்தார்களென்பது உண்மையா யிருக்கக் கூடும்.

—சுதேசமித்திரன்.

## LADIE'S SECTION.
## ஸ்திரீகள் பகுதி.

A LADY DOCTOR.

**ஒரு ஸ்திரீ டாக்டர்.**—யாழ்ப்பாணவாசி மாதுஸ்ரீ எல்லம்மாள் இங்கிலாந்திற்குப்போய் வைத்தியபரீட்சையில் தேறி எல். ஆர். ஸீ. பீ. பட்டம் பெற்றிருக்கிறார். யாழ்ப்பாணத்துப் பெண்களுள் இவரே முதன் முதல் இங்கிலாந்திற்குச் சென்று டாக்டர் பரீட்சையிற் தேறியவர்.

WIDOWHOOD.

**வைதவ்யம்.**—ஸுமாத்ரா தீவில் வசிப்பவர்கள் ஓர் விசித்திர ஆசாரம் கொண்டாடுவோர்கள். விதவையான ஸ்திரீ தன் வீட்டில் ஓர் கம்பமூன்றிப் பாவுடா ஒன்றைக்கட்டுவாள். அது கிழியும்வரையில் மறுவிவாக மில்லை. துணி நாசமானால் அன்றோடு வைதவ்யம் முடிந்து வேறு வரனை மணக்கலாம்.

GOOD MOTHER-IN-LAW.

**நல்ல மாமி.**—கற்றறிந்த மணமகளை நீராட்டி பாலூட்டி புடவை தோய்த்து மையிட்டுப்பொட்டிட்டு உட்காரவைத்து வீட்டுக்காரியம் முழுவதையும் செய்தால் மாமி நல்லவள்; இல்லாவிட்டால் நாகரிகம் தெரியாதவள். பொறாமைக்காரி, அறுவருப்புள்ளவள், இங்கிதம் அறியாதவள், பிள்ளையைப் பெற்று ஆயிரம்பாடு அரும்பாடுபட்டு வளர்த்து அந்தியகாலத்தில் ஆபத்துக்குதவுவானென்றெண்ணப் படும் மருமகள் மாமியாரை எண்ணி நடத்துவது இப்படிதான்.—ஆரண்யவாசி.

NUMBUDRI FEMALES.

**நம்பூதிரி ஸ்திரீகள்.**—மனுஸ்மிருதி 9-வது அத்தியாயம் 89-வது ஸ்லோகத்தை ஆதாரமாகக் கொண்டு நம்பூதிரிகள் தங்கள் ஸ்திரீகளுக்கு எந்த வயதில் வேண்டுமானாலும் கல்யாணம் செய்து வருகிறார்கள். அந்த ஸ்லோகத்திற்குப் பொருள், "தகுந்தவான் (அதாவது, குலம், கோத்திரம், அத்தியாயனம், ஆசாரம் முதலிய லக்ஷணங்கூடியவன்) கிடைக்காதவரையில் தகப்பன் தன் பெண்ணைச் சாகும் வரையில் வீட்டிலாவது வைத்திருக்க வேண்டுமல்லது, வயது கூடிவிட்டதே யென்று 'கம்பகாலுக்குக் கட்டக்கூடாது, என்பதாம்! இந்தியாவிலுள்ள இதரப் பிராம்மணர்கள் இதைக் கவனிக்கவேண்டும்.

RICHEST WOMEN IN THE WORLD.

**உலகத்தில் பெருஞ்செல்வமுடைய ஸ்திரீகள்.**—தென்னமெரிக்காவிலுள்ள ஸினோராகஸின் என்னும் ஸ்திரீக்குள்ள சொத்துக்கள் 40கோடி பவுண்டு மதிப்புடையனவாம். ஜர்மனியிலுள்ள ப்ரூ என்னும் ஸ்திரீக்கு வாரமொன்றிற்கு 10,006 பவுண்டு வரும்படியுள்ள சொத்துக்களிருக் கின்றனவாம். வட அமெரிக்காவிலுள்ள மிஸ்ஹெட்டி கிரீஸ் என்னும் ஸ்திரீக்கு 12,000,000 பவுண்டு மதிப்புள்ள ஆபரணங்களிருக்கின்றனவாம். மெக்ஸிகோவிலுள்ள மிஸக்ரீஸ் என்னும் ஸ்திரீக்கு வருஷத்தில் 500,00,000 டாலர் வரும்படியுள்ள சொத்தும், 6,00,000 கால்நடைகளும் (குதிரை, பசுமுதலியனவும்) இருக்கின்றனவாம்.

PROSTITUTION OF GIRLS.

**பெண்களைக் கெட்டவழியில் உபயோகப்படுத்தல்.**—சில சிறு பெண்களைக் கெட்டவழியில் உபயோகப் படுத்தும் நோக்கத்துடன் அவர்களுக்குக் கோவில்களில் பொட்டுக் கட்டுவதும் அவர்களைத் தத்து வாங்கிக் கொள்வதுமாகிய வழக்கத்தைப்பற்றி இந்தியருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து ரிப்போர்ட் செய்யும்படி இந்தியா மந்திரி ஓர் உத்தரவு அனுப்பியிருக்கிறார். அதைப்பற்றி அவசியமானால் சட்ட நிபந்தனைகள் செய்யப்படுவதாக யோசனை இருக்கின்றது. இப்படி இந்தியா செக்ரிடெரி செய்திருக்கும் யோசனையை ஹிந்துக்கள், முக்கியமாய்ப் படித்தவர்கள் சம்மதத்துடன் ஏற்பார்களென்பதிற் சந்தேகமில்லை.

SUIT FOR £4000 DAMAGES.

**4000 பவுனுக்கு வழக்கு.**—சான்ப்ரான்ஸிஸ்கோ பட்டணம் பூமியதிர்ச்சியால் சேதமடைந்தபோது ஓர் மாது அதிகம் பயப்பட்டதால் அவளது தலைமயிர் முழுதும் நரையாய்ப்போயிற்றும். இதை மறுபடியும் கறுப்பாக்கவெண்ணி, மிகவும் சிலாகித்துப்பேசப்பட்ட சாயமருந்தொன்றை வாங்கிப் பூசினளாம். மயிரைக் கறுப்பாக்குவதற்குப் பதிலாய்

பச்சை நிறமாக்கிவிட்டதாம். இப்போது அவள் தலை மயிர் கிளியின் நிறம்போலிருக்கிறது, அதினிமித் தம் தனக்கு 4000 பவுன் நஷ்டங் கொடுக்கும்படி அம்மருந்து வியாபாரிகள் மேல் வழக்குத் தொடுத்தி ருக்கிறாளாம்.

BURMESE WOMAN.

பர்மா ஸ்திரீகள்.—பர்மியர்களுக்கு மதாபிமா னம் கிடையாது. இந்து ஸ்திரீகளைக் காட்டிலும் பர்மிய மாதர்கள் அழகிற் சிறந்தவர். ஆனால் கற்போ நிச்சயமில்லை அந்நியர்களை ஆதரிப்பதில் அதிக ஆர்வமுள்ளவர்கள். பெரிய மட்சால்களில் மீனை யும் இடையே உப்பையும் கொட்டி மூடி பூமியில் 3-மாதம் புதைத்தெடுத்து அம்மாமிசங்கள் நிறைய இருக்கிற புழுக்கள் சகிதமாக உரலிற் போட்டு இடித்து அதில் ஊறிய தண்ணீரை வேறாக எடுத் துக்கொள்வர். இதற்கு நம்பி என்று பெயர். இதைப் பர்மியர்கள் நெய்யைப் போலக் கருதி எல்லா பதார்த்தங்களுக்கும் உபயோகப்படுத்துவார். பாம்பைக்கண்டால் உடனே தலையை வெட்டிவிட்டு பாம்புக்கறி சமைத்து விடுவார்கள். மனித ஜீவன் ஒன்றுபோக மற்றதெல்லாம் அவர்கள் வயிற்றுக்குத் தான். பர்மிய ஸ்திரீகளைப் புருஷ அவதார மென் றே சொல்லவேண்டும்.

AN AGED WOMAN PENSIONER.

பென்ஷன் சம்பளம் பெருங்கிழவி.—மெஸ்ஸே ஷரே பெக்கா கிளாக் என்னும் 107-வயதுள்ள கிழவியே உலகத்தில் பென்ஷன் சம்பளம் பெறும் பெண்களுள் அதிக வயதுடையவள். இவ்விருத்தை தமது 106-ம் பிறந்தநாட் கொண்டாட்டத்தைச் சென்ற வருடத்திலே ஓர் மோட்டர் வண்டியிலேறிக் கொண்டாடினாள், இவள் இப்போதும் கண்ணாடி யில்லாமல் ஊசியில் நூல்கோர்க்குஞ் சக்தியுடைய வளாயிருக்கிறாளாம்.

CRADLES.

தொட்டில்கள்.—நம்முடைய தேசத்தில் சாதா ரணமாய் துணியினால் தொட்டில்கட்டி அதில் குழந் தைகளைப் படுக்கவைப்பது வழக்கம். இதில் குழந் தைகள் கிடத்தின மாதிரியாய்ப் படுத்திருக்க முடியு மேயன்றி தங்களுக்கிஷ்டமானபடி திரும்பிப் படுக்க வாவது கை கால்களை ஆட்டி அசைக்கவாவது முடி யாது. சுத்தமான காற்றுத் தாராளமாய் உட்செல்ல இடமிராததால் குழந்தை அடிக்கடி விழித்து அழும் சில குழந்தைகள் கால்பக்கமாயாவது தலைப்பக்கமா யாவது நழுவி கீழேவிழுந்து விடுவதுமுண்டு. அப் படி விழும்போது கால் கைகள் சிக்கிக்கொள்வதால் சில குழந்தைகள் தலைகீழாய்த் தொங்குவது முண்டு. ஆகையால் துணித்தொட்டிலைவிட சுற்றிலும் கிராதி யுள்ள சிறு மரக்கட்டிலே நல்லது.

A GOOD LESSON.

விவேகபோதம்.—ஒரு அடங்காப் பிடாரிக்கு உண்டான அனர்த்தம்:—ஒரு புருஷனுக்கும் அவன் பெண்சாதிக்கும் வாக்குவாதம் உண்டாகி அவன் பெண்சாதியைப் பழிவாங்குவேனென்று சொல்ல, அவள் "என்ன பழி வாங்குவா" யென்று கேட்க "கொல்லையிலிருக்கிற குளத்தில் விழுந்துவிடுவேன் என்று புருஷன் சொன்னான். அவள் "நீ விழு கிறதை நான் கண்ணாலே பார்க்கவேண்டும், வா" என்று திட்டி, மடியைப் பிடித்து இழுக்க அவன் குளத்தில் விழுவதற்காக ஒரே ஓட்டமாக ஓடினவன் பிற்பாடு பயந்துகொண்டு, குளத்து ஓரத்தில் நின்றுவிட்டான். உடனே அவனை அவன் பெண் சாதிவாயில் வந்தபடி தூஷித்து, "வெட்கம் கெட்ட வனே, ஏன் குளத்தில் விழவில்லை? என்று கேட்க, அவன் "எனக்கு மனந்துணியவில்லை. பின்னும் என க்கு நீஞ்சத்தெரியும் ஆனதால் நான் தப்பிவந்தாலும் வந்துவிடுவேன், நான் தப்பி வாராதபடி யென்னு டைய இரண்டு கைகளையும் நீ பின் கட்டுமுறையா ய்க்கட்டிவிட்டு, நீ தூரத்திலிருந்து ஓடிவந்து என் னைக் குளத்திலே தள்ளிவிடு என்று" சொல்லிக் குளத்து ஓரத்தில் நின்றான். அந்தப் பிரகாரம் பெண்சாதி பர்த்தாவினுடைய இரண்டு கைகளை யும் பின்புறமாய்க் கட்டிவிட்டு, அவள் வெகுதூரம் பின்னிட்டுப்போய் அவனைத் தள்ளுவதற்காக அதிவேகமாக ஓடிவந்தாள். அவள் தனக்குச் சமீ பத்தில் வரும்போது அவன் திடீரென்று அப்பால் விலகிவிட்டான். அவள் ஓடிவந்த விசையினால் அவளே ஒரு நிமிஷத்தில் குளத்தில் விழுந்துவிட் டாள். உடனே தன்னைத் தூக்கிவிடும்படி கத்தி னாள். நீயே யென் கைகளைக்கட்டிவிட்டாயே நா னென்னசெய்வேன்" என்று புருஷன் சும்மா இருந்துவிட்டான். அவள் சொந்த அபாரதத்தி னால் தண்ணீரில் முழுகி இந்த லோகத்தையே விட் டுப் போய்விட்டாள்.

## DEPARTMENTAL NOTES.
## பகுதிக் குறிப்புகள்.

### AGRICULTURAL NOTES.
### விவஸாயக் குறிப்புகள்.

FRUIT TREES.

**பழ மரங்கள்.**—பழமரங்கள் காய்க்காவிட்டால் துளிர் விடும் ஸமயத்தில் பளுவுள்ள கல் இரும்பு முதலியவைகளை கிளைகளில் தொங்கவிட்டு வளைக்க, புஷ்பிக்க ஆரம்பிக்கும்.

A BIG PLANTAIN BUNCH.

**ஒரு பெரிய வாழைக்குலை.**—யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சார்ந்த சுதுமலையிலுள்ள ஒரு பள்ளனது வீட்டில் ஒரு வாழைமரம் 47-சீப்புக்களுடைய குலை தள்ளியது; இவ்வாழை கப்பல் வாழையாம்.

PALM DISEASE.

**பனை தென்னை நோய்.**—நமது கவர்ன்மெண்டார் அடுத்த வருஷம் மார்ச்சு மாத பரியந்தம் கோதாவரி கிருஷ்ண ஜில்லாக்களிலுள்ள பனை மரங்களுக்கும் தென்னை மரங்களுக்கும் நேர்ந்துள்ள நோயை நிவிர்த்தி செய்யும் வேலையை நடத்திவர அதிகாரிகளுக்கு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

GOOD BULLS.

**நல்ல காளை.**—குளம்புகள் கருப்பு நிறமாயும் வட்ட வடிவாயும் பலத்த நெருங்கிய இடையில்லாமலும் இருக்கவேண்டும். கண்கள் இருண்டநிறமாயும், தெளிவானவாயும், நெற்றிபரந்தும், காதுகள் சிறுத்தும் மேல்நோக்கியும், கழுத்து குறுகியும், விசாலமாயும், நெஞ்சு படர்ந்தும், செட்ட நாடியாயும், கோசமில்லாததாயும், பருத்த மார்கள், குறுங்கால்களாயும், அருணவிலுள்ளதாயும், மிருதுவான தோலுடையதாயு மிருக்கவேண்டும். பலத்தைக் காட்டுகிற மயிலை நிறமே சிலாக்கியம்.

SEED PADDY.

**விதைநெல்.**—ஈரந்தாவாமல் விதைநெல்லை வைத்துக்கொள்ளவேண்டும். ஈரந்தாவுமானால் முளைக்குந்தன்மை கெட்டுப்போம். விதைநெல்லை அந்துப்பூச்சி அடிக்காமல் வேப்பிலை, கடலையிலை, மரச்சாம்பல், எலுமிச்சையிலை, காய்ந்த மிளகாய் இவைகளைக் கலந்துவைப்பது வழக்கம். நாப்தலீன் என்னும் மலிவான பூச்சிமருந்து இதுகாரியத்தில் மெத்தப் பிரயோசனமானது.

GOOD COW.

**நல்ல பசு.**—முகம் ஒடுங்கியதாயும், சதையில்லாததாயும், கண்களுக்கு கீழ் நீண்டும் மான்முகம் போலும் பருமனுக்கு தக்கவயிறும் பெரிய மடியும் பால் காம்புகள் சுரப்புள்ளதாயும் (கறந்தவுடன் சுருங்கக்கூடியவை—சதையுள்ள கல்மடியல்ல) முன் காம்புகள் பின்காம்புகளைப் பார்க்கப் பருமனுகவும் காம்புகள் கலக்கவும் பால்தாரை துலாம்பரமாய்த் தெரியக்கூடியதா யிருக்கவேண்டும். கெட்டகுணமுள்ள பசு ஸரியான கறவையில்லாததென்று திட்டமாய்ச் சொல்லலாம்.

THE TINDIVANAM AGRICULTURAL ASSOCIATION.

**திண்டிவனத்தில் விவஸாய சங்கம்.**—'திண்டிவனம் விவசாய சங்கம்' என்று ஒரு சங்கம் ஸமீபத்தில் திண்டிவனத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டணத்திய கனவான்களில் சிலர் அச்சங்கத்தின் அங்கத்தினராய்ச் சேர்ந்திருக்கிறார்கள்.

LEECHES AND CATTLE.

**அட்டைகளும் ஆடுமாடுகளும்.**—ஆடுமாடுகள் சகதியில் மேயும்பொழுதும், அழுக்குஜலத்தில் இருக்கும்பொழுதும், மேயும்பொழுதும், அட்டைகள் மூக்கில் ஏறுமானல் அவைகள் இடைவிடாமல் தும்பும். அப்போது உப்புக்கரைத்த ஜலத்தை மூக்கில் விட, அட்டை நகர்ந்து வரும். சிம்டாக்களினல் பிடுங்கிவிட்டு ரத்தம் பெருகாதபடி உப்புத்தூள் அடைக்க வேண்டும்.—தென்னிந்திய விவஸாயம்.

AN AGRICULTURAL AND INDUSTRIAL ASSOCIATION.

**விவஸாயக்கைத்தொழில் சங்கம்.**—ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களில், விவஸாயம் கைத்தொழில்களின் ஸபை மதுரையில் கூட்டப்பட்டு அதற்கு ராமநாதபுரம் கலெக்டர் மிஸ்டர் ஜெ எப். ப்ரையண்ட் ப்ரஸிடெண்டாகவும், மதுரை கலெக்டர் மிஸ்டர் ஜே. ஆர். ஹக்கின்ஸ் வைஸ் ப்ரஸிடெண்டாகவும் நியமிக்கப்பட்டார்கள். விவஸாயப்

போதகர் ஒருவருக்கு 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையில் உயரும்படியான சம்பளம் கொடுத்து இந்த ஸபை சம்பந்தமான பண்ணையை நடத்தவும் விவஸாயிகளுக்கு அங்கங்கு போய் அனுபோகத்தில் உபயோகப்படும்படியான அறிவைப் புகட்டவும் வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது.

MANURING FOR COCOANUTS.

**தென்னைக்கு எரு.**—ஆடுமாடுகளின் எரு மிக சிரேஷ்டம். ஆனல் அது போதுமான அளவு கிடைப்பதில்லை. ஆகையால் சேர்க்கை எருக்களையே உபயோகப்படுத்தவேண்டும். ஆனல் எந்த எருவும் 2 வருஷங்களுக்கு மேலாக நிற்பதில்லையாகையால், வருஷத்துக்குபாதிதோப்பாக, தோப்பு முழுவதையும் இரண்டு வருஷத்திற்கு ஒருதடவையாக எருவிடவேண்டும். எருப்போட்டதும் பலிக்கவில்லையே என்று மனம் தளரலாகாது. எந்த எருவும் மரத்தில் பிடிக்க ஆறுமாதம் செல்லும். அதன்பின் குரும்பை பிடித்தது முதல்முதிர ஒரு வருஷம் பிடிக்கிறது. ஆகையால் ஆத்திரப்படக்கூடாது. எரு காய்ப்பை அதிகரிப்பதுடன் மரத்தின் ஆயுளையும் 20 வருஷம் முதல் 30 வருஷம் வரையில் விருத்தியாக்குகிறது.

BEST TIME FOR MANURING PADDY.

**நெல்லுக்கு எருவிடும் ஸமயம்.**—நெல் விளைச்சலில் எந்த ஸமயத்தில் எருவிடுவது யுக்தமென்று செய்த பரீக்ஷையில் நெல்லானது தன் ஆயுளில் மூன்றில் இரண்டு பங்கு காலத்துக்குள் தான் முற்றிப் பழுப்பதற்குவேண்டிய அளவு ஸத்தில் நைட்ரோஜன் பாஸ்பரெஸ் இவைகளில் ஐந்தில் நாலு பங்கையும், சாம்பல்காரத்தை பத்தில் ஒன்பது பங்கையும் அடைவதாகத் தெரிகிறது. ஆகவே நெல்லுக்கு வேண்டிய எரு ஸத்தை நடுவதற்கு முன்னதாகவே நிலத்தில் கலப்பது யுக்தம். சீக்கிரம் கரையும் தன்மையுள்ள ரஸாயன எருக்களை இளமைப்பருவத்தில் மண்ணில் கலப்பது அவசியம். ஷை மூன்றுவித எரு ஸத்துக்களில் நைட்ரோஜனே அவசியம் இருக்கவேண்டியதென்று தெரிகிறது.

பெட்லுப்பு வகைரா எருக்களை விட நவசாரவகை எரு தக்க வளர்ச்சியையும், மேனியையும் தந்தது.

INDIA AND DENMARK.

**இந்தியாவும் டேன்மார்க்கும்.**— நம்தேசத்தில் விவசாயத்தை அபிவிருத்தி செய்து ஜனங்கள் எப்படி சுகமாக ஜீவிக்கலாம் என்பதற்குத் திருஷ்டாந்தமாய் ஸர் ஜார்ஜ் கிளார்க் ஸமீபத்தில் ஐரோபாவிலுள்ள டென்மார்க்கு தேசத்தைச் சொன்னர். இந்த தேசம் 1864-ம் வருஷத்தில் நடந்த யுத்தத்தால் அதன் வளப்பமான பாகங்களை இழந்துவிட பாக்கி இருந்த விஸ்தீரணம் 15,500 சதுரமைலில் வசித்த ஜனத்தொகை 25 லக்ஷம். இவர்கள் தங்களுக்கு மிஞ்சின இளப்பமான பூமியில் விவசாயம் செய்து பிழைக்க வேண்டியவர்களானர்கள். டென்மார்க்கு தேசத்தார் மனம் சலிக்காமல், விவசாய சாஸ்திரத்தை உபயோகித்து, ஐக்கியச் சங்கங்களை ஸ்தாபித்துக்கொண்டு மணற்பூமியாயும் சதுப்பு பூமியாயுமிருந்த தங்கள் நிலத்தைப் பயிரிட்டு, அவசியமான உணவுப் பொருட்களைப் பெற்றதுமன்றி விவசாயிகள் செய்யக்கூடிய வேறு தொழில்களைச் செய்து லாபம் சம்பாதித்தார்கள். வெண்ணெயும், பன்றிமாம்சமும், கோழி, வாத்து முதலியவைகளின் முட்டைகளும், ஏராளமாக உண்டுபண்ணி அன்னிய தேசங்களுக்கு அனுப்பத் தலைப்பட்டார்கள். இவைகளும் மற்ற விவசாயப் பொருள்களும் 1907-ம் வருஷம் அன்னிய தேசங்களுக்கு அனுப்பப்பட்ட மொத்தம் 3-கோடி 35 லக்ஷம் பவுன் (அதாவது 50கோடி ரூபாய் உள்ளது). டென்மார்க்கிலுள்ள 25 லக்ஷம் ஜனங்கள் 50 கோடிக்குமேல் அன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்வார்களானல், அதாவது ஜனத்தொகையில் ஒவ்வொருவனும் ஏற்றுமதி செய்யும் சாமான்களால் வருஷத்திற்கு 200 ரூபா பெறுவானனல், அவர்களுடைய ஒற்றுமையும் ஊக்கமும் எவ்வளவுபயனை விளைவித்திருக்கிறதென்பது விளங்குகின்றது. ஜப்பானை இந்தியாவுக்கு மற்றொரு திருஷ்டாந்தமாகச் சொல்லலாம். அங்கு விவசாயம் செய்பவர்கள் சொற்ப பூமியை வைத்துப் பயிர் செய்பவர்கள். விவசாயம் செய்பவர்களில் நூற்றில் 55 பெயர் இரண்டு ஏகரா பூமியும், நூற்றில் 35 பெயர் 4 ஏகரா பூமியும், பயிர் செய்கிறவர்கள். இந்திய விவசாயிகளைப்போல் அவர்களும் ஏழைகள். அப்படி இருந்தும் அவர்கள் ஊக்கத்தாலும் புது மாதிரிகளை உபயோகப் படுத்தியும் ஒவ்வொருவனும் மண்வெட்டிகொண்டு வெட்டி சாகுபடி செய்கிறபடியால் அத்தேசத்தார் ஜீவிக்கிறார்கள். அவர்கள் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படும் கல்வியால் பூராவாகவும், நன்மை பெறும்படியான யோக்கியதையைப் பெற்றிருக்கிறார்கள்,

## INDUSTRIAL NOTES.
## கைத்தொழில் குறிப்புகள்.

PAINT.

**வர்ணம்.**—பாலினால் செய்யும் வர்ணம் மரவேலைகளுக்கு உதவுகிறது. $2\frac{3}{4}$படி எருமைப் பாலில் ஒரு வீசை சிமிட்டியைக் கலந்துகொண்டேயிருக்க வேண்டும். அடியில் படியும் சிமிட்டியைப் புருசால் எடுத்துத் தடவ வேண்டும். ஆறுமணி நேரத்தில் கல்போல் பிடித்துக் கொள்ளுகிறது ; பிறகு இது விடுவதில்லையாம்.

FACTORIES IN THE MADRAS PRESIDENCY

**சென்னை ராஜதானியில் தொழிற்சாலைகள்.**—சென்ற வருஷத்தில் இச்சென்னை ராஜாதானியிலுள்ள தொழிற்சாலைகளின் மொத்தத்தொகை 181. தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளிகளின் ஸராஸரித்தொகை 50314. பிரஸ்தாப வருஷத்தில் நேர்ந்த தொழிற்சாலை விபத்துக்கள் 364. அவ்விபத்துக்களில் 5-விபத்துக்கள் மரணத்துக்கு ஹேதுவாயிருந்தன. 29 விபத்துக்கள் பலத்த விபத்துக்களாயிருந்தன. மற்றவைகள் ஸாதாரண விபத்துக்களாக விருந்தன. சென்னையில் மரணத்துக்குக் காரணமாயிருக்கும்படி நேர்ந்த விபத்துக்களில் சில மனிதனுக்கு நேர்ந்த விபத்துக்கள் குறிப்பிடத்தக்கவை. ஒரு மனிதன் ஒரு கிளிஞ்சில் சுண்ணும்புக் காளவாயில் படுத்துத் தூங்கி தேகத்துக்கு ஒவ்வாத விஷக்காற்றை உட்கொண்டு இறந்துபோனான். ஒருவன் ஸ்டீம் எஞ்சின் பிஸ்டன் ஒன்று வெடித்து இறந்து போனான். வேறொருவன் மின்சாரம் ஓடிக்கொண்டிருந்த கம்பி யொன்றைப் பிடித்து இறந்தான். தொழிற்சாலைக் கூலிகளுக்குக்கிடைத்த கூலி விகிதங்கள் விவசாயக் கூலிகளுக்குக் கிடைத்த கூலிகளை விட அதிகமாகவே யிருந்தன.

BLACK WRITING INK.

**எழுதுகிற கறுப்பு மை.**—கடுக்காய்த்தூள் பலம் 18, அன்னபேதித்தூள் பலம்8, விளாம்பிசின் அல்லது கருவேலம்பிசின் பலம்7, சுத்தஜலம் பலம் 145, ஆகிய இவைகளுள் கடுக்காய்த்தூளை முதலிலெடுத்து 130, பலம் ஜலத்திற்போட்டுக் கொதிக்கவைத்து, மிகுதி 15 பலம் ஜலத்தில் அன்னபேதியையும் பிசினையும் அரைத்துக் கரைத்துக் கொதிக்கும் ஜலத்திற் கொஞ்சம்கொஞ்சமாய்ப் போட்டு செவ்வையாய்க் கொதிக்கவைத்து இறக்கிப் பாத்திரத்தின் வாய்க்குத் துணியினால் வேடுகட்டி மூன்று நாள் வைத்திருந்து பிறகு எடுத்து வடிகட்டிப் புட்டியில் அடைத்துக்கொள்ளவும்.

**இன்னொரு முறை.**—சூரத்துக்கடுக்காய்த்தூள் பலம் 15. கோந்து அல்லது கருவேலம்பிசின் பலம் $3\frac{1}{2}$. அன்னபேதி பலம் 8, மாசக்காய் பலம் 3. சுத்தஜலம் பலம் 135, இவற்றுள் மாசக்காயை ஒரு சட்டியிற்போட்டு வறுத்துச் செவ்வனே சிவந்து பின்கறுப்பாகும் தருணம் பார்த்து இறக்கி ஆறவிட்டுத் தூள் செய்துகொண்டு கடுக்காய்த் தூளையும் சேர்த்து 125, பலம் ஜலத்திற் போட்டுக் கொதிக்கவைத்து, பிறகு 10 பலம் ஜலத்தில் ஷி பிசினையும் அன்னபேதியையும் அரைத்துச் சிறுகச்சிறுக, கொதிக்கும் கடுக்காய் ஜலத்துடன் கலந்து கொதிக்கவைத்திறக்கித் துணி வேடு கட்டிவைத்து மூன்று நாளைக்குப் பிறகு வடிகட்டிப் புட்டியில் அடைத்துக் கொள்ளவும். இது முன் மையைவிட மிகக் கறுப்பாயிருக்கும்.

SAGO.

**சவ்வரிசி.**—மலாய்த் தீவில் சவ்வரிசி எடுக்கும் மரங்கள் ஈரம் பிடித்த சதுப்பு நிலங்களில் வளர்கின்றன. தாளிப்பனை, கூந்தல் பனை முதலிய செடிகளிலிருந்து மலையாளத்தில் சவ்வரிசி யெடுப்பதுண்டு மரம் நன்றாய் முற்றி பூவெடுக்கும் ஸமயத்தில் அடியோடு வெட்டி 3-4 அடி நீளத்துக்கு ஒரு துண்டாக வெட்டி அனேகநாள் ஜலத்தில் ஊறவைப்பார்கள். மேல் நாரைப் பக்குவமாய்ச் செதுக்குவார்கள். மீதித் துண்டுகளை நன்றாய் யந்திரத்தில் சுராண்ட வாள் தூள் போலாகிறது. உயரமான முக்காலி அல்லது நாற்காலியில் ஒரு சாக்கைக் கட்டி அதில் ஷி தூளைப் போட்டு ஆள் ஒருவன் கோணிப்பைக்குள் ஏறி, ஜலம் விட்டு மிதித்துத்துவைத்து சுத்த ஜலத்தை அபரிமிதமாய்க் கொட்டுவார்கள். அடியில் வைத்திருக்கும் மூங்கில் தொட்டியில் மாவு இறங்கிவிட நார்மாத்திரம் சாக்கில் நிற்கும். சிலநாள் சென்றபிறகு ஜலத்தை இறுத்து மாவை உலர்த்தி பைகளில் அடைத்து சுத்திசெய்யுமிடத்துக்கு அனுப்புவார்கள்.—தென்னிந்தியா விவஸாயம்.

## EDUCATIONAL NOTES.
## வித்யாவிஷயக் குறிப்புகள்.

ELEMENTARY SCHOOL.

**எலிமண்டரி பாடசாலைகள்.**—கவர்ன்மெண்டார் அடியில்கண்ட ஜில்லாக்களில் பிள்ளைகளுக்காக 654 எலிமெண்டரி ஸ்கூலும் பெண்களுக்காக 60 எலிமெண்டரி ஸ்கூலும் ஸ்தாபிக்கப்படவேண்டு மென்று லக்ஷம்ரூபா ஸாங்ஷன் செய்திருக்கிறார்கள். சீக்கிரத்தில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படும்.

| ஜில்லா | பாலியர் பாடசாலைகள் | பெண் பாடசாலைகள் | மொத்த அலாட்மெண்ட் |
|---|---|---|---|
| அனந்தபுரம் | 89 | 5 | 11630 |
| வடஆர்காடு | 33 | .. | 5152 |
| தென்ஆர்காடு | 19 | 4 | 3395 |
| பல்லாரி | 25 | 3 | 3791 |
| தென்கன்னடம் | 34 | 5 | 5810 |
| செங்கற்பட்டு | .. | .. | 3000 |
| சித்தூர் | 20 | .. | 2653 |
| கோயமுத்தூர் | 17 | 2 | 2530 |
| கடப்பை | 20 | 5 | 3203 |
| கஞ்சம் | 15 | 1 | 2415 |
| கோதாவரி | 18 | 4 | 3088 |
| குண்டூர் | 50 | .. | 6182 |
| கிருஷ்ணா | 86 | 8 | 12357 |
| கர்நூல் | 16 | 4 | 2972 |
| மதுரை | 21 | 1 | 3060 |
| மலையாளம் | 9 | .. | 1470 |
| நெல்லூர் | 29 | 1 | 3922 |
| நீலகிரி | 2 | .. | 315 |
| ராமநாதபுரம் | 8 | 3 | 1886 |
| சேலம் | 13 | .. | 1400 |
| தஞ்சாவூர் | 53 | 4 | 7855 |
| திருநெல்வேலி | 22 | 3 | 3493 |
| திருச்சினாப்பள்ளி | 30 | 2 | 4130 |
| விசாகப்பட்டணம் | 25 | 5 | 4291 |
| மொத்தம் | 654 | 60 | 1,00,000 |

இம்மாதிரியாக உபகரிக்கப்படும் பணவுதவியை முன்னிட்டு அனுஸரிக்கவேண்டிய விதிகள் இன்னின்னவை யென்றும் கவர்ன்மெண்டார் குறிப்பிட்டிருக்கிறார்கள்.—(1) தற்போது பாடசாலைகள் ஏற்படுத்தப்படாமலிருக்கும் முக்கியமான கிராமங்களில் புதிய பாடசாலைகள் ஸ்தாபிப்பதற்கே இப்பணம் செலவழிக்கப் படவேண்டும்; (2) இப்பணத்தைக்கொண்டு எய்டெட் பாடசாலைகள் எனப்படுபவைகளை போர்டு ஸ்கூல்களாக மாற்றவாவது, ஏற்கெனவே எய்டெட் ஸ்கூல்கள் இருக்கும் கிராமங்களில் இப்பாடசாலைகளை யேற்படுத்தவாவது கூடாது; (3) ஒரு பாடசாலையை யேற்படுத்தினதும், அதில் கற்பிப்பதற்காக இரண்டு உபாத்தியாயர்களுக்கு அதிகமாய் அமர்த்தலாகாது; (4) பிரஸ்தாப வருஷத்தில் செலவழியாமல் தங்கிப் போய்விடும் தொகையானது இதே விஷயத்திற்காக அடுத்த வருஷ பட்ஜெட்டிலும் அலாட்மெண்டு செய்யப்படும்.

STATE AID TO SCHOOLS.

**ஸ்கூல்களுக்கு கவர்ன்மேண்ட் உதவி.**—திருவல்லிக்கேணி ஹிந்துஹை ஸ்கூல் பரிசளிப்புக் கொண்டாட்டத்தில் ஒரு முறைப்பாடு செய்யப்பட்டது. இந்தியர்கள் வைத்து நடத்தும் ஸ்கூல்களுக்கு மானேஜர்களாக முன் வருகிறவர்கள் இந்த ஸ்கூல்களை நடத்தப் பணவுதவி போதாமல் ஜனங்களின் ஒத்தாசையைக் கோரியாவது, தங்கள் சொந்தப் பணத்தைச் செலவிட்டாவது நடத்தவேண்டியிருக்கிறது. கவர்ன்மெண்ட் கொடுக்கும் பணவுதவி போதுகிறதில்லை. ஜனங்களிடமிருந்து பணவுதவி கிடைப்பது அரிதென்று கவர்ன்மெண்டுக்குத் தெரியாத தல்ல. ஐரோப்பிய தேசங்களுக்கும் இந்தியாவுக்கும் இந்த விஷயத்தில் பேதமுண்டு. இந்தியா ஏழைதேசம். ஜனங்கள் செய்யுந் தருமம் இங்கிலீஷ் ஸ்கூல்கள் விஷயத்தில் உபயோகப் படுவதில்லை. அப்படியிருந்தும் பல இந்தியர் தேசாபிமானத்தால் ஸ்கூல்கள் வைத்து நடத்துகிறார்கள். கிறிஸ்தவப் பாதிரிகள் நடத்தும் ஸ்கூல்களிற் செய்யபபடும் செலவெல்லாம் ஐரோப்பிய தேசங்களிற் சேர்க்கப்படும் நிதிகளிலிருந்து செய்யப் படுகிறபடியால் அந்தப்பாதிரிகளுக்கும் இந்திய தேசாபிமானிகளுக்கும் வித்தியாஸமுண்டு. ஆகையால், கவர்ன்மெண்ட் அதிக ஒத்தாசை செய்தாலொழிய வாத்தியார்களுக்குப்போதுமான சம்பளங்கள் கொடுக்கவும், ஏழைக் பிள்ளைகளுக்கு உதவியாக ஸ்காலர் ஷிப்புகள் கொடுக்கவும் இயலுகிறதில்லை. இப்படி முறையிட்டதற்கு அக்ராஸனம் வகித்த ஸர் மர்ரே ஹாமிக் என்ன பதில் சொன்னாரென்றால்:—கனம் சேஷகிரி அய்யர் இந்த விஷயமாய்ப் பலதடவை தம்மைப் பார்த்திருக்கிறாரென்றும், அவருக்குத் திருப்தி கொடுக்கும்படியாய்த் தாம் பதிற் சொல்லக்கூடவில்லை என்றும், திறமையாய் நடத்தப்பட்டு ஏற்கெனவே அதிகச் செலவு செய்யும் ஸ்கூல்கள் கட்டிடத்துக்காவது ஸயன்ஸ் கருவிகள் முதலிய உபகாணங்களுக் காவது உதவி கேட்டால் கவர்ன்மெண்ட் அதைப் பற்றி தாராள மனதுடன் கவனிக்கத் தயாராயிருக் கிறார்களென்றும் சொன்னார்.

## SCIENTIFIC NOTES.

## சாஸ்திரீயக் குறிப்புகள்.

---

### LIFE PICTURES.

**உயிர்ப் படங்கள்.**—க்ராமபோன் என்னும் ப்ரதியொலிக்கும் வாத்தியக்கருவியை வீனிமேட்ட கிராப் என்னும் விநோதப் படத்தோடு ஸம்பந்தப் படுத்தி, ஏககாலத்தில் அபிநயத்தோடு பேசவுஞ் செய்ய முயற்சித்து, எடிஸன் என்பவர், அநேக மாய்ச்சித்தி பெற்றுவிட்டாராம்.

### INSECT PEST.

**பயிரை அழிக்கும் பூச்சிகள்.**—பயிராகும் ஒவ்வொரு செடியையும் சில பூச்சிகள் அழிப்பதுண்டு. ஸாதாரணமாய் ஒரு ஜாதிச் செடிகளை அழிக்கும் பூச்சிகள் அந்தஜாதி செடிகளையே நஷ்டப்படுத்தும். இந்தக்குணம் முக்கியமானது. ஒரு விதச்செடியில் வளரும் பூச்சிகள் தாம் வளரும் அச்செடி யில்லாமற் போனல் தாமுமில்லாமல் நசித்துபோம். ஒரு பயிர் அதிகமாயிருந்து அதில் பூச்சிகள் கொஞ்சமாக நஷ்டம் செய்தால் நாம் கவனிப்பதில்லை. பூச்சிகள் அதிகப்பட்டுப் பலன் குறைவாகக் கிடைக்கும் பக்ஷத்தில் பூச்சிகள் தான் சத்துருவென்று நினைக்கிறோம். இப்படி அதிகப்படும் பூச்சியை தக்கபடி கண்டிக்க வேண்டும்.

பூச்சிகளைக் கண்டிக்க அவைகளின் உயிர் வாழ்க்கை இன்னதென்று தெரிவது அவசியம். ஒரு பூச்சி எப்போது முட்டையிடுமென்பதையும், எங்கே இடுமென்பதையும் எப்போது குஞ்சு பொரிக்குமென்பதையும், எப்போது முழுப்பூச்சி இறகுகளுடன் வெளிப்படுமென்பதையும் அறிவதுடன் பூச்சிகள் இன்ன இடத்தில் இன்னகாலத்தில் இன்னதைச் செய்கின்றன வென்பதையும் தெரிந்தால் அப்போது அந்த ஸமயத்தில் அதைச்சுலபமாய் அழிக்கக் கூடுமென்பது தெரியும். இதுதான் பூச்சி சாஸ்திரியின் தொழில்.

### NEEM SEEDS.

**வேப்பங்கொட்டைப் பரிசோதனை.**—லங்கைக் கிருஷிச்சங்கத் தலைவர் லண்டன் சாஸ்திர சங்கத்தவர்க்கு 3 அந்தர் வேப்பங்கொட்டைகள் அனுப்பியிருக்கிறார்கள். சாஸ்திரசங்கத்தார் வேப்பெண்ணெய் எதற்காவது விசேஷப்பொருளாய் உபயோகப்படுமோவென்று பரீட்சிப்பதற்கே வரவழைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தைச் சேர்ந்த டன்ஸ்டன் பண்டிதர் வேப்பெண்ணெயிலுள்ள கெட்ட மணத்தை நீக்கி அதைக்கொண்டு சவர்க்காரஞ்செய்யலாமென எண்ணுகிறார். விரைவில் அதைப் பரீட்சிப்பர். அது மாத்திரமன்றி வேறென்னென்ன வகையாய்ப் பயன்படுமெனவுஞ் சங்கத்தார் அந்த எண்ணெயைப் பரீட்சிப்பர்.

### SOUTH INDIAN RIVERS.

**தென் இந்தியாவில் ஆறுகள்.**—தென்னிந்தியாவில் மேற்கிலும், கிழக்கிலும் மலைகள் இருக்கின்றன. மேற்கேயுள்ள மலைக்கு மேற்குத் தொடர்ச்சி மலை என்று பெயர். இந்தமலை மிகவும் உயரமானது, சங்கிலி கோத்தாற்போல் ஒரே தொடர்ச்சியாகவுமிருக்கிறது. கிழக்கேயுள்ள மலை கிழக்குத்தொடர்ச்சி மலை. இது மேற்குத் தொடர்ச்சி மலையைப்போல் உயரமாகவாவது அல்லது தொடர்ச்சியாகவாவது இல்லை. ஆகையால் தான் தென்னிந்தியாவின் மேல் பக்கம் மேடு, கீழ்ப் பக்கம் பள்ளம், ஆறுகள் மேற்கேயிருந்து கிழக்கே ஓடுகின்றன. அவைகளில் முக்கியமானவை கோதாவரி, கிருஷ்ணா, காவிரி முதலியவைகள்.

### ORIGIN OF KEROSINE OIL

**மண்ணெண்ணெயின் உற்பத்தி.**—மண்ணெண்ணெயை இதுவரையில் பஞ்சலோகங்கள், நிலக்கரி, உப்பு முதலான தாதுவர்க்கங்களுடன் சேர்த்து வருகிறார்கள். ஆனல் ஸமீபத்தில் தென் ரூஷ்யாவில் மய்க்கோப் மாகாணத்தில் கருங்கடற்கரையில் டுவாப்ஸே என்ற துறைமுகத்திற்கு 50 மைல் தூரத்தில் காக்கசன் மலையின் வடசார்பில் கண்டுபிடிக்கப்பட்டு இப்போது வேலைசெய்யப் பட்டுவரும் மண்ணெண்ணெய் நிலத்தில் ஏராளமான மச்சங்களினுடையவும் தாதுவர்க்கங்களினுடையவும் அடையாளங்கள் அகப்படுகின்றனவாம். வேறொரு பாறையில் மச்சங்களின் அடையாளங்களிருக்கும் இடங்கள் தவிர மற்ற இடங்களில் எண்ணெய் அகப்படவில்லையாம். ஆகையால் மண்ணெண்ணெய் தாதுவர்க்கங்களுடன் சேர்க்கப்படுவது ஸரியன்றென்றும், ஸ்தாவரவர்க்கங்கள் அல்லது காலஞ்சென்று மாறுரூபமடைந்த கடற் ஜெந்துகளுடைய இனத்தில் சேர்க்கப்படவேண்டுமென்றும் சில சாஸ்திரிகள் அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள்.

## MEDICAL NOTES.

## வைத்தியக் குறிப்புகள்.

ENGLAND AND ARTIFICIAL TEETH.

**இங்கிலாந்தும் பொய்ப்பல்லும்.**—ப்ரதி வருஷமும் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு 2 கோடி பொய்ப் பற்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் இங்கிலாந்தில் சுயபற்களையுடையோர் ஒருவராவதிருக்கமாட்டார்களென்றும் க்ரேட் ப்ரிட்டனில் அரைவாசிப்பேர் பொய்ப்பல்லுடையவர்களென்றும் காணப்படுகிறது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் ஸ்திதி இதற்குக் குறைந்ததல்லவாம்.

REMEDY FOR SCORPION STING.

**தேள் கொட்டுக்கு மருந்து.**—தேள் கொட்டினால் படிகாரத்தை எலுமிச்சம்பழரஸத்தைவிட்டு அரைத்துக்கொட்டின இடத்தில் பற்றுப்போட்டு அதற்கருகில் ஒரு கரித்தணலைப் பிடித்துக்கொண்டிருந்தால் அந்தத் தணலினால்பற்று உலர உலர வலி நீங்கிப்போமென்று ஒருவர் 'மெயில்' பத்திரிகைக்கு எழுதுகிறார். தமக்குக் கால் விரலில் கொட்டினதாகவும் எலுமிச்சம்பழரஸமில்லாமல் தண்ணீரை விட்டு அரைத்துப் பற்றுப்போட்டதாகவும், வலி நின்று விட்டதாகவும் எழுதுகிறார். தேள் கொட்டுக்கு எவ்வளவோ மருந்துகள் சொல்லப்படுகின்றன. இதையும் உபயோகித்துப் பார்க்கலாம்.

BALD HEAD.

**வழுக்கைத் தலை.**—அநேகமாய்த் தலைக்குத் தொப்பியை உபயோகப்படுத்துகிறவர்களுக்கு வழுக்கை விழுந்திருப்பதைக் காணலாம். தொப்பி போட்டுக்கொள்வதனால் நல்ல காற்று தலையிற்பட வொட்டாமல் ஒரு வகையான உஷ்ணமுள்ள காற்றே அவ்விடத்தில் நிரம்பி விடுகிறது. அதில் தலைவியர்வையும் ஒரே விதமான காற்றும் சேரும்போது சிறு சிறு புழுக்கள் உண்டாகின்றன. இவைகள் மயிர் முளைப்பதற்குள்ள நுண்ணிய துவாரங்களை யடைத்து மயிர் முளையாமற் செய்துவிடுகின்றன. எப்போது மயிர் முளைப்பதற்கு மார்க்கமில்லையோ அப்போது அந்த விடத்தில் வழுக்கை விழுந்துவிடுகிறது. ஆதலால் தொப்பி யணிந்து கொள்வோர் இவ்விஷயத்தில் சிறிது கவனமாயிருப்பது நலம்.

COFFEE DRINKING.

**காப்பி குடித்தல்.**—காப்பி குடிவழக்கத்தை அனுசரித்த பெரியோர்கள் தங்கள் மக்களுக்கும் சிறு குழந்தைப் பருவத்திலேயே பழக்கிவைக்கிறார்கள். இதனால் குழந்தைகள் படுக்கையைவிட்டெழுந்திருக்கும்போதே காப்பி என்று சொல்லிக்கொண்டெழுந்திருக்கின்றன. காப்பி மாத்திரம் குடிப்பது உடம்பிற்குக்கெடுதல் என்பது பொதுவான அபிப்பிராயம்; காப்பியுடன் உப்புமாவோ அல்லது இட்டிலியோ ஏதோ ஒன்று வேண்டியிருக்கிறது. இவ்விதம் காப்பி உப்புமாவுடன் தின்று பழக்கப்பட்ட சிறுவர்கள் பெரியவர்களானால் இவ்வழக்கத்தை விட முடிகிறதில்லை. விடவேண்டுமென்றால் விட்டு விடலாம்; ஆனால் விட்டுவிட மனம் நாடுகிறதில்லை. காப்பி குடிக்கிற ஒருவனுக்குக் காலையில் காப்பி இல்லாமற்போனால் அன்று வீடு ரணகளமாகிறது. தலை வலிக்கிறதென்றும், கிறுகிறுப்பா யிருக்கிறதென்றும், அன்று முழுதும் மறுபடி காப்பி குடிக்கிறவரையில் பித்துப் பிடித்தவன்மாதிரி யவனிருக்கிறான். ஒருவேலையும் செய்யத்தோன்றுகிறதில்லை. இவை குடியால்தான் தீரவேண்டும். காப்பி சாப்பிடுவதினால் சாதம் தள்ளுபடியாகிறது; அதாவது சாதம் கொஞ்சமாகத்தான் செல்லுகிறது. நாளடைவில் இவ்விதம் சாப்பாடு குறைந்து வரவரத் தேகத்தில் வலிவுகுறைந்துகொண்டே வந்து சீக்கிரம் இறக்க நேருகிறது. இதல்லாது பழயசாதம் (நீரில்போட்டு ஊறிய அன்னம்) சாப்பிடுகிறவர்களோ குன்றாத வலியையடைந்து தங்கள் கிழவயதில் கூட எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் நடக்கிறார்கள். இவ்வித மனிதர்களை 70 அல்லது 80 வயதில் கூட இப்பொழுது நாட்டுப்புறங்களில் காணலாம். காப்பி மேலே குறித்தமட்டில் நில்லாமல் நாளடைவில் அநேகருக்கு நீரிழிவு என்னும் மகாக் கொடிய வியாதியை விளைவிக்கின்றது என்பது வைத்திய சாஸ்திரிகளின் கொள்கை. திருஷ்டாந்தமாகத் தற்காலத்தில் நீரிழிவினால் அவஸ்தைப் படுபவர்களின் தொகை அதிகரித்துக்கொண்டே வருகின்ற தென்த்தெரிகிறது. இவ்வியாதி வந்தவனுக்குக் காப்பி சத்துரு—லோகோபகாரி.

## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

CIVIL SUITS.

ஸிவில் வியாஜ்யங்கள்.—1909-10 வருஷத்தில் இந்தியா மொத்தத்துக்கு 2,001,008 ஸிவில் வியாஜ்யங்கள் செய்யப்பட்டன. அவைகளின் பெறுமானம் ரூ 43,43,70,836.

DECREE.

டிக்ரீ.—ராமன் என்பவனும் லட்சுமணன் என்பவனும் கூட்டு வியாபாரம் செய்தார்கள். ராமன் என்பவன் கூட்டு வியாபாரத்திற்காக கிருஷ்ணன் என்பவனுக்கு ப்ராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்து கடன் வாங்கினன். கிருஷ்ணன் என்பவன் ராமன் என்பவன் பேரிலும் லட்சுமணன் என்பவன் பேரிலும் வியாஜ்யம் கொண்டுவந்தான். எவன் நோட்டு எழுதிக் கொடுத்தானே அவன்பேரில் மட்டிலும் டிக்ரி கொடுக்கப்படவேண்டும்.

PARTNERSHIP.

கூட்டு வியாபாரம்.—கூட்டு வியாபாரக் கம்பெனிக்குச் சேரவேண்டிய ஒரு கடனை ஷை கம்பெனியின் ஒரு பாகஸ்தனிடம் செலுத்தினல், மற்ற பாகஸ்தர்களையும் அது கட்டுப்படுத்துமென்றும், கடனாளி தன்னுடைய கடன் தீர்ந்ததாக எண்ணலாமென்றும் இருந்தபோதிலும், கூட்டு வியாபார பாகஸ்தர் தன்னிடம் கடனாளிவாங்கியிருந்த ஸொந்தக்கடனுக்காக அந்தப்பணத்தை வரவழைத்துக்கொண்டு அதைக் கூட்டு வியாபாரக் கணக்கில் கொண்டுவாராமலிருந்தால், அப்போது கடன் செலுத்தின கடனாளி கம்பெனிக்குச் சேரவேண்டிய கடனைச் செலுத்தினவனாகமாட்டான்.

A NICE DECISION.

ஒரு நேர்த்தியான தீர்ப்பு.—"அண்ணனும் தம்பியும் ஜென்மப்பகை" என்ற பழமொழி அநேக ஸந்தர்ப்பங்களில் வாஸ்தவமாகவே முடிந்து விடுகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு கிராமத்தில் ஒரு தமயன் தன்னுடைய தம்பியை அவனுக்கும் அவனுடைய மனைவிக்கும் ஆகாதபடி செய்து, அவள் மருந்து வைத்துவிட்டாள் என்று அவள் சிற்றப்பன் எழுதியதுபோல் ஒருகடிதத்தை எழுதிப் போஸ்ட் செய்து அதைத் தபால் வழியில் பெற்று தனது தம்பிக்குக் காட்டி புருஷனுக்கு மனைவிமேல் தீராதபகை யுண்டாகும்படி செய்துவிட்டான். பிறகு அந்த மருந்தை எடுத்து விடுவதாகச் சொல்லி வைத்தியத்துக்காக தூரமான இடங்களுக்கெல்லாம் அழைத்துப்போய் கண்டபடி வைத்தியம் செய்து அதனல் அவனுடைய சுகத்தைக்கெடுத்து அதிக நாள் இருக்கமாட்டோமென்று அவனை நினைத்துக் கொள்ளப் பண்ணி, இந்த ஸமயத்தில் அவன் ஸொத்துகள் ஸகலத்தையும் தன் பேருக்கு உயில் எழுதச்சொல்லிப் பெற்றுக் கொண்டான். சில நாளுக்குப் பிறகு தம்பியும் இறந்துபோக சாவுக்கு அவனுடைய மனைவி வந்தாள். உயில் ஸமாசாரம் கேட்டுத் திகைத்தாள். அவளுக்கு ஒரு 300-ரூபாய் போலக் கொடுத்துப் புருஷன் ஸொத்தில் தனக்கு யாதொரு பாத்தியதை யில்லையென்று ஒரு ராஜி நாமா எழுதி வாங்கிக் கொண்டான்.

"தர்மம் தலைகாக்கும்" என்பதாக எண்ணி மனைவி கோர்ட்டில் வியாஜ்யம் செய்தாள். அவள் சிற்றப்பன் தான் மருந்து வைத்ததாக கடிதம் எழுதவில்லையென்றான். கோர்ட்டார் மனைவி மருந்து வைத்து வசப்படுத்தப் பார்த்தாள் என்பதை நம்பாமல் தமயன்தான் தம்பியின் புத்தியைக் கலக்கினன் என்று தீர்மானித்து, சித்தம் குழம்பிய நிலைமையில் அவன் எழுதிய உயில் சாஸனம் செல்லாதென்றும் அவனுடைய ஸகல ஸொத்துக்களும் கைம்பெண்ணான அவனுடைய மனைவிக்குச் சேரவேண்டுமென்றும், தீர்ப்பு செய்துவிட்டு பிரதிவாதியின் கோர்ட்டுச் செலவில் சிறிது அந்தக் கைம்பெண் கொடுக்கிறதென்று முடிவாயிற்று. இதன்மேல் தமயன் அப்பீல் செய்ய அங்கு கீழ் கோர்ட்டுத் தீர்ப்பை உறுதிபடுத்திவிட்டு பிரதிவாதியின் கோர்ட் செலவை கைம்பெண் தரவேண்டியதில்லையென்றும் அவளுடைய ஸகல கோர்ட்டுச் செலவும் பிரதிவாதியே கொடுக்கிறதென்றும் தீர்ப்பாக தமயன் ஹைகோர்ட்டிலே அப்பீல்செய்ய ஹைகோர்ட்டார் இரண்டாவது கோர்ட்டுத் தீர்ப்பையே உறுதிசெய்துவிட்டார்கள். மோசம் நாசம் என்பது கடைசில் உண்மையாக முடிந்தது.—திராவிடாபிமானி,

## PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

THE KING OF SIAM.

**சீய அரசன்.**—சீயதேசத் தரசன் பூராவாய்த் தன் ராஜ உடையைத் தரித்துக்கொள்ளும்போது அதன் மதிப்பு 2,00,000 பவுனும்.

INDIAN SANDOW.

**இந்தியன் ஸாண்டோ.**—ப்ரொபெஸர் ராமமூர்த்தி நாயடு மார்ஸெயிலிலிருந்து கொழும்பிற்குவந்திருக்கிறார். அவருடன் 13-பலவான்களிருக்கிறார்கள். இவர்கள் இங்கிலாண்டிலும் ஐரோப்பாக் கண்டத்திலும் தமது வித்தையைக் காட்டி 110-மெடல் பெற்றிருக்கிறார்கள். அவற்றுள், ஒன்று நமது சக்ரவர்த்தியா ரவர்களாற் கொடுக்கப்பட்டது.

ROCKFELLER' INCOME.

**ராக்பெல்லர் என்பவர் வருமானம்.**—அமெரிக்க கோடீசுவரனாகிய ராக்பெல்லருக்கு வருகிற வருமானம் உலகிலுள்ள எல்லா சக்ரவர்த்திகளுக்கு மிருக்கிற வருமானத்துக்கு ஸமமாம். அது வருஷ மொன்றுக்கு 87 பவுன் வீதம் 32 ஆயிரத்து 268 வேலையாட்கள் செய்கிற ஸம்பாத்தியத்துக்கு ஸமம். இவ்வளவு தனிகனாயிருந்தும், சமைத்த உணவு அவருக்கு ஒத்துக் கொள்ளுகிறதில்லையாம். பச்சை முட்டையும், பச்சை காய்கறியும் அவருக்கு ஆகாரமாம்.

SALEM GODAVARI.

**சேலம் கோதாவரி.**—சேலம் கோதாவரி தாஸி வகுப்பைச்சேர்ந்தவள். புதிதாய் ஏற்பட்டிருக்கும் கிராமபோன் யந்திரத்தில் இம்மாதின் பாட்டுக்களை யாரும் கேட்டு ஆனந்த மடைந்ததுண்டு இம்மாதராள் ஜாதியில் தாஸியாயிருந்தாலும் குணத்தில் பொருந்தன்மையும் தர்ம சிந்தையுங் கொண்டவள். இதற்கறியாக அம்மாதராள் செய்த தருமத்தை மட்டும் இதனடியிற் குறிக்கின்றோம். சென்ற அக்டோபர்மீ 20உ இம்மாதராள் சென்னை தம்புசெட்டித் தெருவிலுள்ள தனது கிருகத்தில் மாண்டு போனாள். ஆயினும் அவளதுபெயர் வெகுகாலம் சிறப்புற்று விளங்கும்படி அவள் தன்னுடைய உயில் பத்திரத்தில் என்ன எழுதி வைத்திருக்கிறாளென்றால் தன்னுடைய ஆஸ்தியில் சென்னை சிசுரக்ஷண சங்கத்தார்க்காக ரூ5000. பச்சையப்பன் கலாசாலைக்காக ரூ4000 சென்னை அன்னதான சமாஜத்துக்கு ரூ1000. சேலம் கலாசாலைக்கு ரூ1000. சேலம் பிரமஞான சங்கத்தை யொட்டியிருக்கும் வேதபாட சாலைக்கு ரூ 1000. சேலம் சிவன்கோவில் தேருக்காக ரூ 4000. சேலத்திலுள்ள சிவன் கோவிலில் தரிசனார்த்தம் வருவோர் தங்குவதற்காக ஒரு பெரும் விடுதியும் ரொக்கமாக 600 ரூபாயும் எழுதிவைத்திருப்பதாகத் தெரிகிறது. தாஸியாயிருந்தாலும் தர்ம சிந்தையைப் பாருங்கள்.

SIR S. SUBRAMANIA AIYER.

**ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யர்.**—சென்னை ஹைகோர்ட் ஜட்ஜியா யிருந்த ஸர் S. சுப்பிரமணிய அய்யர் "இந்தியன் ரெவியூ"வுக்கு எழுதியிருக்கும் வியாசத்தில் ஜகத்குரு ஸ்ரீ சங்கரா சாரியரைப் பற்றி நம்மவர்களுக் குள்ளிராத நூதனமான அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவித்திருக்கிறார். கௌதமபுத்தர், ஸ்ரீசங்கராச்சாரியர், ஸ்ரீகிருஷ்ண பகவான், யேசுகிறிஸ்து, இவர்கள் முக்கியமான அவதாரங்களென்றும், முதலிற் குறித்த இரண்டு அவதாரங்களும் கர்மமார்க்கத்தைப் போதிக்க உண்டாயினவென்றும், பின் சொன்ன இரண்டும் பக்தி மார்க்கத்தைக் கற்பிக்கத் தோன்றினவென்றும், ஸ்ரீ சங்கராச்சாரி கௌதமபுத்தருக்கு நூறு வருஷத்துக்குப் பின்னால் அவதாரமானவரென்றும், சொல்லுகிறார். ஜனங்கள் நம்பும் ஆதி சங்கராச்சாரியார், சுமார் 1,200 வருஷத்துக்கு முன்னால் மலையாளத்தில் பிறந்து ஷண்மத ஸ்தாபனம் செய்து உபநிஷத்துக்கள் முதலான கிரந்தங்களுக்குப் பாஷியங்கள் எழுதினவர் வேறு சங்கராச்சாரியான உண்மையான ஆதிசங்கராச்சாரி தமது சிஷ்யர்ளுக்கு வாய்மொழியாய் உபதேசம் செய்தாரேயன்றி பாஷியங்கள் எழுதவில்லை யென்றும், அபிப்பிராயப்படுகிறார். இரண்டாவது சங்கராச்சாரியாருக்குக்குரு கோவிந்தர். அவருக்குக் குருவான கௌடபாதாச்சாரியர் எழுதின காரிகையில் பௌத்த ஞானியாகிய நாகார்ஜுனன் எழுதினதில் "ஆதிபௌபுத்த பிரகிருத்யைவ சர்வே தர்ம சுநிஸ்ச்சித:," என்ற சுலோகத்தைத் தமது வேதாந்த புஸ்தகத்தில் தம்மதுபோல் பெயர்த்து எழுதிக் கொண்டாரென்றும் சொல்லுகிறார்.—சுதேசமித்திரன்.

## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

---

### KINGS ARE SCARCE.

**ராஜஸேனவ கிடைப்பது அபூர்வம்.**—ஒரு தேசத்து ராஜா எங்கேயோ ஒரு தேசத்துக்குப் போய் சண்டைசெய்து ஜெயித்துவிட்டு தனது ஊரை நோக்குங்கால் ஒரு கிராமத்தில் தங்கினன். தங்கின வீட்டுக்காரனைப்பார்த்து ராஜா:—"2, 3 முட்டைகள் கிடைத்தால் நலமாயிருக்கும், எனக்கு முட்டையின்பேரில் பிரியம் ஜாஸ்தி" என்றான்.

வீட்டுக்காரன்:—உடனேபோய் 3 முட்டைகளை வாங்கிக்கொண்டு வந்தான்.

ராஜா:—"முட்டைகளின் விலை என்ன."

வீட்டுக்காரன்:—"ஒரு முட்டையொன்று 100 பவுன்."

ராஜா:—"ஒஹோ, இந்த ஊரில் முட்டை ரொம்ப கிராக்கிபோலிருக்கிறதே"

வீட்டுக்காரன்:—"மஹாராஜா, முட்டைகள் கிராக்கியில்லே, ஏதேஷ்டமாய் அகப்படும். ஆனல் ராஜாக்கள் எளிதில் அகப்படமாட்டார்கள். ஆகவே முட்டைவிலை இப்படி" என்றான்.

### THE DUMB SPEAKING.

**ஊமை பேசினது.**—ஒரு யோக்யதை கெட்ட பிச்சைக்காரன் பிழைக்க வழியொன்றும் தெரியாமல் கடைசியாக தான் ஊமைபோல் பாவித்தால் பிழைக்கலாம் என்று கருதி அநேக ஊர்களில் பிச்சையெடுத்துவிட்டு, கடைசியாக, இவன் இதற்கு முந்தி ஊமையாயில்லாமலிருந்தபொழுது போய் பிச்சையெடுத்த ஒரு ஊர் போய்ச்சேர்ந்து பிச்சையெடுத்து வந்தான். ஒரு பெரிய மனுஷனிடம் போய் பிச்சைக்கு செய்கையெல்லாம் காட்டினன். பெரிய மனுஷனுக்கு இவன் ஊமையாயில்லாமலிருந்து இப்பொழுது பாசாங்கு பண்ணுகிறது தெரிந்து, அவன்பேரில் இரக்கப்படுவது போல் "அடடா, பாவம். எத்தனை நாளாடப்பா இப்படி ஊமையாயிருக்கிறாய்" என்றார். ஊமை: "அந்தக்கஷ்டத்தை ஏன் கேட்கிறீர்கள். ஐயா, பிறந்தது முதல் ஊமை" என்று தன்னையறியாமல் பதில் பேசிவிட்டான். உதையும் சவுக்கடியும் பட்டுக்கொண்டு போய்ச்சேர்ந்தான்.



### OUTWITTING A HIGHWAYMAN.

**ஒரு வழிப்பறிக்காரனை ஏமாற்றினது.**—முன் காலங்களில் ரெயில் மார்க்கம் கிடையாது. எல்லாரும் பிரயாணத்துக்கு கட்டை வண்டிகளில் போகிறது வழக்கம். ஒரு தடவை 8 பேர் ஒரு வண்டியில் காசிக்குப் போனர்கள். ஒரு நாள் ராத்திரி எல்லாருமாய்ச் சேர்ந்து வழியில் யாரேனும் வந்து கொள்ளையடித்து விடுவார்களோ என்று பேச ஆரம்பித்தார்கள். ஒவ்வொருவனும் பயந்தான். அவர்களில் ஒருவர் தன்னிடம் 10 ரூபாய் இருப்பதாகத் தெரிவித்தார். உடனே அருகில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு ஸ்திரீ அவரைப் பார்த்து "இடுப்பில் இருக்கிற பையில் பத்திரமாய் வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னள். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் 2 திருடர்கள் வந்து வழிமறித்து இவர்களை அடிக்க ஆரம்பித்தார்கள். மேல் சொல்லிய ஸ்திரீ திருடர்களைப்பார்த்து "ஏன் அடிக்கிறீ[rkள்]. அவர் இடுப்பில் 10 ரூபய் இருக்கிற[து] எடுத்துககொண்டுபோ" என்று காட்டிக்கொடு[க்]கவே திருடர்களும் அப்படியே 10 ரூபாயையு[ம்] எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். பிற்பா[டு] எல்லாரும் அந்த ஸ்திரீ காட்டிக்கொடுத்ததற்கா[க] அவளைக்கடிந்துபேச ஆரம்பித்தார்கள். அவள் அ[தை] லக்ஷியம் செய்யாமல் நான் அப்படிச்செய்ததற்கு காரணம் உண்டு. ஒரு பயமில்லாமல் ஊர்போய்ச் சேருவோம், அப்பொழுது சொல்லுகிறேன் என்றாள். கடைசியாக ஒரு பட்டணம் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது அந்த ஸ்திரீ எல்லாரையும் பார்த்து "நான் ஏதோ உங்களைக்காட்டிக் கொடுத்ததாக எண்ணினீர்களே. நான் அப்படிக் கொடுக்காவிடில் என்னிடம் 500 பவுன் இருந்தது. அந்த 500 பவுனும் போயிருக்கும். அவர் பத்து ரூபாய் இழந்து என்னைக் காப்பாற்றினதற்கு இந்த 100 பவுன் அவருக்குக் கொடுக்கிறேன்," என்று 100 பவுனை எடுத்து 10ரூபாய் இழந்தவர்க்குக் கொடுக்கவே, எல்லாரும் ஆச்சர்யப்பட்டு அவள் புத்திசாலித் தனத்தை மெச்சலானார்கள்.

# CURIOSITIES.

## விநோதங்கள்.

---

A MONSTROUS CHILD.

**ஒரு கோரமான குழந்தை.**—மலையாளத்தில் ஒரு ஸ்திரீ வாய்முழுதும் பற்களுடன் ஒரு சிசுவை யீன்றனள். அது நான்கு வயதானவுடன் அதன் முகம் 20 அல்லது 30 வயதுடைய வாலிபனைப்போல் தோற்றுகிறதாம். அதற்கு பசியெடுக்கும்போது மனிதர்களைப் பார்த்து சீறுகிறதாம். மிருகத்தைப் போல் உருமுகிறதாம். உணவும் அபரிமிதமாய் உட்கொள்ளுகிறதாம்.

GOOD SPRING WATER IN THE SEA.

**நல்ல தண்ணீர் ஊற்றுகள்.**—பெர்ஷியா தேசத்திலே கடலோரத்திலிருக்கும் பேரைன் என்னுமூர் அதிக உஷ்ணமுள்ளது. அதன் உஷ்ணம் 130 டிக்ரியாம். அங்கே தாகத்துக்கு நல்ல ஜலம் கிடைக்காது. னல் சமுத்திரத்தில் 1-மைல் தூரம்போய் அடியி றங்கி அங்கே யிருக்கிற அற்புதமான ஊற்றுகளிலி ந்து நல்ல தண்ணீர் கொண்டுவருகிறார்கள். சமுத் ரத்தின் அடியிலே இந்த நல்ல ஜலம் உண்டாகி து மெத்த அதிசயமானது.

CURIOUS BIRTH.

**அதிசயப் பிறவி.**—நகரியிலிருக்கும் வெஸ்லியன் ஷன் தர்ம வைத்ய சாலைக்கு பிரசவவேதனைப்பட் க்கொண்டிருந்த ஒரு குறத்தி கொண்டுவரப்பட் ாள். இரண்டு தலைகளும், நான்கு கைகளும், இரண்டு கால்களுமுள்ள ஒரு பெண் சிசு அவளுக்குப் பிறந்தது. சில மணி நேரம் வரையில் அப்பிறவி ஜீவித்திருந்து அதற்குப் பின் இறந்து போய் விட்டது. ஆச்சர்யமான இச்சம்பவத்தை ஊர் ஜனங்களில் அநேகர் போய்ப்பார்த்து வந்தார்கள்.

WONDERFUL NEWS.

**அதிசயமான ஸங்கதி.**—ஆஸ்டிரேலியா தேசத்து மேற்புறத்தில் 'மண்டபுல்லாகனு' என்னும் ஊரில் ஒரு நல்ல ஜாதி குதிரை குட்டியொன்று போட்டதாம். அதற்கு நாலு மாதமான பிறகு அதே குதிரை ஒரு கோவேறுகழுதைக் குட்டியை ஈன்றதாம். முதலாவது நல்ல ஆண் குதிரையோடு கலக்கச்செய்தார்களாம். நாலு மாதம் வரை பார்த்ததில் பலன் படவில்லை என்று எண்ணி கோவேறு கழுதையொன்றை கலக்கும்படி விட்டார்களாம். முதலாவது குதிரைக் குட்டியை ஈன்றது. அதன் பிறகு 4 மாதங் கழித்து கோவேறு கழுதைக் குட்டியை ஈன்றது. இரண்டும் பிழைத்திருக்கின்றனவாம்.

A CHILD FIVE INCHES HIGH.

**5 அங்குல உயரக் குழந்தை.**—பர்மாவைச் சேர்ந்த மாபின் ஜில்லாவிலுள்ள எலக்சலையில் ஒரு பர்மியப் பெண் 6 மாதங்களுக்கு முன் 5 அங்குல நீளமும் ஒன்றே கால் அங்குல அகலமுமுள்ள ஓர் குழந்தையைப் பெற்றாள். அதற்கு இரண்டு கோப்பை நிரம்பப் பாலைக்கறந்து அருகில் வைத்துவிடுவதுண்டாம். ஒரு நாள் அப்பிள்ளை தாய் தகப்பன் கனவில் "நீங்கள் என்னைப் பால் கோப்பையோடு பெட்டியில் வைத்துப் பூட்டும் வழக்கத்தை விட்டு விடுங்கள்" என்று சொன்னதாம். அப்படியே வெளியே வைத்து வருகின்றனர். அக்குழந்தை காய்ந்த கருவாடு போலிருக்கிறதென்று அதை நேரில் போய்ப் பார்த்த ஒருவர் நமக்குத் தெரிவிக்கிறார். கலியின் வலி, அம்மம்ம! கொஞ்சமன்று.—வைசிய மித்திரன்.

DOING BUSINESS WHILE ON THE MOVE.

**ஓடும்பொழுதே, வேலை நடத்தல்.**—தென்டகோடா மாஹாணத்தில், லாம்ரோ, வின்னர் என்று இரண்டு பட்டணங்களுண்டு. இவை இரண்டுக்குள், எதில் ஆபீஸ் வைக்கிறதென்று கக்ஷி உண்டாயிற்று. லாம் ரோ பெரியபட்டணமாகையால், ஆபீஸுகள் அதிலே இருந்து வந்தன. ஷை கக்ஷியில், வின்னர் பட்டணத்தில் தான் ஆபீஸுகள் இருக்க வேண்டுமென்று தீர்மானமாயிற்று. இப்பொழுது லாம் ரோ ஆபீஸ் கட்டிடங்களை வின்னருக்கு மாற்றவேண்டியதா யிருந்தது! இரண்டு பட்டணங்களுக்கு ரெயில் மார்க்கமோ கிடையாது. பூமிமேடு பள்ளமில்லாமல் ஸம வெளியாய் யிருந்ததினால் மஹாபிரம்மாண்டமான இரண்டு இன்ஜின்கள் ஆபீஸுகளை அடியோடு பேர்த்து இழுத்துக் கொண்டுபோய் வின்னரில் சேர்த்தன. இதேமாதிரியாக லாம் ரோ ஹோட்டலும் 72 ஜோடித்திரைகளால் இழுத்துக்கொண்டு சேர்க்கப்பட்டன. ஆபீஸுகள் இப்படி ஓடும்பொழுதே ஆபீஸ் வேலைகள் தவக்க மன்னியிலும் பாங்கிகள், வழக்கம்போல் ரொக்கம் கொடுக்கல் வாங்கல் இவைகளும் நடந்தன.

## NEWS OF THE MONTH.

## மாஸ வர்த்தமானங்கள்.

### INDIAN NEWS.

### இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

OUR NEW GOVERNOR.

**புதிய கவர்னர்.**—நமது புதிய கவர்னரான ஸர் தாமஸ் கிப்ஸன் கார்மிகேல் அவர்கள் நவம்பர் மாதம் 3-ந்தேதி தமது கவர்னர் ஸ்தானத்தை வகிப்பார்.

MARRIAGE OF THE BARODA PRINCESS.

**பரோடா ராஜகுமாரியின் விவாகம்.**—பரோடா மாகாராஜாவின் ஏக புத்திரி குவாலியர் ஸமஸ்தானத்து விந்தியா மகாராஜாவுக்குக் கலியாணஞ்செய்து கொடுக்கப்படப் போகிருளென்று உத்யோக முறையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த கலியாணம் பரோடாவில் வருகிற டிசம்பர் மாதம் 5-ந்தேதி நடைபெறும்.

THE TANJORE DISTRICT CONFERENCE.

**தஞ்சாவூர் ஜில்லாக் கான்பரேன்ஸ்.**—இக்கான்பரென்ஸின் 5-வதுமுறை நவம்பர்மாதம் 18, 19-ம் தேதிகளில் மன்னூர்குடித் தாலுக்காவில் ஏற்கனவே தீர்மானமாயிருக்கிறபடி நடைபெறும், எவ்வூரில் நடைபெறுமென்பது மட்டும் பிறகு தெரிவிக்கப்படும். ஆனரபில் மிஸ்டர் திவான்பகதூர் எல். ஏ. கோவிந்தராகவ ஐயர் அக்ராஸனம் வகிப்பார்.

THE DELHI DURBAR.

**டில்லி தர்பார்.**—1903-ம்ஹு எட்வார்ட் அரசரின் முடிசூட்டு மகோத்ஸவத்தைக் கருதி டில்லியில் தர்பார் நடத்தப்பட்டபோது **லார்ட் கர்ஸன்** யானைமேலேறி பவனிசென்று ராஜடாம்பீகத்தில் தமக்கிருந்த ஆசையைப் பூர்த்தி செய்துகொண்டார். இவ்வருஷக் கடைசியில் **ஜார்ஜ் அரசரின்** முடிசூட்டு மகோத்ஸவ ஸம்பந்தமாய் நடக்கும் டில்லி தர்பாரில் சக்ரவர்த்தியே நேரில் வந்திருப்பாராணுலும் ஸகல ராஜரீக சின்னங்களுடன் அவர் யானைமேலேரிப் பவனி வரமாட்டாராம்.

THE NEGAPATAM RAILWAY WORKSHOP.

**நாகப்பட்டணம் ரேயில்வே ஒர்க்கு ஷாப்.**—இது திருச்சிக்கு மாற்றுப்படப் போகிறதென்று நெடுநாளாய் பிரஸ்தாபம் பரவிவந்தது நமது நேயருக்குத் தெரிந்திருக்கும். அங்கேயே மாற்றப்படலாமென்று கவர்ன்மெண்டு ஸாங்ஷன் கிடைத்து விட்டதால், சீக்கிரத்தில் அது திருச்சிவந்து சேர்ந்து விடும். இதனுல் நாகப்பட்டணத்தில் அடைந்து கிடக்கும் ஜனங்களில் 100-ல் 10 பாகம் திரிச்சிக்குச் சென்று விடுவார்கள்.

FORM OF ADDRESSING HIS MAJESTY.

**சக்ரவர்த்தியை அழைக்கவேண்டிய மாதிரி.**—ஜார்ஜ அரசரையும் மேரி ராணியாரையும் பற்றி இந்நாட்டில் அவர்களிருவருக்கும் வாசித்துக் கொடுக்கப்படும் அட்ரெஸ்களில் பிரஸ்தாபிக்கும்போதும் அவர்களிருவரையும் பற்றிப் பிரகடனஞ் செய்யும்போதும் ராஜசக்ரவர்த்தியாரென்றும் ராணிசக்ரவர்த்தினியாரென்றும் விவரிக்க வேண்டுமென உத்தரவு பிறந்திருக்கிறது. அவர்களிருவருக்கும் சேர்த்துக் கொடுக்கப்படும் அட்ரெஸ்களில் மாட்சிமை பொருந்திய 5-வது ஜார்ஜ் அரசர் இந்தியச் சக்ரவர்திக்கும் மாட்சிமை பொருந்திய ராணிசக்ரவர்த்தினிக்கும் என்று விலாசங் கண்டிருக்கவேண்டுமோம்.

OUR EMPEROR'S CROWN.

**சக்ரவர்த்தியின் கிரீடம்.**—நமது மகா ராஜா சக்ரவர்த்தியவர்கள் டெல்லி தர்பாரின்போது இதற்கா[ன]வென்றே பிரத்தியேகமாகச் செய்யப்பட்ட ஒரு புது கிரீடத்தை அணிவார், சக்ரவர்த்தினி அவர் லண்டன் முடிசூட்டின்போது அணிந்த கிரீடத்தை அணிவதோடு கோகினூர் என்ற நமது நாட்டில் அகப்பட்ட விலையுயர்ந்த கல்லையும் அணிவார். சக்ரவர்த்தி நமது இந்திய ப்ரஜைகளுக்கு ஒரு பிரசங்கம் செய்வார். அப்பிரசங்கம் இந்தியாவில் வழங்கும் ஸகல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு துண்டுக்கடிதங்களாக இந்தியாவில் எல்லாவிடங்களிலும் கொடுக்கப்படும்.

THE CONGRESS PRESIDENT.

**காங்கிரஸின் ப்ரஸிடேன்டு.**—வரும் காங்கிரஸுக்கு வடக்கே பாரிஸ்டர் அட்லாவான பண்டித விஷ்ணு நாராயணதாரைப் பிரஸிடெண்டாகத்

தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இவர் பெருங்கல்வி வாய்ந்த புத்திமான். சொல்வன்மை மிக்கவர். இவர் ஆதியில்காங்கிரஸில் மும்முரமாக வேலைசெய்து, ஊக்கங் காட்டிவந்தார். ஆனால் இடையேதேக அஸௌக்யம் பற்றி காங்கிரஸிற்கு வருவதில்லை. இப்பொழுது இவர் காங்கிரஸ் தலைமை வகித்துவிட்டால், முன்போல ஊக்கத்துடன் உழைப்பாரென்று நம்ப இடமுண்டு.

THE TANJORE CHATTRAM DEPARTMENT.

**தஞ்சாவூரில் சத்திரம் டிபார்ட்மேண்ட்.**—தஞ்சாவூர் ஜில்லா சத்திரங்கள் இப்போது மிஸ்டர் வி. கிருஷ்ணமாசார்லுவின் விசாரணையில் இருக்கின்றன. இவைகளுக்கு மொத்தவரும்படி 2,45 778, ரூபாய். மொத்தச் செலவு 1,38 560 ரூபாய். பாக்கித் தொகை கவர்ன்மெண்ட் பத்திரங்களில் போடப்பட்டிருக்கின்றன. சத்திரங்களில் சாப்பாடு பெற்றவர்கள் 10 லக்ஷம். இதற்குச் செலவு 73,377 ரூபாய், திருவையாற்றிலுள்ள ஸம்ஸ்க்ருத காலேஜ் எம். ஏ. பரீட்சை தேறின ஒருவரின் தலைமையின் கீழிருக்கின்றது. டிஸ்டிரிக்ட் போர்ட் பார்வையில் 19சத்திரங்கள் இருக்கின்றன. ராமேசுவரத்திலுள்ள சத்திரங்கள் மட்டும் ராமநாதபுரம் கலெக்டரின் விசாரணையில் இருக்கிறது.

[S]ANSKRIT COLLAGE KUMBHAKONAM.

**கும்பகோணத்தில் ஸம்ஸ்கிருத காலேஜ்.**—கும்பகோணத்திலுள்ள ஸம்ஸ்கிருத காலேஜ் மாணுக்கர்களுக்கு ஸமீபத்தில் திவான் பகதூர் ரகுநாதராவ் 200 ரூபாய் பெறும்படியான துணிகள் வெகுமதியாகக் கொடுத்தார். வேதங்கள் படிப்பதில் அர்த்தத்துடன் படிப்பிக்கவேண்டுமென்றும், ஹிந்து தேவாலயங்களிலுள்ள அர்ச்சகர்களைப் படிப்பதில் தேவஸ்தானக் கமிட்டிகள் அக்கரை யெடுத்துக் கொள்வதில்லை யென்றும், விசனப்பட்டார். மதப்படிப்புவிஷயத்தில் பொது ஜனங்கள் பண உதவி செய்வது கடமை. கும்பகோணம் காலேஜில் நூறுபிள்ளைகள் வாசித்து இலவசமாகச் சாப்பாடு பெறுகிறார்கள்.

TALUK BOARD MEMBERS.

**தாலூக்கா போர்ட் மெம்பர்கள்.**—தாலூகா போர்ட்களில் இப்போதுள்ள மெம்பர்களில் பாதிப் பெயரை எலெக்ஷன் செய்ய வேண்டுமென்று ஜூலைமாதம் கவர்ன்மெண்ட் பிரேரித்து தாலூக் போர்ட்ப்ரஸிடெண்ட்களை ஆலோசனைகேட்க, சிலர் ஜனங்களுக்கு சிரத்தை யில்லாமையால்இந்தப் பிரேரணை நிறைவேருதென்று சொன்னார்கள். இந்த ஆட்சேபத்துக்குச் சமாதானமாக அவசியமான வோட்டுகள் இத்தனையென்று வரை யறுக்கலாமென்றும் அப்படி வோட்டுகள் கிடைக்கா விட்டால் கவர்ன்மெண்டே நியமனம் செய்யலாமென்றும் நினைத்து இப்போது மூன்றிலொரு பாகத்து மெம்பர்கள் எலெக்ஷன்செய்யப்படும் தாலூக் போர்ட்களில் பாதி மெம்பர்களை எலெக்ஷன்செய்யும்படியாக கவர்ன்மெண்ட் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

OUR EMPEROR'S TAPPALS.

**சக்கிரவர்த்திக்கு வரும் தபால்கள்.**—ஜார்ஜ் சக்ரவர்த்தி டெல்லி தர்பாருக்கு வந்திருக்கும்போது அவருக்கு மேல் நாட்டிலிருந்து வரும் தபால்கள் பம்பாயிலிருந்து 23 மணிநேரத்தில் பம்பாய்- பரோடா மத்திய இந்தியா இருப்புப்பாதைகள் மார்க்கமாய் டெல்லி கொண்டுபோய்ச் சேர்க்கப்படும். எவ்வளவு மணிநேரத்தில் சக்ரவர்த்திக்கு வருகிற தபால்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கலாமென்று தெரிந்து கொள்ள பம்பாயிலிருந்து ஒரு எஞ்சினும் 2போகி வண்டிகளும் போட்டு, ஒரு ஸ்பெஷல் விட்டுப் பார்த்தார்களாம். அது 6 மணி நேரத்தில பரோடா போயிற்றும், 6 மணி நேரத்தில் அது பரோடா போய்ச் சேர்ந்தமட்டில், அது 23 மணி நேரத்தில் டெல்லி போய்ச் சேர்ந்துவிடுமென்று ஊகித்துக் கொள்ளப்பட்டதாம். அதற்கும் குறைந்த நேரத்தில் சக்ரவர்த்திக்கு வரும் தபால்களை டெல்லி கொண்டு போய்ச் சேர்க்க சாத்தியப்படுமானால் அவைகள் அப்படியே கொண்டுபோய்ச் சேர்க்கப்படுமாம்.

SALEM CO-OPERATIVE CONFERENCE.

**சேலம் கோவாப்பரேட்டிவ் கான்பரேன்ஸ்.**—ஸமீபத்தில் நடந்த சேலம் கோவாபரெட்டிவ் கான்பரென்ஸில் சில தீர்மானங்கள் செய்யப்பட்டன. கவர்ன்மெண்டாலும் மற்ற விவஸாய உத்தியோகஸ்தர்களாலும் பிரசுரம் செய்யப்படும் புல்லட்டின்கள் (துண்டுப் பத்திரிகைகள்) தமிழிற் பிரசுரம் செய்யப்பட்டு இந்தசங்கங்களின் மெம்பர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்க, மிஸ்டர் அட்கின்

ஸன் கவர்ன்மெண்டுக்கு இந்த விஷயமாய்ச் சொல்லுவதாக ஒப்புக்கொண்டார். 35 ரூபாய்க்கு அதிகமாய் சம்பளம் பெறும் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் ஐக்கிய நாணயச் சங்கங்களில் பணம் டிபாஸிட் செய்யலாமென்று பிரேரிக்க, அது நிறைவேறிற்று. மிஸ்டர் அட்கின்ஸன் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் சங்கங்களிற் சேர்ந்து அவைகளை நடத்துதல் ஆட்சேபத்துக்குறியதேயன்றி அவர்கள் பணத்துக்கு ஆட்சேபமில்லை என்று சொன்னார். இம்மாதிரித் தீர்மானங்கள் செய்யப்பட்டபிறகு ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாசாரியார் "ஐக்கிய நாணயச் சங்கங்கள்" வேலைசெய்யும் விதத்தைப்பற்றித் தமிழில் பிரசங்கம் செய்தார்.

ARBITRATION COURTS.

**மத்தியஸ்த பஞ்சாயத்துகள்.**—வெங்காளத்தில் சப் ஜட்ஜ் வேலை செய்து பென்ஷன் பெறும் பாபு பிரமாதநாத் சாட்டர்ஜி என்பவர் அந்த மாகாணத்தில் ஆர்பிட்ரேஷன் கோர்ட்ஸ் அல்லது மத்தியஸ்த பஞ்சாயத்துக்கள் ஸ்தாபிப்பதைப்பற்றி ஒரு ஸ்கீம் அதாவது யோசனை செய்திருக்கிறார். அதன் விபரங்கள் பின் வருமாறு:—

(1) இப்படி ஸ்தாபிக்கப்படும் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு மெம்பராவது சாத்தியமானால் பென்ஷன் பெறும் ஜுடிஷல் உத்தியோகஸ்தராயிருக்கவேண்டும்; (2) லீவில் கோர்ட் கட்டிடத்துக்கு அருகில் இந்தப் பஞ்சாயத்து ஸ்தாபிக்கவேண்டும்; (3) திறமையுள்ள யோகியர்கள் இந்தப் பஞ்சாயத்தில் சேர்ந்து சம்பளமில்லாமல் வேலை செய்யவேண்டும்; (4) லீவில் ப்ரொவிஜர் கோட் தேசத்து மற்றச் சட்டங்கள் இவைகளின்படி இந்தப் பஞ்சாயத்து நடத்தப்பட வேண்டும்; (5) வழக்கு செய்கிறவர்கள் தங்களுக்கு இஷ்டமுள்ளவர்களையாவது பஞ்சாயத்தின் மெம்பர்களையாவது வழக்குகளைத் தீர்க்கச் சொல்லலாம். மெஜாரிட்டி செய்த தீர்ப்பின் பேரில் அப்பீல் கூடாது; (6) லாயர்கள் அங்கு வந்து தாராளமாய்ப் பேச இடம் பெறவேண்டும்.

VILLAGE FORESTS.

**கிராம காடுகள்.**—கஞ்சம், கோயமுத்தூர், செங்கற்பட்டு, தென்கன்னடம், இந்த ஜில்லாக்களில் கிராமங்களை யடுத்த காடுகளைக் கிராமப் பஞ்சாயத்துகளிடத்தில் ஒப்புவித்து, அது என்னுகிறதென்று பார்க்கவேண்டுமென்று சென்னைக் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இதை யனுசரித்து செங்கற்பட்டு கலெக்டர் மிஸ்டர் எல் வைபர்ட் ஒரகடம், கரணை, குண்ணப்பட்டு, இந்தக் கிராமங்களை யடுத்தகாடுகள் இந்தக் கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தி அவர்கள் வசம் ஒப்புவிக்கலாமென்று சிபார்ஸ் செய்திருக்கிறார். ஒரகடம் கிராமத்தில் 7 பேரும் மற்ற இரண்டு கிராமங்களிலும் சேர்ந்து 10 பேரும் பஞ்சாயத்தாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பஞ்சாயத்தார்கள் மற்றக் கிராமத்தார் இந்தக் காடுகளில் பிரவேசிக்காமலிருக்கவும் தங்கள் கிராமத்தார் 140 தலைச்சுமை விறகு கொண்டுபோகவும், 700 பசு மாடுகளும் 100 எருமைகளும் 350 ஆடுகளும் மேயவும் ஒழுங்குகள் செய்திருக்கிறார். கவர்ன்மெண்ட் கலெக்டர் செய்ததை ஒப்புக்கொண்டு உத்தியோகஸ்தர்கள் கிராமத்தாருக்கு இந்த விஷயத்தில் ஸகல ஒத்தாசையும் செய்யவேண்டுமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள். ரெவினியூ போர்டார் பஞ்சாயத்தார்களுக்குக் காடுகளின் நிர்வாகத்தில் சில சுலுவான ஒழுங்குகள் செய்து கொடுக்கவேண்டுமென்றும் உத்தரவு செ[illegible] திருக்கிறார்கள். பஞ்சாயத்தார் காடுகளை வைத்து கொண்டிருக்கும் நிலைமையைப் பார்ப்பார்களே யன்றி அனுஷ்டிக்கும் வழிகளைப் பார்க்கமாட்டா[illegible]களென்று கவர்ன்மெண்ட் சொல்லி யிருக்கிறா[illegible]கள். இம்மாதிரி ஒரு வருஷம் செய்து பார்க்கப்படும்.

ELECTION TO UNION PANCHAYETS.

**யூனியன் பஞ்சாயத்துகளில் எலெக்ஷன்.**—சென்னைச் சட்டசபையில் சென்ற மே மாசம் 15-ந் தேதி ஆனரபில் மிஸ்டர் பி. கேசவபிள்ளை யூனியன் பஞ்சாயத்துகளில் சில மெம்பர்களையாவது ஜனங்கள் எலெக்ஷன் செய்ய வேண்டுமென்று கேட்க, அதற்குக் கவர்ன்மெண்ட் சில குறித்த யூனியன் பஞ்சாயத்துகளில் அம்மாதிரி செய்து பார்க்கத் தங்களுக்குச் சம்மதந்தானென்று பதில் சொன்னார்கள். இப்போது அந்த விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்து பின்வருமாறு உத்தரவு செய்திருக்கிறார்கள். ஒரு ரெவினியூ டிவிஷனது மூக்

கிய ஸ்தலத்திற்கு அருகிலுள்ள ஒரு யூனியன் பஞ்சாயத்தில் மொத்த மெம்பர்களில் நாலிலொரு பாகத்துக்கு அதிகப்படாத மெம்பர்களை ஜனங்கள் எலெக்ஷன் செய்யலாமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள். ஆனல் செங்கற்பட்டு, தஞ்சாவூர், கோயமுத்தூர், சேலம் இவைகள் முற்பட்ட ஜில்லாக்களான படியால், இவைகளில் டிஸ்டிரிக்ட் போர்ட் ப்ரஸிடெண்ட் அபிப்பிராயப்பட்டால் இரண்டு யூனியன்களில் இப்படிச்செய்து பார்க்கலாம்; நீலகிரி ஜில்லாவிலும் தென் கன்னட ஜில்லாவிலும் லோக்கல் பண்டு யூனியன் இல்லை; வடக்கே கோரப்பட்டு ஜில்லாவில் ஜய்ப்பூர் யூனியனைத் தவிர வேறு யூனிய'னில்லை; ஆகையால் இந்த ஜில்லாக்களில் இந்த விஷயத்தை கவனிக்க வேண்டியதில்லை. சில ஜில்லாக்களில் மெம்பர்களில் நாலிலொருபாகத்தை எலெக்ஷன் செய்வது அதிகமாயிருக்குமானல் அதைக் குறைக்கவும், சில ஜில்லாக்களில் நாலினல் வகுக்க முடியாத மொத்த மெம்பர்கள் யூனியனில் இருக்கும்போது நாலிலொரு பாகத்தோடு ஒரு மெம்பரைச் சேர்த்து எலெக்ஷன் செய்யவும் டிஸடிரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்ட் சிபார்சு செய்தால் அதைக் கவர்ன்மெண்ட் கவனிப்பார்கள். இப்படி எலெக்ஷன் செய்வதற்காக ரூல்கள் தயார் செய்து அவைகளைப்பற்றி ஜனங்கள் அபிப்பிராயப்படவும் டிஸ்டிரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்ட்களின் பார்வைக்கும் பிரசுரம் செய்யப்படும். இந்த ரூல்களில் எலெக்ஷன் செய்வோருக்கும் எலெக்ஷன் செய்யப்படும் அபேட்சகர்களுக்கும் குறிக்கப்பட்டிருக்கும் சொத்தின் யோக்கியதையைப்பற்றி ப்ரெஸிடெண்ட்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். இந்த யோக்கியதையினல் எலெக்ஷன் செய்வோராவது அபேட்சகர்களாவது எண்ணிக்கையில் ஜாஸ்தியாகும் பட்சத்தில் அந்த யோக்கியதையை உயர்த்தலாமோவென்று அவர்களுடைய அபிப்ராயம் தெரிவிக்க வேண்டும். நவம்பர் மாசம் 30-ந் தேதிக்குள் இந்த உத்தரவுக்குப் ப்ரெஸிடெண்ட்கள் பதில் அனுப்ப வேண்டும்.

## CENSUS OF INDIA.

### இந்தியாவின் ஜனத்தொகை.—

| | மொத்தம். |
|---|---|
| இந்தியா .. .. | 315,132,537 |
| மாகாணங்கள் .. .. | 244,267,542 |
| ஆஜ்மீர் மீர்வாரா .. | 501,395 |
| அந்தமான் தீவுகள் .. | 26,469 |
| பெலுசிஸ்தான் .. .. | 414,412 |
| பெங்காளம் .. .. | 52,668,269 |
| பம்பாய் இராஜானி .. | 19,672,642 |
| பம்பாய் .. .. | 16,113,042 |
| ஸிந்து .. .. | 3,513,435 |
| ஏடன் .. .. | 46,165 |
| பர்மா .. .. | 12,115,217 |
| மத்தியமாஹாணங்கள், .. | 13,916,308 |
| கூர்க் .. .. | 174,976 |
| கீழ் வங்காளமும் ஆஸாமும் .. | 34,018,527 |
| சென்னை .. .. | 41,405,404 |
| வடமேற்கு பிரண்டியர் .. | 2,196,933 |

### ஜில்லாக்களும், ஆளப்படும் பிரதேசங்களும்.

| | |
|---|---|
| பஞ்சாப் .. .. | 19,971,956 |
| ஐக்கிய மாஹாணங்கள் .. | 47,182,044 |
| ஆக்ரா .. .. | 34,624,040 |
| ஔட் .. .. | 12,588,014 |
| ஸ்டேட்களும், ஏஜன்ஸிகளும் .. | 70,864,995 |
| பெலுசிஸ்தான் .. .. | 396,432 |
| பரோடா .. .. | 2,032,798 |
| பெங்கால் .. .. | 4,538,161 |
| பம்பாய் .. .. | 7,411,675 |
| மத்திய இந்தியா .. | 9,356,980 |
| மத்திய மாஹாணங்கள் .. | 2,117,002 |
| கீழ்வங்காளமும், ஆஸாமும் .. | 575,835 |
| ஹைதராபாத் .. .. | 13,374,676 |
| காஷ்மீர் .. .. | 3,158,126 |
| சென்னை .. .. | 4,811,841 |
| கொச்சி .. .. | 918,110 |
| திருவாங்கூர் .. .. | 3,428,975 |
| மைசூர் .. .. | 5,806,193 |
| தென்மேற்கு பிராண்டியர் .. | 1,622,094 |

### ஏஜென்ஸிகளும், உட்பிரிவுகளும்.

| | |
|---|---|
| பஞ்சாப் .. .. | 4,212,794 |
| ராஜபுத்தான் .. .. | 10,530,432 |
| ஸிக்கிம் .. .. | 87,920 |
| ஐக்கிய மாஹாணம் .. | 882,036 |

இந்த 315,132,537 பேர்களில், 161,326,110 புருஷர்கள், 153,806,427 ஸ்திரீகள், 1901 வருஷ ஜனத்தொகையின் 294,361,056 பேர்களில் 149,951,824 பேர்கள் புருஷர்கள், 144409232 ஸ்திரீகள்.

## FOREIGN NEWS.
## அந்நியநாட்டு ஸமாசாரங்கள்.

A MILKING MACHINE.

**பால் கறக்கும் யந்திரம்.**—ஸ்வீடன் தேசத்துள்ள ஒரு இஞ்சினீ. பசுவிற்கு ஒரு தீமையுமுண்டாகாமல்படி பால் கறக்கும் யந்திர மொன்றைக்கண்டு பிடித்திருக்கிறார்.

EXPORT OF DEER HORNS.

**மான்கொம்பு ஏற்றுமதி.**—லங்கையிலிருந்து 7 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மான்கொம்புகள் அன்னிய தேசங்களுக்குச் சென்ற ஜூலை மாதத்தோடு முடிவான ஒரு வருஷத்தில் ஏற்றுமதியாயினவாம்.

AN OLD WOMAN'S FATE.

**ஒரு கிழவி கதி.**—ருஷியா தேசத்தைச் சேர்ந்த ஓரன்பர்க் என்னும் மாகாணத்தில் பஞ்சமுண்டாகி அகவிலை குறைந்து ஜனங்களுக்குக் கஷ்டம் நேர்ந்ததாம். இதற்குக்காரணம் பிடாரியைப்போலிருக்கும் இந்தக் கிழவிதான் என்று எல்லோருங்கூடி ஒரு கிழவியை அடித்துக் கொன்றுவிட்டார்களாம்.

THE BIGGEST HOTEL IN THE WORLD.

**உலகில் பெரிய போசனசாலை.**—உலகிலுள்ள போசனசாலைகளிலெல்லாம் பெரியது பெர்லின் மிருக காட்சித்தோட்டத்திலுள்ளது. ஒரே கூரையின் கீழ் ஏககாலத்தில் 10,000 பேர் அங்கே போசனஞ் செய்யக்கூடிய வஸதி ஏற்பட்டிருக்கிறது. 500 பரிசாரகரும் 1,000 உதவியாட்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

DEATH IN JAPANESE HOUSES.

**ஜப்பான் குடும்பங்களில் சாவுகள்.**—ஜப்பானியர்கள் தங்கள் குடும்பத்தில் மரணம் நேர்ந்தால் கூலிக்கு அழுபவர்களைக்கொண்டு ஸகல உத்திரக் கிரியைகளையும் செய்துகொள்வது வழக்கமாம். துக்கத்தில் சம்பந்தப்பட்ட நெருங்கிய பந்துக்கள் இறந்த தினத்திலேயே காப்பிக் கடைகளிற் போய் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டு காப்பியருந்துவார்களாம்.

UNDER GROUND RAILWAYS.

**பூமிக்குள் ரெயில்.**—லண்டன் நகரில் பூமிக்குள் ரெயிலோடுகிறது. பாதாளத்திலிருந்து பிரயாணிகள் மேலே வரவேண்டுமானால் மனிதனை இழுத்துக் கொண்டுவரும் ஒருவித யந்திர சகாயத்தைக்கொண்டு மேலேறவேண்டும். இப்படி ஏறுவதில் அதிக நேரமாகிறதென்று யோசித்து இப்போது நூதன யந்திமென்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாயுள்ள ஏணி ஒன்று அந்த இடத்தில் சுற்றிக்கொண்டேஇருக்கும். பூமியை யடைய விரும்புவோன் அந்த ஏணியின் படியில் காலைவைப்பபானேயானால் உடனே நிலத்தையடையலாம்.

COTTON FARM.

**பருத்திப்பண்ணை.**—இங்கிலாந்திலுள்ள மான்செஸ்டர் நகரத்தின் நெசவு வியாபாரிகள் தங்களுக்கு வேண்டிய மெல்லிய நூல் நூற்கும் நீண்ட இழையுள்ள பஞ்சு அகப்படாத காரணத்தால், தாங்களே மேன்மையான பருத்தி தினுசுகளைப் பயிரிட எண்ணி, அமெரிக்காவில் மிஸிஸிபி நதி தீரத்தில் 30,000 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள பருத்திக் கொல்லைகளை விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். இனி இந்தியாவில் ஸாகுபடியாகும் பருத்திக்கு விலை குறைவாகும் என்று நினைக்க ஹேதுவுண்டாகிறது. இனி பருத்தியின் அபிவிர்த்தியில் ஆங்கிலேய வியாபாரிளுக்கு சிரத்தை குறைந்துவிடும்.—கிருஷிகன்.

TAX COLLECTING IN HOLLAND.

**டச்சுக்காரரின் வரி வசூல் வகை.**—டச்சுக்கார இருக்கும் ஹாலந்துதேசத்தில் வரிவசூலிக்கும் வகை வெகு விநோதமாயிருக்கிறது. வரி கொடுக்கவேண்டியது இவ்வளவு என்று குறிப்பிட்டு வீட்டுச்சொந்தக்காரனுக்கு முதன் முதல் நோட்டீஸ் கொடுக்கப்படுகிறதாம். அந்தநோட்டீஸில் இத்தனை தினங்களுக்குள் வரியைச்செலுத்திவிட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம். அதன் பிறகு கூட சொந்தக்காரர் அதிகாரிகளுக்குக் கொடுக்கவேண்டிய வரியைச்செலுத்தாமலிருப்பாரானால் உடனே அதிகாரிகள் இரண்டொரு ராணுவஸ்தர்களை அவர்கள் வீட்டில் கொண்டுவந்து காவல் வைத்து விடுகிறார்கள். வரிப் பணம் அதிகாரிகளிடம் சேரும் பரியந்தம் அந் ராணுவஸ்தர்களுக்கு வீட்டுச் சொந்தக்காரன் சோ போட்டு ஸம்ரக்ஷிக்க வேண்டுமாம். இதுவும் ஒ யுக்தமான வழிதான்.

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலைவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்றுசொல்லப்படும் வர்த்தக சங்கத்தாரின் அக்டோபர் மாஸம் 25௳ ரிப்போர்ட்டுப்படி.

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | | ரூ. அ. பை |
|---|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | | 13 முதல் 16 |
| கொன்னைப்பட்டை ஷை | | 11 முதல் 12 |
| கடப்பை கடுக்காய் ஷை | | 10 முதல் 11 |
| சேலம் அரசகிரிஷை ஷை | | 15 முதல் 17 |
| நல்லெண்ணெய் ஷை | | 105 முதல் 110 |
| புங்கம் எண்ணெய் ஷை | | 65 முதல் 95 |
| எட்டிக்கொட்டை ஷை | | 15 முதல் 16 |
| விளக்கெண்ணெய் ஷை | | 78 முதல் 79 |
| கொட்டை முத்து | .. | $10\frac{3}{4}$ முதல் 11 |

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| ..ந்தர் பச்சை அரிசி 44 படி | | 8 | 8 | 0 |
| ..ல்லூர் அரிசி 31 படி | .. | 6 | 10 | 0 |
| ..கா துமை 4 படி | .. | 1 | 0 | 0 |
| ..காள்ளு 195 ராத்தல் | | $6\frac{3}{4}$ | | |
| ..வங்காயம்(தாட்பத்திரி)பாரம் | .. | 16 | | |
| ஷை (பல்லாரி) ஷை | .. | 11 | 0 | 0 |
| ..கஞர் உருளைக்கிழங்கு | | 20 | 0 | 0 |

..ETALS—உலோகங்கள்.

| | | |
|---|---|---|
| ..த்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷும் ..த்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் | .. | ரூ. 200 முதல் 202 |
| ..சப்புத் தகடுகள் பாரம் | .. | 245 |
| ..சப்புக்கட்டி ஷை | .. | 220 |
| ..ாகம் ஷை | | 82 |
| ஷை (உள்ளூர்) ஷை | .. | 85 |
| ஈயம் ஷை | .. | 58 |
| காரீயம் ஷை | .. | 60 முதல் 62 |
| வெள்ளீயம் ஷை | .. | 190 வராகன். |

IRON—இரும்பு.

| | | | |
|---|---|---|---|
| மருக்கி சட்டம் 2 நெ. | | பாரம் ரூ. | $19\frac{3}{4}$—20 |
| சீமை | .. | .. .. | 40 |
| மருக்கி தகடு | 6—9, 12—13, | | 24—37 |
| பீப்பாய்க் கட்டு | .. | .. | 27—28 |
| 8 பட்டை எஃகு | .. | .. | 23 |
| எஃகு வில்கட்டு | .. | .. | 27—31 |
| திராணக் கம்பி மருக்கி 2 நெ. | | .. | 21 |
| சீமை | .. | .. .. | 40-46-49 |

## SEASON.

## காலஸ்திதி.

RAINFALL.

**மழை.**—1911௵ ஏப்ரல் ௴ 1-உயிலிருந்து நவம்பர் 1௳ வரையில் பெய்த மழை அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 30.82 | 41·51 |
| வால்டேர் | 17·68 | 35·42 |
| காக்கிஞடா | 24·52 | 32·40 |
| மசூலிப்பட்டணம் | 28·38 | 33·96 |
| நெல்லூர் | 20·54 | 20·76 |
| மதராஸ் | 17·47 | 29·95 |
| கூடலூர் | 21·65 | 30·27 |
| நாகப்பட்டணம் | 16.72 | 25·09 |
| பாம்பன் | 7·04 | 14·46 |
| கொழும்பு | 40·89 | 60·39 |
| திருவநந்தபுரம் | 46·11 | 51·67 |
| கொச்சி | 100·41 | 103·87 |
| கள்ளிக்கோட்டை | 94·46 | 108·77 |
| மங்களூர் | 97·24 | 120·88 |
| மெர்க்காரா | 134·89 | 120·81 |
| ஐதராபாத் | 19·94 | 29·27 |
| ரெய்ச்சூர் | 18·69 | 29·42 |
| பல்லாரி | 12·57 | 17·52 |
| கர்நூல் | 17·53 | 26·56 |
| கடப்பை | 21·10 | 27·50 |
| ஹாஸ்ஸான் | 30·90 | 31·85 |
| பெங்களூர் | 27·20 | 30·73 |
| கொடைக்கானல் | 45.80 | 42·09 |
| உதகமண்டலம் | 50·45 | .. |
| கோயம்புத்தூர் | 19·09 | 15·34 |
| வேலூர் | 22·32 | .. |
| சேலம் | 21·91 | 34·23 |
| திருச்சிஞப்பள்ளி | 20·88 | 23·42 |
| புதுக்கோட்டை | 3·29 | .. |
| மதுரை | 19·83 | 25·86 |
| திருநெல்வேலி | 8·76 | 13·76 |